janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakththitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakththitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஆகஸ்ட் 21 - ஆகஸ்ட் 27 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 20




**சுதந்திரத்தை அச்சுறுத்துவது எது?**

தேசம் 75வது சுதந்திர தினத்தைத் கொண்டாடி வருகிறது. இந்தச் சூழலில் பிரிட்டிஷாருக்கு விசுவாசமாக இருந்த >>> ப 08




**முத்திரை பதித்திட்ட மாநில 25வது மாநாடு**

நமது கட்சியின் மாநில 25வது மாநாடு வரலாற்று சிறப்புமிக்க, முத்திரை பதித்திட்ட மாநாடு என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு >>> ப 02



**ஆணவப் பேச்சை அடக்குவோம்!**

அதிகார போதையில் ஆணவத்தின் உச்சத்தில் நின்று கொண்டு பி.எஸ்.என்.எல். ஊழியர்களை மிரட்டுகிறார் அத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்னவ். >>> ப 03



## தோழர் இரா.நல்லகண்ணுவுக்கு

# ‘தகைசால் தமிழர்’ விருது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்



சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சுதந்திர தினமான ஆக.15 அன்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து, பல்வேறு விருதுகளை வழங்கினார். இந்த ஆண்டுக்கான தகைசால் தமிழர் விருதுக்கான ரூ.10 லட்சம் காசோலை மற்றும் பாராட்டு பத்திரத்தை இரா.நல்லகண்ணுவிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதை பெற்றுக்கொண்ட இரா. நல்லகண்ணு, ரூ.5 ஆயிரத்துக்கான காசோலையை சேர்த்து ரூ.10 லட்சத்து 5 ஆயிரமாக முதல்வரிடம் கொடுத்தார். முதல்வர் பொது நிவாரண நிதிக்கு இந்த தொகையை தருவதாக அவர் தெரிவித்தார்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சுதந்திர தின வாழ்த்துகள்

**நாட்டின் 75வது சுதந்திர தின விழா கொண்டாடப்படும் இத்தருணத்தில் நாட்டு மக்கள் அனைவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது சுதந்திர தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.**

விடுதலை போர்க்கால விழுமியங்களையும், அதன் மகத்தான போராட்ட நினைவுகளையும் கட்சி உயர்வாக போற்றி மதிக்கிறது, நினைவு கூர்கிறது.

உலகில் வேறெங்கும் நடைபெறாத, விடுதலை போராட்ட முறை, ஆயுத போராட்டம், அகிம்சை முறை போராட்டம் என இந்தியாவில் தான் நடந்தேறியது. ஒன்றின் குறியீடு மகாத்மா காந்தி என்றால் பிறிதொன்றின் குறியீடு பகத் சிங், சுபாஷ்சந்திர போஸ், கதார் இயக்கம், கம்யூனிஸ்ட் இயக்கம்.

சுதந்திர இந்தியாவில் டாக்டர் அம்பேத்கர் தலைமையிலான அரசியல் நிர்ணய சபை இந்தியாவிற்கான திசை வழியை காட்டியது.

முதல் பிரதமர் நேரு, நவீன இந்தியாவிற்கான அடித் தளங்களுக்கு திட்டமிட்டார். ஐந்தாண்டு திட்டமுறை, விண்வெளி ஆய்வு, அறிவியல் ஆராய்ச்சி, நாடு முன்னேற்றங்களை துவக்கியது.

நமது அறிஞர்கள், வல்லுனர்கள், கல்வியாளர்கள், மருத்துவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என அனைவரின் கடும் உழைப்பால், சிந்தனையால் நாடு முன்னேற்றங்களை எட்டுகிறது.

எனினும், மறுபுறம், இந்தியாவின் மிகச் சிறந்த பன்முகமும், மதச்சார்பின்மையும் நெருக்கடிக்குள்ளாகி விட்டது. அரசியல் சாசனம் மீறப்படுகிறது. நாடாளுமன்ற ஜனநாயகம் கூச்சல் குழப்பங்களால், கை உயர்த்தும், குரல் வாக்கெடுப்புகளால் மதிப்பிழக்கிறது.

நாட்டின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றிய பொதுத்துறை திட்டமிட்டு அடித்து நொறுக்கப்படுகிறது. தொழிலாளர்கள் போராடிப் பெற்ற உரிமைகள் பறிக்கப்படுகிறது.

தலித், பழங்குடிகள், சிறுபான்மையினர் மீதான அச்சசூழல் நீடிக்கிறது. மதநல்லிணக்கம், ஒற்றுமை உணர்வுகளை சிதைக்கும் கருத்துக்கள் தூண்டப்படுகிறது.

கருத்து சுதந்திரம் பறிக்கப்படுகிறது. நாடு கடந்த பெரும் நிறுவனங்களின் மூலதன படையெடுப்பு தொடர்கிறது. நமது தற்சார்பு அழிகிறது. சிறு, குறு, நடுத்தர தொழில்கள் முற்றிலும் அழியத் துவங்கி விட்டது. வறுமை, வேலையின்மை அதிகரித்து, வாழ்வுரிமைக்காக புலம் பெயர்வோர் எண்ணிக்கை கூடுகிறது. பணக்காரர் களுக்கும், ஏழைகளுக்குமான இடைவெளி அதிகரித்த வண்ணமுள்ளது.

ஒன்றியத்தில் அதிகாரம் குவிக்கப்படுகிறது, மாநிலங்களுக்கான அதிகார பரவலையும் கூட்டிசைவையும் ஒன்றிய அரசு அலட்சியப்படுத்துகிறது.

இத்தருணத்தில், முன் எப்போதுமில்லாத வகையில் நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டை உயர்த்தி பிடிப்போம். பன்முகம், மதச்சார்பின்மை, அரசியல் சாசனம் பாதுகாப்போம்

விடுதலை போர்க்கால விழுமியங்களை உயர்த்திப் பிடிப்போம். அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துகள்.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸட் கட்சியின் மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

## ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை கண்டித்து

# ஆகஸ்ட் 30ல் மாநிலம் தழுவிய மறியல் போராட்டம்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநில மாநாடு அறைகூவல்

பாஜக ஒன்றிய அரசு விலைவாசி நிலவரத்தை கட்டுப்படுத்துவதில் படுதோல்வி அடைந்துள்ளது. கடந்த 8 ஆண்டுகளில் இல்லாத அளவில் அனைத்து அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளும் கடுமையாக உயர்ந்துள்ளன. சாதாரண சாலையோரக் கடைகளில் விற்கப்படும் இட்லி விலை 7 ரூபாயிலிருந்து 12 ரூபாய் என அதிகரித்துள்ளது. உயர்தர உணவகங்களில் விலையுடன் சேர்த்து ஜிஎஸ்டி வரியும் வசூலிக்கப்படுகிறது. அண்மையில் அரிசி மாவு, தயிர், வெண்ணெய், நெய் போன்ற உணவுப் பொருட்கள் மீது ஜிஎஸ்டி வரி விதித்து வசூலிக்கிறது. ஈமசடங்கு செய்யும் மயானச் செலவின் மீதும் ஜிஎஸ்டி வரி விதித்துள்ளது. ஒன்றிய அரசு மருந்து பொருட்களின் விலையை 10 சதவீதம் உயர்த்தியது.

பெட்ரோல், டீசல் விலைகளை தொடர்ந்து நாள்தோறும் உயர்த்தி வருவதன் மூலம் 2014 ஆம் ஆண்டிலிருந்து, இதுவரை மக்கள் கையிலிருந்து 27 லட்சம் கோடி ரூபாயை எடுத்துள்ளது.

வரலாறு காணாத விலை உயர்வால் மக்கள் வாழ்க்கை தரம் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளது. வேலையிழப்பும், வருமானக் குறைவும் மக்கள் வாழ்வை தாக்கியிருக்கும் நிலையிலும், அம்பானி, அதானி குழும நிறுவனங்கள் பெரும் செல்வக்குவிப்பை பெற்றுள்ளன. விலைவாசி நிலவரத்தை சீராக நிலை நிறுத்தி, மக்கள் வாழ்க்கை தரத்தை பாதுகாப்பதில், மோடியின் பாஜக ஒன்றிய அரசு படுதோல்வி அடைந்துள்ளது.

மறுபக்கம் மின்சார சட்ட திருத்த மசோதவை நிறைவேற்றி, மின் விநியோகத்தை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வழங்க வழி செய்துள்ளது. இதன் மூலம் விவசாயிகள் பெற்று வரும் இலவச மின்சாரம் உள்பட மின் கட்டண மானியங்கள் முற்றிலுமாக ரத்து செய்யப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இவை போன்ற மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்து, அவைகளை கைவிட வலியுறுத்தியும், குடும்பங்களின் வாழ்க்கை நெருக்கடி கழுத்தை முறிக்கும் சுமையாகி இருக்கும் போது, தமிழ்நாடு அரசு வீட்டு வரி, சொத்துவரி, மின்கட்டணங்கள் போன்றவற்றை உயர்த்துவதை மறுபரிசீலனை செய்து, வரி உயர்வுகளை ரத்த செய்ய வேண்டும் எனக் கோரியும் வரும் 30.08.2022 ஆம் தேதி செவ்வாய் கிழமை தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடுவது என திருப்பூரில் ஆகஸ்ட் 6 முதல் 9 வரை நடைபெற்ற கட்சியின் மாநில 25வது மாநாடு தீர்மானித்துள்ளது. மாநாட்டு தீர்மானத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும் என கட்சி உறுப்பினர்களையும் அமைப்புகளையும் கேட்டுக் கொள்வதுடன், தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், மாதர், மாணவர், இளைஞர் என அனைத்துத் தரப்பினரும் மறியல் போராட்டத்தில் ஆயிரம் ஆயிரமாய் பங்கேற்குமாறும் நியாயமான போராட்டத்திற்கு பொது மக்கள் அனைவரும் தங்களின் பேராதரவை அளித்திடுமாறும் மாநில மாநாடு கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு மாநாட்டு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

## கட்சிக் கடிதம்



# முத்திரை பதித்திட்ட மாநில 25வது மாநாடு




### பேரன்புமிக்க தோழர்களே!

**நமது கட்சியின் மாநில 25வது மாநாடு வரலாற்று சிறப்புமிக்க, முத்திரை பதித்திட்ட மாநாடு என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது என்றே கருதுகின்றோம்.**

மாநில மாநாட்டை எங்கே நடத்துவது என்று விவாதித்தோம். கிருஷ்ணகிரியில்நடத்தலாம் திருப்பூரில்நடத்தலாம் என்கிற கருத்துக்கள் வந்தபோது, திருப்பூரிலேயே நடத்தலாம் நாங்கள் ஒத்துழைக்கின்றோம் என்று கிருஷ்ணகிரி தோழர்கள் கூறியதை ஏற்று, திருப்பூர் என கிருஷ்ணகிரியில் நடைபெற்ற நமது மாநிலக்குழுக் கூட்டத்தில் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

திருப்பூர் மாவட்ட தோழர்களும் மிகுந்த உற்சாகத்துடன் இம்முடிவை ஏற்றுக் கொண்டார்கள்.

காரணம் இதுநாள் வரை கட்சியின் மாநில மாநாடு என்பது திருப்பூரில் நடைபெற்றது இல்லை முதன் முறையாக திருப்பூரில் நடைபெறுகின்றது. அதுவும் வெள்ளி விழா மாநாட்டை நடத்துகின்ற அரிய வாய்ப்பை பெறுகிறோம் என்கிற பெருமிதத்துடன் உற்சாகமாக மட்டுமல்ல, உணர்வுபூர்வமாக ஏற்றுக் கொண்டார்கள்.

ஏற்றுக் கொண்ட பணியை செவ்வனே முடித்திட விரிவடைந்த வரவேற்புக் குழுவை அமைத்தார்கள். தோழர்.கே.சுப்பராயன் எம்.பி. தலைவராகவும், தோழர்.எம்.ரவியை செயலாளராகக் கொண்ட திருப்பூர் மாநகர், திருப்பூர் புறநகர் ஆகிய இரு மாவட்டங்களும் இணைந்த வரவேற்புக் குழு அமைக்கப்பட்டது.

ஒவ்வொரு பணிகளுக்கும் தனித்தனி குழுக்கள் அமைக்கப்பட்டு, அனைத்துக் குழுக்களும் தங்களுக்கு பணிக்கப்பட்ட பணிகளை தொய்வின்றி மேற்கொண்டு நிறைவேற்றினர்.

**விளம்பரம்:**

மாநாடு நடப்பது குறித்து நமக்கு மட்டுமல்ல, ஊர், உலகத்தார்க்கு தெரிவிப்பது நம் கடமை. அதனை மிகச் சரியாக உணர்ந்து, மாநாடு நடைபெறும் திருப்பூர் நகரில் மட்டுமல்ல புறநகரிலும் சுருக்கமாக சொன்னால் திருப்பூர் மாவட்டம் முழுவதும் சுவர் விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டு செவ்வனே செய்து முடித்திருந்த பாங்கை மாநாட்டிற்கு வருகை தந்த அனைவருமே நன்கறிவோம்.

சுவர் விளம்பரம் மட்டுமின்றி வண்ணமயமான சுவரொட் டிகள் அச்சிட்டு மாவட்டம் முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன.

சிறிய அளவிலான விளம்பர தட்டிகள் தயாரித்து, சாலைகளில் உள்ள மின்கம்பங்கள் அனைத்திலும் கட்டப்பட்டு இருந்தது. மாநாட்டு அழைப்பிதழ், துண்டு பிரசுரங்கள் என பல்லாயிரம் அச்சிட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டன.

திருப்பூர் மாவட்டம் முழுவதும் செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தவண்ணம் இருந்தது. மாநாடு நடைபெறும் இடம் என்று இல்லாது, எங்கெங்கு காணினும் செங்கொடி மயமாக காட்சியளித்தது.

**தலைவர்கள் படம்:**

ஏராளமான டிஜிட்டல் தட்டி விளம்பரங்களில் உலகத் தலைவர்கள், தேசியத் தலைவர்கள் மற்றும் மாநிலத் தலைவர்கள் படங்கள் இடம்பெற்றன. மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் தியாக செம்மல்களான சிந்தனை சிற்பி சிங்காரவேலர், ஜீவா, பி.எஸ்.ஆர்., ப.மாணிக்கம், பாலதண்டாயுதம், பார்வதி கிருஷ்ணன் போன்ற மதிப்புமிக்க தலைவர்களின் படங்கள் நகரையே அலங்கரித்தன.

**தா.பாண்டியன் நகர்:**

மாநாடு நடைபெறும் பகுதிக்கு தா.பாண்டியன் நகர் என பெயர் சூட்டப்பட்டது மட்டுமின்றி, மாநாடு நடைபெறும் பிரம்மாண்ட திருமண மண்டபம் முன்பு அலங்கரிக்கப்பட்டு இருந்தது. செங்கொடிகளும் செந்தோரணங்களும் மட்டுமின்றி தலைவர்கள் படங்களை மிகச் சிறப்பாக அமைத்து இருந்தனர்.

முகப்பில் பகவத்சிங், ராஜகுரு, சுகதேவ் தியாகி சிவராமன், களப்பாள் குப்பு, மாரி மணவாளன் திருப்பூர் பழனிசாமி போன்ற தீயாக சீலர்களின் படங்கள் அமைக்கப்பட்டு இருந்தது.

முகப்பில் வாழைத்தாருடன் கூடிய வாழை மரங்கள் வரிசை கட்டி நின்றன.

**அரங்கம்:**

களை கட்டி நின்ற திருப்பூர் நகரில் தாராபுரம் சாலையில் மாநாடு நடைபெறும் அரங்கத்திற்கு நமது மதிப்பிற்குரிய தோழர்கள் பி.சேதுராமன், டாக்டர் வே.துரைமாணிக்கம் பெயர்கள் சூட்டப்பட்டு இருந்தன.

அரங்கத்தின் நுழைவு பகுதியில் இதுவரை நமது கட்சியின் பொதுச் செயலாளர்களாக பணியாற்றிய மதிப்பிற்குரிய தலைவர்கள் மாநிலச் செயலாளர்கள் படங்கள் வேறுபாடு காழ்ப்புணர்ச்சி இன்றி இடம் பெற்றது.

நமது மதிப்புமிகு தோழர்கள் வி.ராஜ்மோகன், எஸ்.அழகு முத்து பாண்டியன், ஆர்.சுசிலா, ஆர்.ஏ.கோவிந்தராஜ் ஆகிய தோழர்களின் படங்களும் இடம் பெற்று இருந்தன.

**பிரதிநிதிகள்:**

ஆகஸ்ட் ஐந்தாம் நாள் இரவே பிரதிநிதி தோழர்கள் வருகை தர தொடங்கி விட்டனர்.

ஆறாம் தேதி காலை 7 மணி முதல் பிரதிநிதிகளுக்கான அடையாள அட்டை வழங்கும் குழுவில் தோழர்கள் நா.பெரியசாமி (ஒருங்கிணைப்பாளர்), எம்.ஆர்.ரகுநாதன் (அலுவலகச் செயலாளர்), சீ.தினேஷ் (மாணவர் பெருமன்ற செயலாளர்), க.பாரதி (இளைஞர் பெருமன்ற செயலாளர்) ஆகிய தோழர்கள் தங்களது பணிகளை தொடங்கினர்.

பிரதிநிதி தோழர்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் வரிசையில் நின்று வருகை பதிவேட்டில் கையெழுத்திட்டு தங்களுக்குரிய அடையாள அட்டை மற்றும் அறிக்கைகள் வரவேற்பு குழுவால் வழங்கப்பட்ட மிகப் பயனுள்ள பேக் இவைகளை பெற்றுச் சென்றனர்.


**மாநாடு தொடக்கம்:**

மாநாடு தொடங்குவதற்கு முன்னதாக மிகச் சிறப்பான மங்கள இசையை நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வழங்கினார்கள்.

மாநாடு தொடங்குவதற்கு முன்னதாக, கடந்த 24வது மாநாடு நடைபெற்ற மன்னார்குடியில் இருந்து எடுத்து வரப்பட்ட செங்கொடி மற்றும் தியாகிகள் நினைவாக மற்றும் மூத்த

தொடர்ச்சி 15ம் பக்கம் >>





# ஆணவப் பேச்சை அடக்குவோம்!
## பாசிச ஆட்சியை வீழ்த்துவோம்!

- ஆர்.கிருஷ்ணமூர்த்தி
[ஆர்.கே.]

**அதிகார போதையில் ஆணவத்தின் உச்சத்தில் நின்று கொண்டு பி.எஸ்.என்.எல். ஊழியர்களை மிரட்டுகிறார் அத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்னவ்.**

“பி.எஸ்.என்.எல். ஊழியர்கள் 10 மணி, 12 மணி என நேரம் பாராது வேலை செய்ய வேண்டும். ஒழுங்காக வேலை செய்ய வேண்டும்; இல்லையேல் பேக் அப் செய்து வீட்டுக்கு அனுப்பி விடுவேன்” என்று ஆணவமாய்ப் பேசியிருக்கிறார் தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ்.

அமைச்சர் வைஷ்ணவ் அவர்களே! இதைச் சொல்ல வேண்டியவர்கள் நாங்கள்.... பேக் அப் செய்து வீட்டுக்கு அனுப்பப் பட வேண்டியவர்கள் நீங்களும் உங்கள் ஆட்சியும் தான் அமைச்சரே!

மக்களை பிளவுபடுத்தி, வகுப்புவெறியூட்டி, ஏமாற்றி ஆட்சிக்கு வந்து அதில் அமைச்சரானவர் வைஷ்ணவ். ஊழியர்கள் அப்படி அல்ல. 35, 40 ஆண்டுகள் விசுவாசத்தோடு நிறுவனத்திற்காக உழைப்பவர்கள். நீங்கள் என்றைக்கு வேண்டுமானாலும் தூக்கி எறியப்படலாம். இன்னும் 2 ஆண்டுகளில் உங்கள் காலம் முடிந்து விடும்.

பல ஆண்டுகள் தொழிலாளர்களின் உழைப்பால் கட்டப்பட்டு வான் தொட நிற்கும் கட்டுமானங்களை எல்லாம், தேசத்தின் சொத்து அரசுத்துறை, பொதுத்துறை நிறுவனங்களை எல்லாம் நொறுக்கித் தள்ளி தனியாரிடம் தாரை வார்த்து தேசத் துரோகம் செய்து வருகிறது மோடி அரசு. இதற்கெல்லாம் நீங்கள் பதில் சொல்ல வேண்டிய காலம் விரைவில் வரும்.

உபரி ஊழியர்களால் நட்டம், ஊழியர்கள் சரியாக வேலை செய்யாததால் நட்டம் என்ற தவறான கருத்தை நாட்டு மக்களிடையே பரப்புகிறீர்களே! இது மாபாதகப் பொய்! நட்டம் யாரால். உங்களுடைய தரங்கெட்ட ஆட்சி நிர்வாகத்தால். தனியார் மோக வெறியினால். உங்களின் திட்டமிட்ட சதியால்.

வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்தில் 1999 வரை மொபைல் சேவை தனியாருக்கு மட்டுமே தரப்பட்டது. நகரங்களில் தனியார் சேவை, கிராமப் புறங்களில் பி.எஸ்.என்.எல். சேவை என்றெல்லாம் சொல்லப் பட்டது. அன்று துறை அமைச்சராக இருந்த பஸ்வான் அவர்களை என்.எப்.டி.இ. மாநாட்டிற்கு அழைத்து எங்களுக்கும் மொபைல் சேவை தர அனுமதி வேண்டும்: நகரப் பகுதிகளில் நாங்களும் சேவை தருவோம். தனியாரும் கிராமப் பகுதிகளில் சேவை தர கட்டாயப்படுத்தப் பட வேண்டும் என்றோம்! மறுக்கப்பட்டால் வேலை நிறுத்தம் என்று அறிவித்தோம். அதன் விளைவாகவே பி.எஸ்.என்.எல். க்கு மொபைல் சேவை தரப்பட்டது. நகரங்களில் தனியார் சேவை மட்டுமே என்பது வாபஸ் பெறப்பட்டது.

ஏற்கனவே எட்டு தனியார் கம்பெனிகளுக்கு மொபைல் சேவை தரப்பட்ட நிலையில் பி.எஸ்.என்.எல். க்கும் தரப்பட்டது. ஐந்து ஆண்டுகள் கழித்து தரப்பட்டபோதும் தனக்கு முன் இருந்த ஏழு தனியார்க் கம்பெனிகளை பின்னுக்குத் தள்ளி பி.எஸ்.என். எல். இரண்டாம் இடத்தைப் பிடித்தது. இந்த சாதனையைச் செய்தவர்கள் இதே ஊழியர்கள் தான். இது ஆணவ அமைச்சர் அஸ்வினுக்குத் தெரியாது. இப்போதாவது தெரிந்து கொள்ள வேண்டும்.

பி.எஸ்.என்.எல். உட்பட அனைத்து துறைகளினுடைய கட்டுமான உழைப்பின் சொந்தக்காரர்கள் யார்? அத்துறை ஊழியர்கள் தானே! ஆனால் அழிப்பின் சொந்தக்காரர்கள் ஆட்சியாளர்கள் மட்டும் தான். இந்த உண்மையை மறுக்க முடியுமா?

ஆனால் இன்றைக்கு துறையின் நட்டத்திற்கு ஊழியர்களின் செயல்பாடே காரணம் என்ற தவறான, அபாண்டமான பொய்க் கருத்தை நாட்டு மக்களிடையே ஒன்றிய துறை அமைச்சர் மனம் கூசாது பரப்பி வருகிறார். இதைவிட வேறுவகையில் தனியார் சேவைக்கு அவரால் வக்காளத்து வாங்கவே முடியாது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நட்டத்திற்குக் காரணம் உபரி ஊழியர்கள் என்று சொன்னார்கள். கடந்த 2020 ஜனவரி 31 ல் சுமார் எண்பதாயிரம் ஊழியர்கள் கிட்டத்தட்ட 50 சதத்திற்கும் மேலாக விருப்ப ஓய்வு என்ற பெயரில் வெளியே தள்ளப்பட்டார்கள். அறிவு சார்ந்த அமைச்சர் இப்போது சொல்வாரா? ஊழியர்கள் எண்ணிக்கை குறைத்த பிறகு இப்போது நிலைமை சரியாகிவிட்டதா?

மாறாக சேவை மோசமாகி விட்டது. துக்ளக் ஆட்சி நடத்தும் மோடி அரசு இப்போது பி.எஸ்.என்.எல். சேவையைப் புகாரின்றி தருவதற்கு ஊழியர்கள் இன்றித் தடுமாறுகிறது. எக்ஸ்ட்ரேனல் பிளாண்ட், வாடிக்கையாளர் சேவை மையம் போன்ற வேலைகளை எல்லாம் தனியார் ஆட்களை வைத்து குறைந்த சம்பளத்தில் அவுட் சோர்சிங் மூலமாக நடத்திவருகிறது. இதினை விட வெட்கக்கேடு வேறேதும் இருக்க முடியாது.

**சமதளப் போட்டி...**

தனியார்க் கம்பெனிகள் நல்ல சேவை தருவதாக ஜியோ கம்பெனிக்கு பிரதமர் மோடி அம்பாசிடர் வேலை செய்தார். தனியாருக்கு இணையாக சமதளத்தில் வேலை செய்ய பி.எஸ்.என். எல். க்கு தனியாருக்கு இணையான உயர் தொழில் நுட்பம் அதாவது 4ஜி தரப்பட்டதா? ஊழியர்களும், தொழிற்சங்கங்களும் நான்காண்டுகளுக்கும் மேலாகக் கேட்டுப் போராடியும் இன்று வரை தராமல் இழுத்தடிக்கப் படுகிறது. இது மோடி அரசுக்கத் தெரியாதா?

சமீபத்தில் 5ஜி ஏலம் தனியாருக்கு விடப்பட்டது. பி.எஸ்.என். எல். க்கு 5ஜி உண்டா? காலாவதியான பழைய தொழில்நுட்ப 3 ஜியில் தான் தொடரவேண்டும். இப்படி காலம் கடந்த தொழில் நுட்பத்தை வைத்துக் கொண்டு எப்படி பி.எஸ்.என்.எல். தனியாருக்கு இணையான சேவையைத் தரமுடியும்? அறிவார்ந்த அமைச்சரிடம் இதற்கு பதில் உண்டா?



பி.எஸ்.என்.எல். நிறுவனம் 5ஜி ஏலத்தின் பக்கம் நெருங்கக் கூட அனுமதிக்கப்படவில்லையே! ஏன்? இதுதான் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பி.எஸ்.என்.எல். நிறுவனத்தை விஷம் ஊட்டி வளர்க்கும் மோடி அரசின் யோக்கியதை. இது தான் பி.எஸ்.என்.எல். ஐப் புத்தாக்கம் செய்யும் இலட்சணம்.

**5ஜி ஏலம்:**

சக்திமிக்க 5ஜி ஸ்பெக்ட்ரம் மதிப்பு 4.3 லட்சம் கோடி ரூபாய். ஆகவே ஏலத்தில் ஐந்து லட்சம் கோடி ரூபாய் வரை எதிர்பார்க்கப்படுகிறது. இப்படிச் சொல்லியது நாமல்ல. ஒன்றிய அரசுதான் கூறியது. ஆனால் ஏலத்தில் என்ன நடந்தது? 1.53 லட்சம் கோடி ரூபாய்க்குத் தான் ஏலம் போனது.

இங்கே ஒரு விஷயத்தை ஆணவ அமைச்சர் அஸ்வினுக்கு தெரியப்படுத்த வேண்டும். கடந்த 12,13 ஆண்டுகளுக்கு முன் நடந்த 2 ஜி ஏலத்தில் 1.76 லட்சம் கோடி நட்டம். ஊழலோ ஊழல் என வாய்கிழியக் கூச்சலிட்டு அதையே திரும்பத் திரும்ப சொல்லி ஆட்சியையும் பிடித்தது பாசிச பாஜக.

ஆனால் இன்று அரசு எதிர்பார்த்த 5 லட்சம் கோடி ரூபாய் எங்கே? ஏலம் போன 1.53 லட்சம் கோடி ரூபாய் எங்கே? மூன்றரை லட்சம் கோடி ரூபாய் எங்கே பதுங்கியது? இது நட்டமா? அல்லது ஊழலா? நிச்சயம் ஊழலாகத் தானே இருக்க முடியும். . இது எப்படி நடந்தது? ஏலம் எடுத்த அம்பானி, அதானி கம்பெனிக்குள்ளே உடன்பாடு. அரசுக்கும் ஏலத்தில் பங்கேற்ற கம்பெனிகளுக்குமான உடன்பாடு. எல்லாம் சிதம்பர ரகசியம் தான்.

**வேலை நேரம்:**

போராடிப் பெற்ற உரிமை. எட்டு மணி வேலை இன்டர்நேஷனல் லேபர் ஆர்கனைசேஷன் உறுதிப்படுத்தியிருக்கிற உரிமை. அதனைப் பறிக்க அமைச்சர் அஸ்வினுக்கு எந்த உரிமையும் கிடையாது.

**பி.எஸ்.என்.எல். சொத்து:**

கேபிள், பிசிஎம், மைக்ரோவேவ் டவர் என ஏராளமான பி.எஸ்.என்.எல். க்குச் சொந்தமான சொத்துக்கள் நாடு முழுமையும் பரவிக் கிடக்கிறது. பி.எஸ்.என்.எல். வசம் மட்டும் 60,000 டவர்கள் உள்ளன.

பி.எஸ்.என்.எல். மற்றும் எம்.டி.என்.எல். சொத்துக்களை எல்லாம் சிறுகச் சிறுக விற்பனை செய்ய திட்டம் என்கிறது அரசு. சுமார் 15,000 டவர்களை உடனடியாகத் தனியாருக்கு தாரை வார்க்கப் போகிறது ஒன்றிய அரசு. தனியார்க் கம்பெனிகளிடம் டவரே கிடையாத போது மோடி அரசு அவர்களுக்கு விற்று உதவப் போகிறது. அது மட்டுமல்ல. டவர்களைக் கொடுத்து விட்டு பி.எஸ்.என்.எல். சேவை தர பணம் கொடுத்து அவர்களிடமிருந்து டவர் சேவை பெறவேண்டும்.

இங்கே கொஞ்சம் சிந்திக்க வேண்டும். இப்படி விற்பனை செய்யும் பணமெல்லாம் பி.எஸ்.என்.எல். க்குக் கொடுக்கப்படுமா? என்றால் அப்படி எதுவும் இல்லை. அது அரசிற்கான வருமானமாம். அப்படியென்றால் இந்த சொத்துக்கள் எல்லாம் யாருடையது? பி.எஸ்.என்.எல்.க்குச் சொந்தமானது அல்லவா?

தொழிலாளர்கள் உயிரைக் கொடுத்து உழைத்து உருவாக்கிய டவர்களை விற்க இவர்கள் யார்? நோக்கம் என்ன? இன்று இடங்கள், டவர்கள், கேபிள் வழிப்பாதைகள் என ஒவ்வொன்றாக கார்ப்பரேட் நண்பர்கள் அம்பானி, அதானி களுக்குத் தாரை வார்த்து இறுதியில் பி.எஸ்.என்.எல். நிறுவனத்தையே தாரை வார்ப்பது என்பதுதான் பாசிச மோடி அரசின் திட்டம்.

**எச்சரிக்கை:**

பி.எஸ்.என்.எல். கற்கும் செயலிழந்த 3 ஜி. தனியார் கம்பெனிகளுக்கு சக்திமிக்க 5ஜி. எப்படி பி.எஸ்.என்.எல். தனியார் கம்பெனிகளோடு போட்டிபோடும்? இது கூடப் புரியாத உங்களைத் தான் முதலில் பேக் அப் செய்ய வேண்டும்.

பி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் இறக்கைகளை பிய்த்து எறிந்து விட்டு அது சுதந்திரமாக பறக்க வேண்டும் என்றால் அது எப்படி? கால்களை கட்டி விட்டு பி.எஸ்.என்.எல். தனியாரோடு போட்டியில் ஓட வேண்டும் என்றால் அது எப்படி?

இப்போது சொல்லுங்கள்! பேக் செய்து வீட்டுக்கு அனுப்ப வேண்டியது உங்களையா? ஊழியர்களையா? பாசிச மோடி அரசை வீட்டுக்கு அனுப்பாது பி.எஸ்.என்.எல். மட்டும் அல்ல: பொதுத்துறைகள் காத்திட முடியாது!

பி.எஸ்.என்.எல். ஊழியர்களை மிரட்டுவதற்கு அவர் ஆண்டானும் அல்ல. ஊழியர்கள் அடிமையும் அல்ல.

தொழிலாளி கரத்தால் கருத்தால் உழைத்துப்பிழைப்பவன்தான். ஆனால் கை நீட்டி பிச்சையெடுத்துப் பிழைப்பவன் அல்ல. தன்மானம் மிக்கவன் தொழிலாளி. இதை இன்றல்ல என்றைக்கோ எச்சரித்த வர்க்கம் தொழிலாளர் வர்க்கம். உழைத்துப் பிழைக்கும் ஊழியர்களின் தன்மானத்தை அமைச்சர் அஸ்வினோ, பாசிச மோடி அரசோ அதிகார பலம் கொண்டு, ஆணவத்தின் உச்சத்தில் நின்று தொடக்கூட முடியாது.

எதற்காகவும் தன்மானத்தை தொழிலாளிவர்க்கம் விற்காது, விட்டும் கொடுக்காது. ஆணவத்தை அழித்தொழிக்கும் சக்தி மிக்க கூட்டம் தொழிலாளர் வர்க்கம்.

ஆணவம் வென்றதாக வரலாறு இல்லை. தொழிலாளி வர்க்கம் தோற்றதாக வரலாறு என்றும் இல்லை.

தொழிலாளர்களின் மிரட்டுவதும் எரிமலையைத் தோண்டுவதும் ஒன்றுதான்.

தொழிலாளி வர்க்கமே! அமைச்சரின் ஆணவப் பேச்சு நமது ஒட்டுமொத்த வர்க்கத்திற்கு எதிரான சவால்.. ஓரணியில் திரண்டு அமைச்சரின் ஆணவத்தை கண்டிப்போம்!

பாசிச அரசுக்குத் தகுந்த பாடம் புகட்டுவோம்!

சவால்களை சந்திப்போம்!

பொங்கி எழுவோம்!

பாசிசம் பொசுக்கி எரிப்போம்!

தொடர்புக்கு: 9444956694

# மகாராஜபுரம் ராஜேஸ்வரி அம்மையார் மறைவு



## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெருமைக்குரிய குடும்பத்தை சேர்ந்த மகாராஜபுரம் திருமதி.ராஜேஸ்வரி அம்மையார் (80) ஆக. 11 அன்று விருதுநகர் மாவட்டம், மகாராஜபுரத்தில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகாராஜபுரத்தில் நல்ல வசதியுள்ள விவசாயக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்ட திருமதி.ராஜேஸ்வரி அம்மையார் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடி, மறைந்த தலைவர் தோழர்.ஏ.வெங்கிடுசாமியின் வாழ்விணையர், சிவகாசி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.வி.அழகிரிசாமியும், மூன்று மகளும் இருக்கின்றனர். கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப காலத்தில் கடுமையான அடக்குமுறையை எதிர்கொண்டு, கட்சியை பாதுகாத்து, வளர்ச்சிக்கு பங்களிப்பு செலுத்திய குடும்பத்தை வழிநடத்தியவர் ராஜேஸ்வரி அம்மையார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜேஸ்வரி அம்மையாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

**தலைவர்கள் நேரில் அஞ்சலி**

மாநில கட்டுப்பாட்டுக்குழு தலைவர் கே.சுப்பாராயன் எம்பி, தவிதொச மாநில செயலாளர் நா.பெரியசாமி, க.சந்தானம், எஸ்.குணசேகரன் எக்ஸ் எம்எல்ஏ, தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, பி.லிங்கம் எக்ஸ் எம்பி, சிவகங்கை மாவட்ட செயலாளர் கண்ணகி, காசிவிஸ்வநாதன், காளிதாஸ், தஓவாஇ எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார், இடைக்கமிட்டி செயலாளர்கள் கணேசமூர்த்தி, கோவிந்தன், ஜீவா, சுவாமிநாதன், நடராஜன், சுவாமிநாதன், பலவேசம், செல்வம், முனியசாமி, ஏஐடியுசி சமுத்திரம், ரவி, இளைஞர்மன்ற வழக்கறிஞர் பகத்சிங் மற்றும் சர்வகட்சி பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள், மாநிலகுழு உறுப்பினர்கள் உள்பட ஏராளமானோர் நேரில் வந்து மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 20

## நடிப்புச் சுதேசிகள்!

அடேயப்பா ! தேசபக்திக்கு தான் எத்தனை விளம்பரம் ! கதர் துணியில் தான் இதுவரை தேசியக்கொடி. அந்நியப்பொருள் மறுப்பும், தற்சார்பும் அதில் அடங்கியிருக்கிறது. ஆனால் பாலியஸ்டர் துணியில், அளவு பொருத்தம் இன்றி, அசோகச் சக்கரம் இடம் மாறி, வெளிநாட்டில் அச்சிடப்பட்ட ஏராளமான தேசிய கொடிகள் லட்சக்கணக்கில் இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டன.

தேசத்தை விற்பவர்களுக்கு தேசியக்கொடியும் விற்பனைப் பண்டம் தான் ! நடிப்புச் சுதேசிகள் !

செங்கோட்டையின் மீது ஏறி நின்று 21 குண்டுகள் முழங்க இந்திய பிரதமர் உரையாற்றி இருக்கிறார். 'பாஞ்ச் ப்ராணா'வை (ஐந்து உறுதிமொழிகள்) அறிவித்திருக்கிறார்.

இளைஞர்களே ! இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக முன்னேற்றுங்கள். தேச மேம்பாட்டில் உங்களை அர்ப்பணியுங்கள் என்கிறார் மோடி. அடடே ! எப்படி முன்னேற்றுவது?

கடந்த 45 ஆண்டுகளில் மிக அதிகமான வேலையின்மை இருப்பது மோடியின் ஆட்சியில் தான். ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்புகள் தருகிறேன் என்று அளந்துவிட்ட மோடி, உண்மையில் ஆண்டுக்கு கோடி வேலை வாய்ப்புகளை அழித்துக் கொண்டிருக்கிறார். உழைக்கும் பருவத்தில் வேலையின்றி அல்லலுறும் இளைஞர்கள், தேச மேம்பாட்டுக்காக என்ன செய்ய வேண்டும் என மோடி சொல்லவில்லை.

காலனி ஆட்சியின் சுவடுகள் தெரியாமல் நீக்கி விட வேண்டுமாம். நல்லது. காலனி ஆதிக்கத்தை எதிர்த்து, வெள்ளையர்களை விரட்டியடிக்க இந்திய மக்கள் உயிரைக் கொடுத்து போராடிக் கொண்டிருந்த போது, வெள்ளையர்களின் காலணிகளை துடைத்து தந்து கொண்டிருந்தார்கள் மோடியின் சித்தாந்த முன்னோர்கள்.

பழைய பெருமைகளை எப்படி மீட்டெடுப்பது? அந்தக் காலத்திலேயே எங்களுக்கு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை தெரியும், விநாயகர் உருவத்தை பார். நாங்கள் விமானத்தை கண்டறிந்திருந்தோம், புராணங்களில் புஷ்பக விமானத்தை பார் என்று கதை விட்டுக் கொண்டிருப்பதா..! பழைய பெருமைகளைப் பாதுகாப்பது?

பிறப்பால் ஏற்றத்தாழ்வு என்பதை ஏற்க மறுத்த வெள்ளையர்களின் பழைய முயற்சிகளை சுவடு தெரியாமல் அழித்துவிட்டு, வர்ணாசிரமம் பேசுவது தான் புதிய இந்தியாவுக்கான தேவையா?

இந்தியாவின் மொழிகளை பற்றி பெருமை கொள்ள வேண்டும் என்றார் மோடி. ! யார் எதிர்ப்பார்கள்? சுதந்திர இந்திய விடுதலையின் 75 ஆவது ஆண்டு விழாவை, "அம்ரித் மகோத்ஸவ்" என்று எல்லா மொழிகளிலும் சொன்னது ஏன்? அமுதப் பெருவிழா என்று தமிழில் புரியும்படி சொன்னால் உங்கள் நாக்கு சுளுக்கிக் கொள்ளுமா? மோடி சொல்வது வேறு, செய்வது வேறு !

வேற்றுமையே கூடாதாம், ஒற்றுமை தான் உயர்வாம் ! ஒற்றுமை என்பது இந்தியர்களின் ரத்தத்தில் ஊறிக் கிடக்கிறது. மோடி ஒன்றும் போதிக்க வேண்டியது இல்லை. மோடி சொல்வது ஒற்றுமை அல்ல. ஒருமை. ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே தேர்தல், ஒரே ரேஷன் கார்டு என்ற ஒருமை. பல மொழிகளை பேசி, பல்வேறு பெருமைக்குரிய பண்பாடுகளை கொண்டிருக்கும் இந்த நாட்டை ஒருமைப்படுத்த வேண்டும் என ஆர் எஸ் எஸ் நினைத்தால், அது இந்தியாவை துண்டுபடுத்துமே தவிர, ஒன்று படுத்தாது.

பெண்களைப் போற்றி பாதுகாக்க வேண்டும் என்பதை, வர்ணாசிரம தர்ம வழிநடக்கும் மோடி சொல்வது தான் கொடுமையிலும் கொடுமை ! பெண்கள் கல்வி கற்க கூடாது சொந்தச் சகோதரன், தந்தையுடன் கூட தனியாக இருக்கக் கூடாது என வக்கிரம் பேசும் தத்துவத்தை வியந்து போற்றி சுமந்து கொண்டு இருக்கும் அவருக்கு, மற்றவர்களுக்கு அறிவுரை சொல்வதற்கு என்ன உரிமை இருக்கிறது?

மக்கள் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டுமாம். மின்சாரம், தண்ணீர் எல்லாவற்றையும் சிக்கனமாக செலவு செய்ய வேண்டுமாம். சொல்லும் அவர் அதைக் கடைபிடிப்பாரா? லட்சக்கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ள, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஆடை அணிகலன்களையே எப்போதும் அணிகிறார். மகாத்மா காந்தி போல இடையில் ஒரு துண்டு, தோளில் ஒரு துண்டு என்று மாற வேண்டாம். ஆனால் ஒவ்வொரு அசைவிலும், ஆடம்பரம், வீண் செலவுகள் என அள்ளி இறைக்கும் மோடி முதலில் தன்னை திருத்திக் கொள்ள வேண்டாமா?

பஞ்சத்தில் அடிபட்டு லட்சம் பேர் இறந்த இந்தியாவை, உணவில் தன்னிறைவு கொள்ள வைத்த பழைய பிரதமர்களை பற்றி அவர் ஏதும் பேசவில்லை. உலகின் நான்காவது பெரிய பணக்காரராக அதானி உயர்ந்துள்ள அதே நேரத்தில், உலகில் கடும் பட்டினி நாடுகள் 15 ல் ஒன்றாக இந்தியாவை கொண்டு தள்ளி இருக்கிற தனது ஆட்சியை பற்றிய சுய விமர்சனமும் அவரிடம் இல்லை.

உலகத்தில் பயங்கரமான ஆயுதம், நிலை கெட்டுப்போன நயவஞ் சகனின் நாக்கு தான் !



இளசை கணேசன்

# யாரைப் பார்த்து கொக்கரிப்பு?



**கம்யூனிஸ்ட் கட்சி அனாதை கட்சியாம் !**

தமிழ்நாட்டில் திமுக தயவில் 4 இடங்கள் பெற்றுள்ளதாம் !

போராட்டம் நடத்துங்க பார்ப்போம் ! போராட்ட இடத்திலே அடித்து விரட்டுவோம் !

கம்யூனிஸ்ட் கட்சி உருட்டலுக்கு எல்லாம் நீங்க பயப்படாதீங்க நான் பாத்துக்குறேன் !

இப்படி வாய்க்கொழுப்பு எடுத்து வசைபாடி இருப்பது யார் தெரியுமா?

கைபர், போலன் கணவாய் வழியே ஆடு மாடு ஓட்டிவந்த வந்தேறிகள் !

பெரும்பான்மை மதவாத, வகுப்பு வெறியில் ஜீவித்து வாழும் இந்திய வகை பாசிஸ்டுகள் !

ஜனநாயக விரோதம் ஒற்றை சர்வாதிகாரம் ! ஒற்றை கலாச்சாரம் போன்ற கொள்கையை கொண்டவர்கள் !

ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்பு அணுவளவும் இல்லை ! மாறாக சரணாகதி ஆதரவு !

விடுதலைப் போராட்டத்தில் துளியும் பங்கேற்க வில்லை. மாறாக விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர்கள் !

"ஆங்கிலேய எதிர்ப்பு இயக்கம் அல்ல ஆர்எஸ்எஸ்" என்று பிறக்கும்போதே ஆங்கிலேயே விசுவாசத்தோடு கூவிப் பிறந்தது !

இந்தியாவில் பாசிச அடிப்படையில் இந்துத்துவத்தை கட்டியமைக்கத் துடிப்பவர்கள் !

சந்திரசேகர ஆசாத், பகத்சிங் போன்றோர் புரட்சிக் காரர்கள் இல்லை கலகக்காரர்கள் என்று கொச் சைப்படுத்திய கூட்டம் !

இத்தகைய கூட்டத்தைச் சேர்ந்த ஆர். எஸ். எஸ். அமைப்பின் அரைவேக்காடு எச்.ராஜா என்பவர்தான் அதிகாரத் திமிரில் இப்படி அத்துமீறி உள்ளார்.

இந்த அரைவேக்காட்டுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பற்றி என்ன தெரியும்?

**கருக்கொள்வதற்கு முன்பும்!**

**கருக்கொண்ட போதும்!**

**கருவாகி சிசுவாக வளர்ந்த போதும்!**

**கருவறையில் இருந்து வெளிவந்த போதும்!**

**பிறந்து தவழ்ந்த போதும்!**

**எழுந்து நடந்த போதும்!**

**–அழிக்கத் துடித்தார்கள்!**

லாகூர் சதி வழக்கு, பெஷாவர் சதி வழக்கு, கான்பூர் சதி வழக்கு, மீரட் சதி வழக்கு, சிட்டகாங் சதி வழக்கு

மற்றும் மாவட்டங்கள் பெயரில் சதி வழக்கு என்று அடுக்கடுக்கான சதி வழக்குகள் !

**சதி வழக்குகள்!**

**கட்சி இயங்குவதற்கு தடை!**

**துப்பாக்கி குண்டுகள்!**

**குண்டாந்தடி தாக்குதல்!**

**ஆயுள் தண்டனைகள்!**

**கொட்டடிச் சிறைகள்!**

இப்படி அடக்குமுறைகள் எத்தனை உண்டோ ! அத்தனையையும் எதிர்கொண்டு அடித்து நொறுக்கி முன்னேறிய கட்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி !

அடக்குமுறைகளை அடித்து நொறுக்கி பிறக்கும் போதே...

இந்தியாவுக்கு முழு விடுதலை !

ஆங்கில ஏகாதிபத்தியத்தை இந்தியாவில் இருந்து விரட்டி அடிப்போம் !

நிலப்பிரபுத்துவத்தை தகர்ப்போம் !

ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்போம் !

என்ற முழக்கத்தோடு பிறந்தது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. இதை எவராலும் மறுக்க முடியாது வரலாற்று உண்மை !

**வந்தேறிகளுக்கும் வாய்க்கொழுப்பு எடுத்தவர்களுக்கும் கூட இது நன்கு தெரியும்! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீது ஏவப்பட்ட அடக்குமுறைகள் ஒடுக்குமுறைகள் பாஜக – ஆர்எஸ்எஸ் அமைப்புகளுக்கு ஏற்பட்டால் என்பதை கனவில் கூட கற்பனை செய்து பார்த்திருக்க மாட்டார்கள்!**

வீராதி வீரர், சூராதி சூரர் என்று வர்ணிக்கப்பட்ட இவர்களின் வீரசாவர்க்கர் கொலை வழக்கு ஒன்றில் அந்தமான் சிறையில் அடைக்கப்பட்ட போது ஆங்கில அரசுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வெட்கமில்லாமல் வெளியே வந்தவர் !

அரசியல் அணிச் சேர்க்கை என்று வந்துவிட்டால் யார் தயவிலும் யாருமில்லை என்பது பொருள் !!

அதிகாரபலம், பணபலம், குண்டர்கள் பலம், தேர்தல் தில்லுமுல்லு இவை அத்தனைக்குப் பிறகும் தமிழ்நாட்டில் பாஜக 4 இடங்களில் மட்டுமே வென்றது !

இந்த வெற்றி அதிமுக தயவில் கிடைத்தது என்று சொன்னால் அரைவேக்காடு எச்ச ராஜா ஒத்துக் கொள்வாரா?

பிறக்கும்போதே போராட்டத்தில் புடம்போட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இன்றைக்கும் போராடி வருகிறது !

உழைப்புச் சுரண்டல், வகுப்பு வெறி இரண்டையும் வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்தாமல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம் ஓயாது ! தேர்தல் சந்தையாகவும், வாக்குகள் சரக்காகவும் ஆக்கப்பட்ட கார்ப்பரேட் யுகத்தில் வாக்கு எந்திர தில்லுமுல்லுகள் திணிக்கப்படும் தேர்தல் களத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பின்னடைவை சந்தித்திருக்கலாம்.

பின்னடைவிலிருந்து பாடம் பெற்று பீனிக்ஸ் பறவை போல் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டு எழும். 1984 நாடாளு மன்றத் தேர்தலில் பா.ஜ..க. வெற்றி பெற்ற இடங்கள் இரண்டே இரண்டுதான் என்பதை எச்.ராஜா மறந்து விடக்கூடாது. தேர்தல் போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பின்னடைவை சந்தித்திருந்தாலும் மக்கள் போராட்டத்தில் பிந்தியதாக வரலாறு இல்லை.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரிக்க முடியாத பகுதியான போராட்டத்தை எச்.ராஜா அல்ல, எந்தக் கொம்பாதி கொம்பனாலும் தடுக்க முடியாது !

**யாரும் தடுத்ததாக வரலாறு இல்லை!**

**இனிமேலும் இருக்க முடியாது!**

**தெம்பு இருந்தால்!**

**திராணி இருந்தால்!**

**துணிவு இருந்தால்!**

**ஆண்மை இருந்தால்!**

**தடுத்துப் பார்!**

கட்சி செயல்படாமல் தடை செய்யப்பட்ட போது தலைமறைவு வாழ்க்கையிலும் எங்கள் போராட்டம் நிற்கவில்லை !

உழைக்காத உளுத்தர் கூட்டம் கொழுப்பேறி கொகக் கரிக்கும்போது உழைத்து உழைத்து தழும்பேறிய கைகள் சும்மா பூ பறிக்குமா?

மாஸ்கோவை வீழ்த்துவேன் என்று கொக்கரித்த ஹிட்லர் மாண்டான் !

மாஸ்கோ வீழவில்லை !

உலகமே பயந்த பாசிச ஹிட்லரின் கூலிப் படைகளை ஓட ஓட விரட்டியவர்கள் சோவியத் செஞ்சேனை படைகள்

மறந்து போச்சா எச்ச ராஜா?

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

யாரையும் மிரட்டியதும் இல்லை உருட்டியதும் இல்லை !

யாருடைய மிரட்டலுக்கும் பயந்ததுமில்லை, யாருடைய உருட்டலுக்கும் பயந்ததும் இல்லை !

ஒன்றை மட்டும் உணர்த்துவோம் !

அயோத்தியில் ராமர் கோவிலுக்கு அடிக்கல் நாட்ட இந்தியா முழுவதும் சங்பரிவாரம் செங்கல் யாத்திரை நடத்திய போது !

பைசாபாத் நகரத்தில் நிறுத்துவோம் என்று ஒரு குரல் இந்தியா முழுவதும் கேட்கும் வகையில் ஒலித்தது !

குரல் எழுப்பியவர் தெலுங்கானா போர்ப்படைத் தளபதி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சி.ராஜேஸ்வர ராவ் !

குரலுக்கு செவிமடுத்து மக்களை திரட்டியது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ! அடுத்து வந்த பொதுத்தேர்தலில் அயோத்தியை உள்ளடக்கிய பைசாபாத் தொகுதியில் வென்று காட்டியதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி !

மறந்துவிட வேண்டாம் !

தொண்டை இருக்கிறது என்பதால் கொக்கரிக்க கூடாது !

தொடர்புக்கு: **82204 68816**



பேராசிரியர்
தி. இராசகோபாலன்

# ‘நல்லகண்ணு என்றொரு மானுடம் வாழ்வதும்’

**கலியுகத்தில் சில அதிசயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வாண்டுச் சுதந்திர தின விழாவில் “தகைசால் தமிழர் விருது’ பெரியவர் இரா.நல்லகண்ணுவுக்கு வழங்கப்படுவதே அந்த அதிசய நற்செய்தி !**

“கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்தது’ என மகாகவி பாரதி எந்த உயர்ந்த அர்த்தத்தில் உச்சரித்தானோ, அதே உயர்ந்த அர்த்தத்தில் உச்சரிக்கப்பட வேண்டிய முழக்கம், நல்லகண்ணு என்றொரு மானுடர் வாழ்வதும் என்பதாகும்.

ஸ்ரீவைகுண்டத்தில் 26.12.1925இல் பிறந்தவர் இரா. நல்லகண்ணு. நம்மாழ்வார் பாசுரங்களில் நல்லகண்ணுவுக்கு மிகுந்த பயிற்சி உண்டு. பொதுவுடைமை இயக்கத்தில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டிருக்கிற புனிதர்.

எஸ்டேட்டுக்கு சொந்தக்காரராகிய புபேஷ் குப்தா, குடும்பச் சொத்தைக் கட்சிக்கு எழுதி வைத்தவர். ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட், கோவிந்தப்பிள்ளை போன்ற பல கேரளக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் குடும்ப சொத்துகளைக் கட்சிக்குத் தந்திருக்கிறார்கள். நல்லகண்ணுவுக்கு எண்பதாவது வயதில் வழங்கப்பட்ட ரூ.1 கோடியையும், காரையும் பாலன் இல்லத்துக்கே வழங்கிவிட்டு, இன்றைக்கும் ஆட்டோவில் சென்று கொண்டிருக்கிறார். அவர் வீட்டுக்குச் செல்பவர்கள் கடலை மிட்டாயைத் தவிர வேறு எதைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார். 9 ஆண்டுக் கால சிறைவாசத்தில் அவருக்குக் கிடைத்தது அது ஒன்றே !

காரனேஷன் பள்ளியில் ஸ்ரீவைகுண்டத்தில் பள்ளிப்படிப்பை முடித்த நல்லகண்ணு , திருநெல்வேலியிலுள்ள எம்.டி.டி. இந்துக் கல்லூரியில் இன்டர்மீடியட் வகுப்பில் சேர்கிறார். அங்கு வ.வே.சு. அய்யர், வ.உ.சி. போன்றோர்களின் வீரகர்ஜனைகளை கேட்டு ஆவேசம் அடைகிறார். பகத்சிங் பற்றி செய்தி வரும் பத்திரிகைகள் அக்கல்லூரியில் தடைசெய்யப்படுகின்றன. இவற்றால் கல்லூரிப் படிப்பைக் கைவிட்டு, ஸ்ரீவைகுண்டம் விரைகிறார்.

மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரகத்தை முன்னிட்டு மேற்கொண்ட பாத யாத்திரையைப் பார்வையிடுகிறார். யாத்திரையின்போது எஸ். சத்தியமூர்த்தி, முத்துராமலிங்கத்தேவர் போன்றோர் எழும்பும் கனல் மொழிகளைச் செவிமடுக்கிறார். மாணவர் நல்லகண்ணு தனது நண்பர்களோடு, யாத்திரையின் பக்கத்திலேயே ‘வந்தே மாதரம்‘ எனும் முழக்கங்களை எழுப்பிக் கொண்டே நடந்தனர்.


இரண்டாவது உலகப்போர் உச்சகட்டத்தை அடைந்தபோது, உரியவர்களுக்கு ரேஷன் பொருள்கள் கிடைக்க “உணவுக்குழு’ அரசால் அமைக்கப்பட்டது. இளைஞர் நல்லகண்ணு அக்குழுவில் சேர்ந்தார். தெருத்தெருவாகச் சென்று பொருள்களை விநியோகிக்கும் பணியிலிருந்த பட்டியலினத்தைச் சேர்ந்த இளைஞனை ஊரிலுள்ள நிலக்கிழார்கள் அந்த மாணவனை மட்டும் தெருவுக்குள் அனுமதிக்க மறுத்தனர். இக்கொடுமைக்கு ஒரு தீர்வு காணத்துடித்தார் நல்லகண்ணு.

அந்த நேரத்தில் மே தின விழா நாங்குநேரியில் நிகழவிருந்தது. புகழ்பெற்ற பாடகர் பிச்சைகுட்டி அதில் பேசிப்பாடி முழங்க இருந்தார். அதனைப் பயன்படுத்தி, நல்லகண்ணு பட்டியலினத்தைச் சேர்ந்த பல இளைஞர்களைத் திரட்டிக் கொண்டு ஊர்வலமாக நாங்குநேரி தெருக்களில் நுழைந்தார். ஆனால் ஊர்ப்பொது மக்கள் அவர்களைத் தெருக்களில் அனுமதிக்க மறுத்தனர். என்றாலும் நல்லகண்ணு தடையை உடைத்துக்கொண்டு, நிகழ்ச்சி நடக்கும் இடத்துக்குச் சென்றுவிட்டார். அவர்கள் திரும்பி வரும் வழியில் காத்திருந்த ஊர்ப்பொதுமக்கள் தாக்கி, நீதிமன்றத்திலும் நிறுத்தினர். அப்பொழுது நல்லகண்ணு எடுத்துரைத்த அழுத்தமான வாதங்களைக் கேட்டு, நீதிபதி நல்ல தீர்ப்பை வழங்கினார். அன்று முதல் அவரால் தெருக்களில் மட்டுமன்றி, கோயில்களிலும் அனைவரும் அனுமதிக்கப்பட்டனர்.

சோவியத் நாட்டில் நிகழ்ந்த “அக்டோபர் புரட்சி’ இந்திய மார்க்சீயவாதிகளிடம் ஓர் உத்வேகத்தை உருவாக்கியது. அதனால் கான்பூரில் கூடிய கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு, இந்திய விடுதலைக்குப் பூரண ஒத்துழைப்பைத் தருவது எனத் தீர்மானித்தது. அந்த உணர்வு இரா.நல்லகண்ணுவுக்கும் இருந்ததால், அவ்வியக்கத்தில் 1944 ஆம் ஆண்டு தம்மையும் இணைத்துக் கொண்டார்.

நல்லகண்ணுவுக்கு மகாகவி பாரதியின் பாடல்களிலும், அறிஞர் வெ. சாமிநாத சர்மாவின் எழுத்துகளிலும், தோழர் ஜீவாவின் மேடை முழக்கங்களிலும் மிகுந்த ஈடுபாடு உண்டு. அதனால் அவரே ஒரு கவிஞராகவும் திகழ்கிறார். தோழர் ஜீவா அமரத்துவம் அடைந்தபோது அவர் எழுதிய இரங்கற்பா:

“குற்றாலம் அருவியிலே ஜீவா நீ
குளித்து நிற்கையிலே
வற்றாத தமிழ்க் கடலும்



வந்து நிற்குதென்பேன்
வற்றாத தமிழ்க்கடலும்
வறண்ட விறகாகி
பற்றி எரியக் கண்டேன்
பார்த்த மனம் பதறுதையா’

இதைப் படித்தோரின் கண்களில் நீர்வடிந்தது.

பொதுவுடைமைவாதியாக நல்லகண்ணு இருந்தபோதும், வன்முறையைக் கடைபிடித்தது இல்லை; அதனை ஆதரித்ததும் இல்லை. மேலும், “அஹிம்சை ஓர் உலகச் செல்வம்‘ எனவும் முரசறைந்தார். ஆங்கில ஏகாதிபத்தியத்தை அகற்றியே தீர வேண்டும் என்ற வைராக்கியத்தில், 1937 ஆம் ஆண்டு காங்கிரஸ் பேரியக்கம் தேர்தலில் போட்டியிட்டபோது, இரவு பகலாகப் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

1938 இல் ஆலைத் தொழிலாளர்கள் கடுமையான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களின் துயரைத் துடைப்பதற்கு ஆர்.என்.கே.யும், ஜீவாவும் தெருத்தெருவாகச் சென்று ஆலைத் தொழிலாளர்களுக்காக அரிசியைச் சேகரித்தனர்.

நொச்சிக்குளம் எனும் ஊரில் விவசாயிகளுக்கும் மிராசுதார்களுக்கும் ஓயாத போராட்டம். விவசாயிகளின் குடிசைகளுக்குத் தீ வைத்துக் கொளுத்தினர். வீடுகளில் இருந்த பொருள்கள் சூறையாடப்பட்டன. விவசாயிகளுக்காக 7 நாள்கள் உண்ணாவிரதத்தில் அமர்ந்த நல்லகண்ணு, இரு தரப்பினருக்கும் நல்லுறவு ஏற்படும் வகையில் உறவுப்பாலம் கட்டினார்.

இந்திய சுதந்திரத்திற்குப் பின்பு பொதுவுடைமைக் கட்சி ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் இறங்கியது. அரசும், கம்யூனிஸ்ட் கட்சியை 1949ஆம் ஆண்டு டிசம்பர் 20 வரை தடை செய்திருந்தது. நல்லகண்ணுவும் தலைமறைவானார்.

நெல்லைச் சதி வழக்கில் தலைமறைவான அவர் பிடிபட்ட பொழுது பட்ட துயரங்கள், அல்லல்கள், சித்ரவதைகள் மனித நாகரிகத்துக்கு அப்பாற்பட்டன. புலியூர்குறிச்சி என்ற கிராமத்தில் இரவு 11.00 மணிக்குக் குற்றவாளியாகக் கைது செய்யப்படுகிறார். நல்லகண்ணுவின் இரண்டு கைகளையும் முதுகுக்குப் பின்னால் கட்டி அடிக்கின்றனர். மறுநாள் இரவு வரை கட்டுகளை அவிழ்க்கவே இல்லை. இரவு 2 மணிக்குத் தோழரை மலையடிவாரத்துக்குக் கொண்டு செல்கின்றனர்.

**காவல் ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தியோ “உன்னுடன் சேர்ந்து சதி செய்தவர்களை இந்த மலையின் உச்சியிலிருந்து உருட்டிவிட்டோம். உன்னையும் அதுபோல் உருட்டிவிட்டுக் கொல்லப் போகிறோம்‘ என்று அதட்டியிருக்கிறார். அப்போதும் நல்லகண்ணு மலையைப் போல் நிலைகுலையாது நின்றிருக்கிறார். அந்த வீராதி வீரர் துணிச்சலைக் கண்டு ஆத்திரமடைந்த அந்தக் காவல்துறை அதிகாரி, தாம் புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டால் தோழரின் கன்னத்திலும் உதட்டிலும் சுட்டு, தனது வெறியைத் தணித்துக் கொண்டிருக்கிறார்.**

நல்லகண்ணு ஒன்பதாண்டுகள் சிறையில் இருந்தார். ஆனால் ஒருபொழுதும் ஒரு பதவியிலும் ஒரு நாளும் இருந்ததில்லை.

தாமிரவருணி தண்ணீர் குடித்தவர்களிடம் தமிழ் தாலாட்டுப் பாடி நிற்கும். இது எவ்வளவு பெரிய உண்மை என்பதை புதுமைப்பித்தன் கதைகளைப் படித்தவர்கள் அறிவார்கள்;

அம்பாசமுத்திரத்தில் உள்ள பாபநாசம் அணைக்கு அருகில் சுமார் 10க்கு 15 கல் தொலைவில் உற்பத்தியாகிறது கடனா நதி ! இந்த நதியின் மீது ஓர் அணை கட்ட வேண்டும் என்று நல்லகண்ணு தலைமையில் பத்து நாள்களுக்கு ஓர் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இதன்பேரிலேயே 1966 ஆம் ஆண்டு அணைக்கட்டுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அணையும் உருவானது.

“தினம்தோறும் தாமிரவருணியில் குளிப்பது என்பது என் இயல்பான வாழ்க்கை. என் வீட்டுக்கும் தாமிரவருணி ஆற்றுக்கும் 200 அடிதான் இருக்கும். வெள்ளம் பெருக்கெடுத்து ஓடினால் இரவில் சத்தம் எனக்குக் கேட்டுக் கொண்டேயிருக்கும். இப்படிப்பட்ட நதிக்கான சோதனையை (மணல் திருட்டு) நினைக்கும்போது நெஞ்சம் வெடித்துவிடும்‘ என்பது நல்லகண்ணு தரும் வாக்குமூலம்.

மணல் திருட்டை எதிர்த்து நல்லகண்ணு தொடங்கிய போராட்டத்தால், 2009 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்ட நிர்வாகம் ஆணை பிறப்பித்த தேதியிலிருந்து, ஆறு மாதத்துக்குள் 54,417 யூனிட் மணல் எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறது. ஆனா அந்த அளவை மீறி ஒரு நாளுக்கு 4000 முதல் 5000 மணல் யூனிட் அள்ளப்படுகிறது. தினசரி 100 முதல் 150 லாரிகள் இரவு பகல் பாராமல் மணல் அள்ளுகின்றன. இதனால் பாலங்களும் பழுதடைகின்றன என்பன போன்ற வாதங்களை நீதியரசர்கள் ஜோதிமணி, எஸ். நாகமுத்து ஆகியோரின் அமர்வில் அடுக்குகிறார் நல்லகண்ணு.

“பொன் திணித்த புனல் பெருகும் பொருநை நதி’ எனக் கம்பரால் வருணிக்கப்பட்ட நதி புண்ணாவதைக் கேட்டு, நீதியரசர்களும் மனம் உருகி தீர்ப்பு வழங்கினர். அந்தத் தீர்ப்பை வாசித்து முடித்த நீதியரசர் ஜோதிமணி, “குறிப்பிட்ட மாமனிதர் நல்லகண்ணுவின் வாதத்தைக் கேட்டுத்தான் நாங்கள் இந்த முடிவுக்கு வந்தோம். இல்லையென்றால், இந்த முடிவை நாங்கள் எட்டியிருக்க முடியாது. நமக்கெல்லாம் தனிப்பட்ட வேலை என்பது வீட்டு வேலையாக அமைகிறது. ஆனால் இந்த மனிதருக்கு எந்த நேரத்திலும் பொதுமக்களைப் பற்றிய சிந்தனைகளும், அவர்களுக்காக உழைப்பதையும் தவிர வேறு வேலைகளே இல்லை எனச் சொல்லலாம்‘ என கூறினர்.

நல்லகண்ணுவின் பொதுவாழ்வு படிகாரத்தைப் போல் பரிசுத்தமானது. ஒருமுறை அவருடைய மகள் மூன்று நாள்கள் கட்சி அலுவலகத்திலேயே உண்டு தங்க வேண்டியதாயிற்று. பின்னர் மகள் புறப்பட்டபோது, மூன்று நாள்கள் உணவுக்கான நூற்றுப் பத்து ரூபாயை வசூலித்துக் கட்சி அலுவலகத்தில் கட்டிவிடுகிறார்.

அவரைப் பற்றி ஒரு மலருக்குக் கட்டுரை எழுதிய நடிப்பிசை நாயகி மனோரமா, “ஐயாவுக்கு ஒரு மாதத்திய செலவே 1200 ரூபாய்தான்’எனக் குறிப்பிடுகின்றார்.

விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கான பென்ஷனை நல்லகண்ணுவுக்கு வழங்க அரசு முன்வந்தபோது, “நான் என் நாட்டுக்கான கடமையைச் செய்தேன். அதற்காக எனக்கு அரசு ஓய்வூதியம் வழங்குவது நியாயமில்லை’ என மறுத்துவிட்டார்.

2007 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரியத்துக்குரிய வீடு ஒன்றை (சி.ஐ.டி. நகரிலுள்ளது) வாடகையின்றி வசிப்பதற்கு முதல்வரே வழங்க முன்வந்தபோது, “வாடகை செலுத்தித்தான் வசிப்பேன்’ எனத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அவர் அந்த வீட்டில் வசித்த காலத்தில் ஏற்பட்ட பழுதுகளை எல்லாம் தம் செலவிலேயே செய்து கொண்டார்.

பின்னர் சி.ஐ.டி. நகரிலுள்ள அத்தனை வீடுகளும் பழுதுபடவே அரசும் நீதிமன்றமும் காலி பண்ணச் சொல்லிவிட்டன. ஆர்.என்.கே., நீதிமன்றத்தை அணுக மறுத்து வீட்டைக் காலியும் செய்துவிட்டார்.

இதுதொடர்பாக “இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளிதழ் நல்லகண்ணுவை பேட்டி எடுத்தபோது, “பொதுச்சேவையில் ஈடுபட்டவர்களுக்கு அரசு வீடு வழங்க வேண்டிய அவசியமில்லை. நான் ஒரு சாதாரண மனிதன். ஆனால் கக்கன்ஜி பதவியில் இருந்த காலத்தில் எதையும் சேர்த்து வைக்கவில்லை. நான் மற்றவர்களைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன். ஆனால், இதனை முன்கூட்டியே வீட்டுவசதி வாரியம் தெரிவித்திருக்கலாம் என்பதைத் தவிர, வேறு எனக்கு வருத்தமில்லை எனக்கூறியுள்ளார்.

நல்லகண்ணுவுக்கு கிடைக்கின்ற விருது நேர்மைக்கும் தூய்மைக்கும் வழங்கப்படும் விருதாகும். விருது சில நேரங்களில் கௌரவமும் பெறுகிறது. நல்லகண்ணு போன்றவர்களை அடையாளம் காட்டுவதால்..!

நன்றி: *தினமணி கொண்டாட்டம்*

# அகில இந்திய மாநாட்டுப் பிரதிநிதிகள்

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் 14.10.2022 முதல் 18.10.2022 வரை நடைபெறும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது அகில இந்திய மாநாட்டில் பங்கேற்க கீழ்கண்ட தோழர்கள் ஆகஸ்ட் 6 முதல் 9 வரை திருப்பூரில் நடைபெற்ற மாநில மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டனர்.

### பிரதிநிதிகள்

1.மு.வீரபாண்டியன்
2. கோ.பழனிசாமி
3. டி.எம்.மூர்த்தி,
4. பி.பத்மாவதி
5. நா.பெரியசாமி
6. க.சந்தானம்
7. ந.நஞ்சப்பன்
8. வகிதா நிஜாம்
9. டாக்டர்.ஜி.ஆர்.ரவீந்திரநாத்
10. எம்.ஆறுமுகம்
11. த.லெனின்
12. எஸ்.குணசேகரன்
13. எஸ்.காசிவிஸ்வநாதன்
14. வை.சிவபுண்ணியம்
15. எம்.செல்வராசு எம்.பி.
16. வை.செல்வராஜ்
17. த.இந்திரஜித்
18. கே.ஆர்.திருநாவுக்கரசு
19. மு.கண்ணகி
20. வி.எஸ்.சுந்தரம்
21. எஸ்.ஏழுமலை
22. டி.மணிவாசகம்
23. எஸ்.தேவராசன்
24. ஏ.வி.அழகிரிசாமி
25. எம்.ரவி
26. தி.இராமசாமி
27. சோ.இராமநாதன் – அரியலூர்
28. என்.எஸ்.பெருமாள் – இராமநாதபுரம்
29. சி.எம்.துளசிமணி – ஈரோடு தெற்கு
30. ஜி.வெங்கடாசலம் – ஈரோடு வடக்கு
31. கே.சக்திவேல் – ஈரோடு வடக்கு
32. பி.துரை – கடலூர்
33. எம்.ரத்தினம் – கரூர்
34. கே.ராமசாமி – கள்ளக்குறிச்சி
35. டி.சுபாஷ் சந்திரபோஸ் – கன்னியாகுமரி
36. பா.கார்த்திக் – காஞ்சிபுரம்
37. எம்.இலகுமையா – கிருஷ்ணகிரி
38. டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ.
39. பி.பழனி
40. ஆர்.சுந்தரவள்ளி
41. சி.சிவசாமி – கோயமுத்தூர்
42. சி.தங்கவேலு
43. நா.சாத்தையா – சிவகங்கை
44. பா.மருது
45. ஏ.ராஜ்குமார் – செங்கல்பட்டு
46. ஏ.மோகன் – சேலம்
47. ஏ.கந்தன்
48. முத்து உத்திராபதி – தஞ்சாவூர் தெற்கு
49. மு.அ.பாரதி – தஞ்சாவூர் வடக்கு
50. எஸ்.கலைச்செல்வன் – தருமபுரி
51. ஜி.விடுதலை விரும்பி
52. ஏ.பி.மணிகண்டன் – திண்டுக்கல்
53. எம்.செல்வராஜ் – திருச்சி மாநகர்
54. எஸ்.செல்வராஜ் – திருச்சி புறநகர்
55. சபியாள் – திருநெல்வேலி
56. எம்.சுந்தரேசன் – திருப்பத்தூர்
57. கே.எம்.இசாக் – திருப்பூர் புறநகர்
58. எஸ்.ரவிச்சந்திரன் – திருப்பூர் மாநகர்
59. இரா.தங்கராசு – திருவண்ணாமலை
60. கே.கஜேந்திரன் – திருவள்ளூர்
61. கே.ஆர்.ஜோசப் – திருவாரூர்
62. ஆர்.வீரமணி
63. எஸ்.கேசவராஜ்
64. பி.கரும்பன் – தூத்துக்குடி
65. எஸ்.வேலாயுதம் – தென்காசி
66. எஸ்.கே.சிவா – தென் சென்னை
67. த.கு.வெங்கடேஷ் – வட சென்னை
68. பா.கருணாநிதி – மத்திய சென்னை
69. கி. பெருமாள் – தேனி
70. சிவகுரு.பாண்டியன் – நாகப்பட்டினம்
71. எஸ்.மணிவேல் – நாமக்கல்
72. த.செங்கோடன் – புதுக்கோட்டை
73. வீ.ஞானசேகரன் – பெரம்பலூர்
74. பி.முத்துவேல் – மதுரை புறநகர்
75. எம்.எஸ்.முருகன் – மதுரை மாநகர்
76. அ.சீனிவாசன் – மயிலாடுதுறை
77. பொ.லிங்கம் – விருதுநகர்
78 எஸ்.செந்தில்குமார்
79. ஆ.சௌரிராஜன் – விழுப்புரம்
80. ஜி.லதா – வேலூர்
81. எல்.மணி – ஆசிரியர் அரங்கம்
82. எம்.ராதாகிருஷ்ணன் – தொழிற்சங்கம்
83. பி.எஸ்.மாசிலாமணி – விவசாயிகள் அரங்கம்
84. அ.பாஸ்கர் – விவசாயத் தொழிலாளர் அரங்கம்
85. க.பாரதி – இளைஞர்
86. சீ.தினேஷ் – மாணவர்
87. டாக்டர்.த.அறம் – கலை இலக்கியம்
88. டாக்டர்.ஜி.ரமேஷ் – சமூக சமத்துவ டாக்டர்கள் அரங்கம்
89. ஆர்.பாலசந்திரன் – முற்போக்காளர் பேரவை
90. டி.வி.கருணைதாஸ் – நட்புறவு
91. எஸ்.ராதகிருஷ்ணன் – நட்புறவு
92. பி.வி.சந்திரராமன் – கோவில் மனை
93. பி.கெம்பன் – பழங்குடி அரங்கம்
94. கே.சேது – தனி 2
95. பி.ரவிக்குமார் – தனி 3
96. உ.மா.செல்வராஜ் – தனி 4
97. ஜி.முரளி – தனி 5
98. டாக்டர்.ஏ.ஆர்.சாந்தி – தனி 6
99. சண்முகம் சரவணன் – என்சிபிஎச்
100. ஜி.மஞ்சுளா – மாதர் அரங்கம்

### மாற்றுப் பிரதிநிதிகள்

1. டி.இசக்கிதுரை – தென்காசி
2. கே.பாஸ்கர் – நாகப்பட்டினம்
3. வி.ஜெயராமன் – பெரம்பலூர்
4. எஸ்.முருகபூபதி – இராமநாதபுரம்
5. கே.ரவி – தொழிற்சங்கம்
6. சி.சந்திரகுமார் – தஞ்சாவூர் தெற்கு
7. க.மெய்யர் – மதுரை புறநகர்
8. ஏ.கே.திராவிடமணி – திருச்சி மாநகர்
9. இரெ.இடும்பையன் – மயிலாடுதுறை
10. டி.பி.லலிதா – மாதர் அரங்கம்

NEWAGE WEEKLY
Central Organ of the Communist Party of India

**தலையங்கம்**
(ஆக.14 - 20)

## பீகார் மாநில அதிரடி மாற்ற நிகழ்வுகள் குறித்து

பீகார் பாஜக கூட்டணி அரசு வீழ்ச்சியுடன் இந்திய அரசியலில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. பாஜக கூட்டணிக்கு ஐக்கிய ஜனதா தள் விடை கொடுக்க பாஜக பங்கேற்ற அரசு வீழ்ந்தது. பாஜக, ஐக்கிய ஜனதா தள் கட்சிகளிடையே பல மாதங்களாக முரண்பாடு உரசல்கள் வளர்ந்து வந்தாலும், அது இவ்வளவு விரைவாக அவர்களின் அரசைக் கவிழக்கும் என யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். 24 மணி நேரத்திற்குள் பாஜக கூட்டணி அரசு வெளியேற்றப்பட்டு மகாகத்பந்தன் கூட்டணி அரசு புதிதாகப் பதவி ஏற்றுள்ளது.

நாட்டில் உருவாகி வரும் சமூக, பொருளாதார நெருக்கடி பீகாரில் அரசியல் மாற்றமாக வெடித்துள்ளது. ஆர்.எஸ்.எஸ். – பாஜக பெருந்தலைகள் எவரும் அந்த நெருக்கடி இத்தகைய திருப்பத்தை எதிர்பாராது திடீரென ஏற்படுத்தும் எனக் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார்கள். அவர்கள் தங்கள் மகாராஷ்ட்டிரா திட்டத்தின் வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

மராட்டியத்தில் சிவசேனா கட்சியில் பிளவைத் திட்டமிட்டு ஏற்படுத்தி தங்கள் விருப்பத்திற்கேற்ப ஒரு தலையாட்டி அரசை அரியணை ஏற்றியிருந்தார்கள். பீகாரில் பாஜகவின் பின்னடைவு சங்பரிவார் சக்திகளுக்கு மிகப் பெரும் அதிர்ச்சி.

ஒரு மாதத்திற்கு முன்பு ஹைத்தராபாத்தில் நடைபெற்ற பாஜக தேசியச் செயற்குழு எதிர்வரும் 40 ஆண்டுகளுக்கு இனி அதிகாரத்தில் அவர்கள் மேலாதிக்கமே என மமதையாகப் பெருமை அடித்தது. பாஜக தேசியத் தலைவர் தங்கள் கட்சியின் ஒற்றைத் தலைமை ஆட்சி அமைய வேண்டும் என்ற ஆசையை வெளிப்படையாகக் கூறினார். அவர்களின் கொள்கை பிடிவாதம் எப்போதுமே நீடித்த அதிகாரம் மற்றும் ஒரு கட்சி ஆட்சி என்பது இரகசியமானது அல்ல.

எனினும் பாஜக, எப்போதெல்லாம் தேவையோ அப்போது தங்கள் உண்மையான நோக்கத்தை மூடி மறைப்பதில் தந்திரமான சாமர்த்தியத்தை வளர்த்துள்ளனர். தங்கள் அரசியல் சித்து விளையாடல் திட்டங்களுக்குப் பொருந்தும் நேரத்தில், தாங்கள்தாம் கூட்டணி அரசியலில் நிபுணர்கள் எனக் காட்டிக் கொள்ளவும் அவர்கள் தயங்குவதில்லை.

கோவா, மணிப்பூர் மற்றும் பல வடகிழக்கு மாநிலங்களில் குறுக்கு வழியில் கூட்டணி அரசுகளை அமைத்து, எப்படியோ பெரும்பான்மை கணக்குக் காட்டிவிடுகிறார்கள். அரசியல் நீதி நெறிமுறை குறித்து அளவுக்கதிகமாகப் பிரசங்கம் செய்து, எந்த அளவுக்கும் சென்று அதிகாரத்தைக் கைப்பற்றி அதைப் பிடித்துத் தொங்குவார்கள். தங்களின் ஜனநாயகமற்ற, அறநெறி தவறிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள அரசியல் சட்டப்படியான அதிகாரத்துவ அமைப்புக்களிலும், அரசு முகைமைகளின் தலைமைப் பொறுப்புக்களிலும் தாராளமாகத் தங்கள் ஆட்களை நியமிக்கிறார்கள்.

கூட்டணி அரசியல், அதில் அங்கம் வகிக்கும் பங்குதாரர்களிடமிருந்து ஜனநாயக அரசியல் கலாச்சாரத்தைக் கோருகிறது. பாஜக அதனது பாசிச அரசியல் குணாம்சத்தின் காரணமாக இந்தக் கலாச்சாரத்தில் பின்தங்கி இருக்கிறது. தந்திர உபாயமாக அவர்கள் கூட்டணி கட்சிகளிடம் விஸ்வாசமாக இருப்பதாகச் சத்தியம்கூடச் செய்வார்கள். ஆனால் சாராம்சத்தில் அவர்களது நடவடிக்கைகள் எல்லாம் அதற்கு எதிரானதாகவே இருக்கும்.

பாஜகவின் அரசியல் மற்றும் நிர்வாகத் திட்டங்கள் எங்கெங்கும், ஆர்.எஸ்.எஸ். தனது மறைமுக மற்றும் வெளிப்படையான நிகழ்ச்சி நிரல் திட்டங்களை உட்பொதிந்து வைத்துள்ளது. பாஜக உடன் கூட்டணி சேர்ந்து அமைக்கும் எந்த அரசும் இப்பாதையில் நடந்தே ஆக வேண்டும்.

பீகாரில் நிதீஷ் குமாரும் அவரது கட்சியும் 2000 முதலாக, சிறிய இடைவெளிகளுடன், இந்த அனுபவங்களைச் சந்தித்தே வந்தனர். மதச்சார்பின்மை கொள்கையை ஓரளவுக்காவது ஆதரிக்கும் எந்த அரசியல் கட்சியும், பாஜகவுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது என்பது நிரந்தரமான முரண்படும் விஷயமாகவே இருக்கும். நிதீஷ் குமார் இவ்வளவு ஆண்டு கால பாஜக உறவில் இந்த மோதல் முரண்பாட்டை அனுபவித்திருப்பார் என்பதை அவரது மனச்சாட்சி நன்கு அறியும். மகாராஷ்டிராவில் சிவ சேனா கட்சியின் பெரும் பகுதியைக் கபளீகரம் செய்த பாஜக, அந்தப் பகுதியைத் தங்கள் தாளத்திற்கேற்ப ஆட வைத்தனர் என்ற நிகழ்வே ஐக்கிய ஜனதா தள் பாஜகவுடன் தனது கூட்டணி உறவைத் துண்டித்துக் கொள்வதற்கான உடனடி காரணம் எனச் சொல்லப்படுகிறது.

பீகார் புதிய அரசியல் நிகழ்வு வளர்ச்சிப்போக்கு உருவாக்கத்தில் சமூக அரசியல் அம்சங்களுடன் கூடிய பிற காரணங்களும்கூட பங்கு வகித்தன. அக்னிபத் திட்டத்திற்கு எதிரானப் போராட்டம், ஜாதி மக்கள் தொகை கணக்கெடுப்பு முதலியனவும் அவற்றில் முக்கியமானவை. ஐக்கிய ஜனதா தள் கட்சியின் மேனாள் தலைவரும் மேனாள் ஒன்றிய அமைச்சருமான ஆர்.சி.பி.சிங் பதவி விலகல் புதிய ஆபத்துக்களின் சமிக்ஞையை அவருக்குச் சுட்டிக் காட்டியிருக்கலாம்.

மேலும் சில ஐக்கிய ஜனதா தள் அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து மகாராஷ்ட்டிரா பாணி நாடகத்தை அரங்கேற்ற அவர்களைப் பாஜக அணுகியதாகத் தகவல்கள் கூறுகின்றன. இவை அனைத்துமாகப் பீகாரில் புதிய கூட்டணி உருவாகச் செய்தன.

புதிய மகாகத்பந்தன் கூட்டணி அரசு பதவி ஏற்றவுடன் அதன் முதலமைச்சராக நிதீஷ் குமார் கூறியது கவனிக்கத்தக்கது. அவர் கூறினார், “2024 நிச்சமாக 2014போல இருக்காது.” அந்தக் கூற்று, 2014ல் அதிகாரத்திற்கு வந்து 2024–லும் அதிகாரத்தில் தொடர விரும்பும் நரேந்திர மோடிக்கான தெளிவான எச்சரிக்கை.

பீகார் நிகழ்வுப் போக்குகள் அதற்கேயுரிய பலம் மற்றும் பலவீனத்துடன் கூடிய, இன்றைய இந்திய அரசியலை ஒத்த, குறிப்பான அம்சங்களை உடையது. வெல்லப்பட முடியாதது பாஜக என்ற கருத்தோட்டம் பீகாரில் மீண்டும் ஒருமுறை தோற்றுள்ளது.

மோடியின் வெற்றி அவரது அரசியலின் மேன்மையான தன்மைகளில் காரணமாகக் கிடைத்தது அல்ல; மாறாக, எதிர்கட்சிகளிடையே ஒற்றுமை இன்மையே அவர் வெற்றிபெறக் காரணம். இந்த ஒற்றுமையின்மையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதில் ஆர்எஸ்எஸ் பாஜக சாமர்த்தியமாக உள்ளன. பல எதிர்கட்சித் தலைவர்களின் தனிப்பட்ட அபிலாசைகள், மற்றும் ஈகோ தன்முனைப்புகள் ஒற்றுமையின்மைக்கு நீர்ஊற்ற, அதன் விளைவு பாஜக வெற்றிக்கு உதவியது.

பாஜகவுக்கு எதிராக நம்பிக்கைக்குரிய ஒரு மாற்று முன் வைக்கப்பட்டால் இந்திய மக்கள் அதற்கு மனமுவந்து வாக்களிக்க முன்னுரிமை தருவதை நிரூபித்திருக்கிறார்கள். ‘அச்சி தின்’ ஒரு முழு பொய் என்பதைத் தவிர வேறில்லை என வாழ்வின் எதார்த்தம் மக்களுக்குக் கற்பித்துள்ளது. மக்களுக்கு ஒரு மாற்றம் தேவை. அவர்கள் ஏழைகள், குரலற்றவர்கள் என்றாலும் சரியான தருணத்தில் சரியான முடிவுகளை எடுப்பதில் அவர்கள் போதுமான காரண காரிய பொதுஅறிவு நிரம்பியவர்கள்.

இதுதான், இன்றைய சிக்கலான இந்திய நிலைமைகளில், எதிர்த்தரப்பு முன் இருக்கும் சவால். 2024 பொதுத் தேர்தல்களுக்கான களம் மிக மிக முக்கியத்துவம் உடையது; அதுவும், தங்களின் இந்துத்துவா திட்டங்களின்படி இந்தியாவை உருமாற்ற ஆர்.எஸ்.எஸ்.–பாஜக அமைப்புகள் தலைகீழாக நின்று முயற்சிக்கும்போது 2024 தேர்தல் களம் கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. இந்துத்துவா கொள்கையின் சமூகவியல் மற்றும் பொருளாதார இயல், அந்தப் பெயர் பாசிசத்தின் இந்தியப் பதிப்பிற்கான மற்றொரு பெயரே எனப் பிரகடனப்படுத்துகின்றன. அத்தகைய கொடுமையான எதிரியை எதிர்த்துப் போரிட, மேம்பட்ட மட்டத்திலான அரசியல் பற்றுறுதி மற்றும் தயார் நிலை தேவைப்படுகின்றன.

இந்தியாவுக்கான இந்தப் போரில் பீகார் கேந்திரமான களமாகும். நாட்டின் இந்தி பேசும் முக்கிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் மனநிலையை அது பிரதிபலிக்கிறது. தற்போது பாஜக கொள்கை மற்றும் அரசியலுக்கு எதிராகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிலைபாட்டுடன், பீகாரில் புதிய அரசு ஆட்சிக்கு வந்துள்ளது.

அது புதிய கூட்டணி ஏற்பாட்டின் வலிமை. ஆனால் அரசியல் மாற்றத்திற்காக மக்கள் நடத்திய போராட்டங்களின் விளைவு அல்ல அது. குறைந்தபட்ச பொதுத் திட்டங்களின் அடிப்படையில் மக்களின் விருப்பங்கள் இனிதான் மெய்ப்பட வேண்டும். இவையெல்லாம் அதன் பலவீனங்கள்.

ஆனால் சந்தேகமில்லாமல் இது வரவேற்புக்குரியதும் இந்திய அரசியல் பரப்பில் நீண்டதொரு தாக்கத்தை ஏற்படுத்துவதான நேர்மறை வளர்ச்சிப் போக்காகும். இதனை மனதில் கொண்டு, இடதுசாரிகள் புதிய அரசு செல்லும் பாதையை வகுப்பதில் தங்களின் தனித்துவமான பங்கை ஆற்றுவர். புதிய அரசின் அடித்தளத்தை வலுப்படுத்தவும், மக்களின் கனவுகளுக்கு நம்பிக்கை அளிக்கும் ஆட்சியை ஏற்படுத்தவும் இடதுசாரிகள் இணைந்தும், தனித் தனியாகவும் மக்களைத் திரட்டுவர்.

புதியதொரு தொடக்கம் வெல்லட்டும்!

தமிழில் : **நீலகண்டன்,** தொடர்புக்கு **94879 22786**

தினமணி

# போதை இல்லா தமிழகம்:

## போதை பொருள்கள் தடுப்பு குறித்த தலையங்கம்

தமிழகத்தில் போதைப் பொருள்களின் நடமாட்டத்தைத் தடுப்பதற்காக மாநில அரசு முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளை காலத்தின் கட்டாயம் என்றே கூற வேண்டும். தமிழகத்தில் கஞ்சா, குட்கா, பான் மசாலா போன்ற போதைப் பொருள்களின் விற்பனை அதிகரித்திருப்பதும், அவற்றைப் பயன்படுத்துவோர், குறிப்பாக இளைய சமுதாயத்தினரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும் வேதனையளிப்பதாக தெரிவித்துள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின், போதைப் பொருள்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு அறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

அவற்றில், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு டிஎஸ்பி பதவி உருவாக்கப்பட்டு, அந்தப் பிரிவு வலுப்படுத்தப்படும், போதைப்பொருள்களை விற்பனை செய்வோர் கைது செய்யப்பட்டு அவர்களின் சொத்துகள் முடக்கப்படும் போன்ற அறிவிப்புகள் முக்கியமானவை. போதைப் பொருள்கள் தடுப்பு குறித்து மாவட்ட ஆட்சியர்களுடனும் காவல்துறை கண்காணிப்பாளர்களுடன் அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின்போது, போதைப் பொருள்களைத் தடுப்பதற்கான மேலும் பல ஆலோசனைகளையும் முதல்வர் வழங்கினார்.

அடுத்தடுத்து மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் போதைப் பொருள்கள் தடுப்பு மாநாடு, பள்ளிகள், கல்லூரிகளில் மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு உறுதிமொழி என போதைப் பொருள்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தமிழக அரசு முடுக்கிவிட்டுள்ளது.

போதைப் பொருள்களைக் கடத்தினால் சொத்துகள் முடக்கம் என்கிற அறிவிப்பு, அப்பொருள்களைக் கடத்துவோருக்கு அச்சத்தை ஏற்படுத்தி, கடத்தலை கைவிடச் செய்ய வழிவகுக்கும். டிஎஸ்பி தலைமையிலான நுண்ணறிவுப் பிரிவு என்பது, போதைப் பொருள்கள் கடத்தல், விற்பனை குறித்த தகவல்களை கூடுதல் தீவிரத்துடன் கண்டறிந்து தடுக்க உதவும்.

தமிழகத்தில் 2013ஆம் ஆண்டு முதல் கடந்த ஜூன் மாதம் வரையிலான கடந்த 10 ஆண்டு காலத்தில் ரூ.38 கோடி மதிப்பில் 952 டன் அளவிலான குட்கா, பான் மசாலா கைப்பற்றப்பட்டுள்ளன; திமுக அரசு பொறுப்பேற்றது முதல் கடந்த ஜூன் மாதம் வரை ரூ. 9 கோடி மதிப்பிலான 152 டன் குட்கா, பான் மசாலா பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலும், குட்கா, பான் மசாலா விற்பனையில் ஈடுபட்ட சிறு வியாபாரிகள் மீது கடந்த 10 ஆண்டு காலத்தில் சுமார் ரூ. 3 கோடி வரை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்பது அரசு அளித்துள்ள புள்ளிவிவரம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை போதைப் பொருள்கள் நமது மாநிலத்தில் தயாரிக்கப்படவில்லை, வெளிமாநிலங்களிலிருந்தே இங்கு கடத்தி வரப்படுகின்றன என்று அரசு தெளிவாகச் சொல்கிறது. பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள்களின் அளவே இவ்வளவு இருக்கும்போது, விற்பனையான, இன்னும் பதுக்கி வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போதைப் பொருள்களின் அளவை நினைத்தால் மலைப்பு ஏற்படுகிறது.

வாட்ஸ்ஆப், டெலிகிராம் போன்ற சமூக ஊடகங்களில் தனிக் குழுக்களை ஏற்படுத்தி, அவற்றின் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொண்டு போதைப் பொருள்களை விற்பனை செய்வது காவல்துறையினருக்கு புதிய சவாலாக உருவெடுத்துள்ளது. இதைத் தடுக்க போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவில் ‘சைபர் செல்’ தனியாக ஏற்படுத்தப்படும் என்கிற அரசின் முடிவு சரியானது.

போதைப் பொருள் அதனைப் பயன்படுத்தும் தனிமனிதர்களுக்கு மட்டும் தீங்கிழைப்பதல்ல. அது மிகப்பெரும் சமூகப் பிரச்னையாகவும் தற்போது மாறி வருகிறது. பெரும் குற்றங்களைச் செய்யவும் போதைப் பொருள் ஊக்கமளிக்கிறது.

சிறார்கள்கூட மது, குட்கா, பான்மசாலா போன்ற போதைப் பொருள்களுக்கு அடிமையாகி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதும், பொது இடங்களில் வன்முறையில் ஈடுபடுவதும் அடிக்கடி நடக்கும் நிகழ்வுகளாக மாறிவிட்டன. சில இடங்களில் பள்ளி மாணவிகள்கூட மது அருந்தும் விடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகி மனதை கனக்கச் செய்தது.

1987ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் தேதி ஐ.நா. பொதுச் சபை அறிவிப்பின்படி, ஆண்டுதோறும் போதைப் பொருள்களுக்கு எதிரான தினமாக ஜூன் 26ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுக்கப்பட்டு வருகிறது. போதைப் பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வையும் ஐ.நா. ஏற்படுத்தி வருகிறது. ஆனாலும், உலகம் முழுவதும் போதைப்பொருள் இன்று அழிக்க முடியாத தீயசக்தியாக வளர்ந்து நிற்கிறது.

இந்த சூழலில் போதைப் பொருள்களின் தீமை குறித்து மாணவர்களுக்கு இளம் வயதிலேயே விளக்க வேண்டிய கடமை பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும் உள்ளது. என்றாவது ஒருநாள் விழிப்புணர்வு உறுதிமொழி எடுப்பதுடன் நிறுத்தி விடாமல், போதைப் பொருள்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றங்கள் குறித்து அடிக்கடி விவாதிக்கப்பட வேண்டும். பள்ளி, கல்லூரிகளில் சிறப்பு வகுப்புகள் எடுக்கப்பட வேண்டும்.

பேருந்துகள், ரயில்கள், சரக்கு வாகனங்கள் என போதைப் பொருள்கள் கடத்திவரப்படும் வாய்ப்புகள் அனைத்தையும் தடுக்க காவல்துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லை சோதனைச்சாவடிகளில் அண்டை மாநிலங்களிலிருந்து வரும் மருத்துவக் கழிவுகள், இறைச்சிக் கழிவுகள் போன்றவற்றை அலட்சியத்துடன் அனுமதிப்பது இப்போதும் நடந்து வருகிறது. அதுபோல அல்லாமல் போதைப் பொருள்கள் கடத்தப்படும் வாகனங்கள் குறித்து உண்மையான சோதனை அவசியம்.

இந்த வேளையில் தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோள். டாஸ்மாக் மதுபானக் கடைகளின் எண்ணிக்கையை பெருமளவு குறைக்கவும், பள்ளி மாணவர்களுக்கு மதுபானங்கள் விற்பனை செய்வதைத் தடுக்கவும் அரசு நடவடிக்கை எடுப்பதும் அவசியம்.

*நன்றி: தினமணி 16.08.2022 தலையங்கம்*



# தனியனும் - பொதுவும்

- எஸ். தோதாத்ரி


**தத்துவவாதிகள் உலகத்தை புரிந்து கொள்வதற்கு பல வழிகளை வகுத்து வைத்துள்ளார்கள். பரிசோதனைகள் மூலமாகவும், பலர் கூறியதன் மூலமாகவும், அனுபவத்தின் மூலமாகவும் உலகத்தைப் புரிந்து கொள்ள முயற்சி செய்துள்ளார்கள். இவற்றில் நன்றாகப் புரிந்து கொள்வதற்காக சில வகையினங்களை உருவாக்கி வைத்துள்ளார்கள். இந்த வகையினங்கள் அடிப்படையான விதிகளுக்கு துணையாக இருப்பவை ஆகும். இவற்றின் மூலம் அடிப்படையான விதிகளை சரியாக அறிந்து கொள்ள முடியும்.**

இந்த வகையினங்களை எல்லா தத்துவவாதிகளும் பயன்படுத்தினாலும் இயங்கியல் பொருள்முதல் வாதத்தில் இவற்றிற்கு முக்கியமான இடம் உண்டு. எனவே இயங்கியல் பொருள்முதல்வாதத்தில் இவை பற்றி அதிகம் பேசப்படுகிறது.

இவை பற்றி நாம் அறிந்து கொள்வது அவசியமாகும். ஏனென்றால் ஒவ்வொரு நிகழ்ச்சி அல்லது பொருள் பற்றிய முழுத்தன்மையைப் புரிந்து கொள்ள இவை நமக்கு உதவியாக இருக்கும். எனவே மார்க்சியம் கற்பவர்கள் இவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

இவற்றில் முதலாவதாக நாம் எடுத்துக்கொள்வது தனியன், பொது என்ற வகையிலும் ஆகும். “தனியன்” என்பது ஒவ்வொரு தனி பொருள் அல்லது நிகழ்ச்சியைக் குறிக்கும். “பொது” என்பது பல தனியன்கள் அடங்கியவற்றைக் குறிக்கும்.

உதாரணமாக மனிதன் என்பது பொதுவானதாகும். மனிதன் என்று கூறும்பொழுது அவன் நிறம் என்ன? அவன் எந்த தேசத்தை சேர்ந்தவன்? அவன் எந்த மொழியைப் பேசுகிறான்? என்பது நமக்கு முக்கியமல்ல. ஏனென்றால் இவை அனைத்தும் “தனியன்கள்” ஆகும். மனிதன் என்று கூறும்பொழுது, மனிதன் என்பதற்கான பொது குணத்தையே நாம் கணக்கில் கொள்கிறோம். இந்தியன், அமெரிக்கன், நீக்ரோ என்று கூறும்பொழுது மனிதனுக்குரிய சிறப்பம்சங்கள் வெளிப்படுகின்றன.



மற்றொரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். “மரம்“ என்று கூறுகிறோம். இது பொதுவானது ஆகும். இது உலகிலுள்ள அனைத்து மரங்களையும் குறிப்பது ஆகும். இது “பொது” எனப்படுகிறது. ஆனால் தென்னை, மா, பலா என்று கூறும் பொழுது அவை தனித்தனி மரங்களைக் குறிக்கின்றன.

இதேபோன்று “அரசியல் கட்சி” என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். கட்சி என்பது பொதுவானது. காங்கிரஸ், கம்யூனிஸ்ட், திராவிட முன்னேற்றக் கழகம் என்று கூறும்பொழுது இவை ‘தனியன்கள்’ ஆகும்.

தனியன், பொது ஆகியவற்றை நாம் இயங்கியல் ரீதியாக காண வேண்டும். பொதுவைத் தனியாகவும், தனியனைப் பொதுவாகவும் நாம் காணக் கூடாது. அதற்குக் காரணம் ஒரு பொருளின் சிறப்புப் பண்புகள் பொதுவில் அடங்கிவிடுகின்றன. பொதுவானது சிறப்பு பண்புகளில் இடம்பெறுகிறது. உதாரணமாக “மரம்“ என்ற பொதுப் பண்பு தென்னை மரத்திலும் காணப்படும், மா மரத்திலும் காணப்படும், வாழைமரத்திலும் காணப்படும். தென்னை, மாமரம் போன்றவற்றின் சிறப்புப் பண்புகள் பொதுவிலும் காணப்படும்.

சமுதாய அரங்கை எடுத்துக்கொண்டால் முதலாளித்துவம் என்பது பொதுவானது. இதற்கு மையமான பண்பாக இருப்பது ‘சுரண்டல்’ ஆகும். தொழி லாளர்களின் உபரி உழைப்பை சுரண்டாத முதலா ளித்துவ அமைப்பு உலகத்தில் கிடையாது. முதலாளித் துவத்தின் ஒருவகை ‘ஏகாதிபத்தியம்‘. இது சில சிறப்பு அம்சங்களைக் கொண்டது. உலகத்தை ஒரே மையத்திற்குள் கொண்டுவரும் முயற்சியை மேற்கொண்டது. இது ஒரு சிறப்பான பகுதி. ஆனால் இது முதலாளித்துவம் என்ற பொது பகுதிக்கு உட்பட்டது.

தற்காலத்தில் ‘கார்ப்பரேட் முதலாளித்துவம்‘ இருக்கிறது. இது பொது என்பதில் அடங்கும். இதுவும் முதலாளித்துவம் தான். ஆனால் இதன் தனிப் பண்பு சுரண்டல் ஒரு மையத்தில் இடம் பெறாமல் பல மையங்களில் இடம்பெறுகிறது. இது அதனுடைய தனிப் பண்பு. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று உறவு உள்ளவை.

மார்க்ஸ் இந்தியாவைப் பற்றி எழுதும்பொழுது ஆசிய உற்பத்தி முறை என்ற ஒரு சொல்லை கையாண்டார். இன்றைக்கு பலர் இதை தனியாக எடுத்து வைத்துக்கொண்டு மார்க்ஸ் கூறுவது சரியில்லை என்று கூறுவோரும், இது இந்தியாவிற்கே உரித்தானது என்று கூறுவோரும் உள்ளனர்.

மார்க்ஸ் சமுதாய வரலாற்றில் ஆதி பொதுவுடைமைச் சமுதாயம், அடிமைச் சமுதாயம், நிலவுடைமைச் சமுதாயம், முதலாளித்துவம், சோசலிசம், கம்யூனிசம் என்று வகைப்படுத்துகிறார். இந்த வகைகளுக்குள் ஆசிய உற்பத்தி முறை என்பது அடங்கவில்லை என்று கூறுகிறார்கள். எனவே மார்க்ஸ் இந்தியாவை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றும் கூறுகிறார்கள். வேறு சிலர் இந்த முறையானது இந்தியாவிற்கே உரித்தானது என்று கூறுகிறார்கள்.

இதைப் பின்பற்றி இங்குள்ள சாதிய முறை, பண்பாட்டு அம்சங்கள் ஆகியவற்றை மட்டும் வலியுறுத்துகிறார்கள். இவர்கள் இவ்வாறு கூறும் பொழுது, பொது, தனியன் ஆகியவற்றிற்கு இடையே உள்ள உறவை புறக்கணிக்கிறார்கள்.

**உண்மையில் ஆசிய உற்பத்தி முறை என்பதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று உற்பத்தி முறை என்பது. இது மார்க்சியத்திற்கே உயிர்நாடியானது. இது உலகத்தில் உள்ள எல்லா அமைப்புகளுக்கும் பொதுவானது. இதுபற்றி அவர் கூறும்போது, இந்த உற்பத்தி முறையில் நிலம் அடிப்ப டையாக உள்ளது. அதை பொதுவில் உள்ளது என்றும் குறிப்பிடுகிறார்.**

நிலம் அடிப்படையாக உள்ளது என்று கூறும் பொழுது, அது நிலவுடமை சமுதாயத்தை குறிப்பது ஆகும். இதர சில பிரத்தியேக பண்புகளைக் கொண்டது. இந்த தனிப் பண்புகள் இந்த முறையோடு இணைந்தது. உற்பத்திமுறை என்ற கருத்துப்படி இது நிலவுடமை சமுதாயத்தை சாரும். ஆசிய என்று கூறும்பொழுது இங்குள்ள சில தனிப் பண்புகளை அது குறிக்கிறது. ஆகையினால்தான் பேராசிரியர் நா.வானமாமலை அவர்கள் நிலவுடமை சமுதாயத்தில் ஒரு வகை என்று கூறுகிறார்.

ஒரு பொதுவான கருத்தாக்கம் நிலவுடமை என்பது. இது உலகம் முழுவதும் இருந்தது. ஆனால் இந்த நிலவுடமை எல்லா நாட்டிலும் ஒரே மாதிரியாக இருந்தது இல்லை. இந்தியாவில் ஒரு மாதிரியாகவும், சீனாவில் வேறு மாதிரியாகவும், ஐரோப்பாவில் மற்றொரு மாதிரியாகவும் அது இருந்தது. இதற்குக் காரணம் அந்தந்த வட்டாரங்களில் உள்ள இயற்கைச் சூழல், கருவிகளின் முன்னேற்றம் ஆகியன ஆகும்.

இவற்றிற்கு ஏற்ற முறையில் அங்கே சிறப் பான சிந்தனை அமைப்புகளும் இருந்தன. எனவே, அடிப்படையான உற்பத்தி முறை என்பது ஒவ்வொரு வட்டாரத்திலும் வெவ்வேறு வகையாக வெளிப்படும். இதைத்தான் சமச்சீரற்ற வளர்ச்சி என்ற மார்க்சிய விதி சுட்டிக் காட்டுகிறது.

இன்றைய பின்நவீனத்துவவாதிகள் தனியன், பொது என்பதில் பொதுவைப் புறக்கணிக்கிறார்கள். அதாவது அவர்களைப் பொறுத்த மட்டிலும் எல்லாவற்றிற்கும் பொதுவான மையம் என்பது கிடையாது. நாம் மையத்தை சூழ்ந்துள்ள விளிம்புகளை மட்டுமே காணவேண்டும். இதன் விளைவாக ஏற்பட்ட சமூக சிந்தனையானது இன்றைக்கு அராஜகவாதத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. விளிம்புநிலை மனிதர்களை முன்னிலைப்படுத்தி போராட வேண்டும். இவர்கள் மூலமாகத்தான் புரட்சி வரும் என்று கூறுவது மார்க்சியத்திற்கு நேர் எதிரானது. ஏனென்றால் மார்க்ஸ் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் தான் புரட்சி ஏற்படும் என்று கூறினார். ஆனால் இந்த வர்க்கத்தை தனியாகப் பிரித்தெடுத்து அவர் காணவில்லை. அதனை முதலாளித்துவத்தோடு இணைத்துத்தான் கண்டார். இது அல்லாத உதிரிப் பாட்டாளிகளை வைத்துக் கொண்டு எந்தப் புரட்சியும் செய்ய முடியாது. அது கலகத்தில்தான் முடியும். புரட்சி என்பது வேறு; கலகம் என்பது வேறு.

பொது, தனியன் ஆகியவற்றின் இயல்பான இந்த உறவு இயங்கியல் உறவாகும். இவற்றைத் திரித்துக் காணக் கூடாது. பொது, தனியனை உள்ளடங்கியதாக இருக்கும். தனியன்கள் பொதுவுக்குள்ளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும். சில நேரங்களில் பொதுவானது தனியனை முற்றாக மறைத்து விடும். வேறு சில நேரங்களில் தனியன்கள் பொதுவை முற்றிலுமாக புறக்கணித்து விடும். இத்தகைய நிலை ஏற்பட்டால் சமுதாயத்தில் பெரும் குழப்பம் ஏற்படும்.

எனவே இவை அனைத்தையும் மனதில் கொண்டு எதிரிடைகளின் போராட்ட விதியை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தொடர்புக்கு: 98947 83657



# சுதந்திரத்தை அச்ச

- டி.ராஜா

**தேசம் 75வது சுதந்திர தினத்தைத் கொண்டாடி வருகிறது. இந்தச் சூழலில் பிரிட்டிஷாருக்கு விசுவாகமாக இருந்த ஆர்.எஸ். எஸ். அமைப்பானது தேச விடுதலைக்கான மதச்சார்பற்ற, அனைவரையும் உள்ளடக்கிய போராட்டத்தின் மகத்தான பாரம்பரியத்தை அதன் வசமாக்கிக் கொள்ள முயலுவது வரலாற்று முரணாகும்.**

75 ஆண்டுகளுக்கு முன்பு, பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் கொடூரப் பிடியிலிருந்து மக்கள் விடுதலை பெற்றபோது, நமது தேசம் ஒரு முக்கியத்துவம் நிறைந்த வரலாற்றுக் கட்டத்தை அடைந்தது. பிரிட்டிஷ் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிரான அரசியல் சிந்தனைகள், சித்தாந்தங்களின் சங்கமம் மற்றும் நூற்றாண்டு காலமாக தொடர்ந்து நீடித்த வெகுமக்கள் போராட்டத்தின் விளைவாக தேசம் விடுதலைப் பெற்றது; பிரிட்டிஷ் கொடுங்கோன்மையின் பிடியிலிருந்து வெகுமக்கள் விடுவிக்கப்பட்டனர்.

தேச விடுதலைக்கான நமது போராட்டம் பிரிட்டிஷாரை வெளியேற்றுவதற்கான ஒரு இயக்கம் என்பதாக மட்டுமின்றி தேசத்தின் வருங்காலத்திற்கான ஒரு செயல்திட்டத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தது.

நமது விடுதலைக்காகப் போரிட்ட மாபெரும் சித்தாந்தங்களுக்கு இடையேயான உரையாடலின் விளைவாகவே, ஏழ்மை, சமத்துவமின்மை ஆகியவற்றிலிருந்து தேசத்தை விடுவிப்பதற்கும் சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குமான அத்தகைய செயல்திட்டமானது உதயமானது. அத்தகைய மாபெரும் சித்தாந்தங்களில் மகாத்மா காந்தியடிகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட காங்கிரஸ் இயக்கத்தின் கொள்கை மற்றும் திட்டங்கள், கம்யூனிஸ்ட்கள் மற்றும் சோசலிஸ்ட்களின் கொள்கை மற்றும் திட்டங்கள் மிகச்சிறந்த முறையில் டாக்டர் அம்பேத்கரால் முன்வைக்கப்பட்ட முற்போக்காளர்களின் சமூக சீர்திருத்த திட்டங்கள் ஆகியவை முதன்மையானவை ஆகும்.

சிந்தாந்த சிந்தனையோட்டங்களுக்கு இடையேயான உரையாடல்கள் மற்றும் விவாதங்கள் ஆகியவை தோற்றுவித்த விழுமியங்கள், காலனி ஆதிக்கத்திற்கு எதிரான நமது போராட்டத்தை மிகச்சிறப்பாக வரையறுத்தன; மதச்சார்பின்மையையும் மக்கள் நலனையும் மையமாகக் கொண்ட வருங்கால இந்தியக் குடியரசுக்கு ஒரு தீர்க்கமான வடிவத்தை வழங்கின. ஆனால், தற்போது அத்தகைய விழுமியங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தேச விடுதலைக்கான நெடிய போராட்டத்தில் எவ்விதத்திலும் பங்கேற்காதது, பிரிட்டிஷாருக்கு ஆதரவாக நின்ற ஆர்.எஸ்.எஸ்.அமைப்பிடமிருந்து அந்த விழுமியங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தேச விடுதலைக்கு வித்திட்ட அந்த மகத்தான விழுமியங்களையும் அவை தற்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதையும் நாம் அறிந்து உணர வேண்டும். அவ்வாறு அறிந்து உணர்ந்திட அழிவுகர ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சித்தாந்த அடித்தளங்களையும், அந்த அடித்தளங்கள் எவ்வாறு நமது தேசத் தலைவர்களின் போராட்ட லட்சியங்கள் ஒவ்வொன்றுக்கும் எதிரானவையாக இருந்தன என்பதையும் நாம் ஆய்வு செய்திட வேண்டும்.

அரசியல் நாம் வென்றெடுத்த போது இந்தியா எத்தகைய ஒரு அரசு முறையை ஏற்க வேண்டும் என்பது ஒரு பெரும் விவாதப் பொருளாக இருந்தது. இந்தியக் குடியரசு உருவாகிக் கொண்டிருந்த அந்த கால கட்டத்தில், 550க்கும் மேற்பட்ட சமஸ்தானங்கள் முழுமையாக இணைக்கப்பட வேண்டியிருந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அமெரிக்க அரசாங்க முறை மற்றும் இங்கிலாந்தின் வெஸ்ட்மின்ஸ்டர் அரசாங்க முறை குறித்த ஆலோசனைகள் நடைபெற்று வந்தன. பெரும்பாலான தலைவர்களால் நாடாளுமன்ற ஜனநாயக முறை தேர்வு செய்யப்பட்டு நமது அரசியல் அமைப்பிலும் நாடாளுமன்ற ஜனநாயக முறையே ஏற்கப்பட்டது. தேச விடுதலையின் பொன் விழாவை முன்னிட்டு நாட்டு மக்களிடையே உரையாற்றிய அப்போதைய குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன், டாக்டர் அம்பேத்கர் உள்ளிட்ட அரசியல் அமைப்பு சட்டத்தின் சிற்பிகள் நாடாளுமன்ற ஜனநாயக முறையை ஏற்பது என்ற தீர்மானகரமான முடிவை மேற்கொண்டது பற்றி விரிவாக எடுத்துரைக்கும் போது கூறியதாவது: “இந்தியாவுக்கு நாடாளுமன்ற ஜனநாயக முறையை ஏற்படுத்தியதன் மூலம், அரசியல் அமைப்புச் சட்டத்தின் வரைவுக்குழு அதிக நிலைத்தன்மைக்கு பதிலாக அதிக பொறுப்புடைமையையே அதன் விருப்பத் தேர்வாகக் கொண்டிருந்தது. இந்த முறையின் கீழ் அரசாங்கமானது ஒவ்வொரு நாளும் உரைகல் கொண்டு பட்டை தீட்டப்படுகிறது.” கூட்டுப் பொறுப்பு எனும் இந்தக் கருத்தானது அரசின் மீதான ஆர்.எஸ்.எஸ்.–ன் நேரடி ஆதிக்கத்தின் காரணமாக தற்போது பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. நாடாளுமன்றத்தை செயல் திறனற்றதாக, தேவையற்றதாக சீர்குலைத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஜனநாயக விரோத ஆர்.எஸ்.எஸ். அமைப்பு பிரதிநிதித்துவ ஜனநாயகக் கோட்பாடு, அரசியல் அமைப்பு சட்ட பாதுகாப்பு அரண்கள் குறித்து அதிருப்தி மட்டுமே கொண்டிருந்தது. ஐரோப்பிய பாசிஸ்ட்டுகளை உயர்த்திப் பிடித்துப் போற்றுவதும், பாசிச தத்துவத் தலைமையை வலியுறுத்துவதும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை ஜனநாயக சமூக அமைப்பின் செயல்பாட்டிற்கு பொருத்தமற்ற அமைப்பாக கட்டமைத்துள்ளது.

ஆர்.எஸ்.எஸ்.அமைப்பின் நிறுவனர் கே.பி.ஹெட்கேவரின் குருவான பி.எஸ்.மூஞ்சே இத்தாலியில் முசோலினியைச் சந்தித்து கூறியதாவது: “இந்தியா மற்றும் இங்கிலாந்தின் பொது மேடைகளில் பாசிச அமைப்புகளைப் போற்றிப் புகழ்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும் போதெல்லாம் எனது குரலை உயர்த்தி புகழ் முழக்கம் எழுப்பிட நான் தயங்க மாட்டேன். பாசிஸ்ட்டுகள் வெற்றியடை நான் வாழ்த்துகிறேன்.”

உயர்மட்ட ஒற்றைத் தலைமைக்கு அடிபணிதல் எனும் விதியை ஆர்.எஸ்.எஸ். இன்றளவும் பின்பற்றி வருகிறது. இந்த நடைமுறை அவ்வமைப்பை ஜனநாயக அரசியல் முறைக்கு பொருத்தமற்றதாகச் செய்துவிடுகிறது. இதில்தான் ஜனநாயக விதிமுறைகள், நியமங்கள் மற்றும் பிரதிநிதித்துவம் ஆகியவற்றிற்கு எதிரான ஆர்.எஸ். எஸ்.–ன் வன்மம் நிலை கொண்டுள்ளது. ஜனநாயகம் பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ்.–ன் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது என்று நாம் சொல்லும்போது, அதற்கான விஷக்கிருமிகளை ஆர்.எஸ்.எஸ்.–ன் அடித்தளம் மற்றும் செயல்பாடுகளில் நாம் காண முடியும்.

**நமது விடுதலைப் போராட்டத்தின் அடித்தளமாக விளங்கிய மற்றுமொரு முதன்மையான விழுமியம் மதச்சார்பின்மையாகும். பிரிட்டிஷாருக்கு எதிரான போராட்டத்தில் இந்துக்களும், இஸ்லாமி யர்களும் தோளோடு தோள் நின்று களம் கண்டனர். எவ்வாறா- யினும், படிநிலைகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளை மையமாகக் கொண்ட இந்து தேசியத்தை நிறுவிட வேண்டும் என்பதே ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர்கள் மற்றும் தத்துவ வாதிகளின் நோக்கம் என்பது அவர்களின் எழுத்துக்களில் இருந்து தெளிவாகத் தெரிகிறது.**





# மின்சார [திருத்தம்] மசே

- கே.முருகன்

**ஒன்றிய பாஜக அரசு மின்சார(திருத்தம்)மசோதா 2022 ஐ ஆகஸ்ட் 8 ஆம் தேதி மக்களவையில் கொண்டு வந்தது. இந்த மசோதா மின்சார சட்டம் 2003ல் பலதிருத்தங்களை முன்மொழிந்துள்ளது.**

மின்சார சட்டம் 2003 மின்துறையை முறைப்படுத்துகின்ற வகையில் கொண்டு வரப்பட்டது. இந்த சட்டப்படி மத்திய,மாநில அளவில் மின்சார ஒழுங்குமுறை ஆனையம்அமைக்க வழிவகுக்கப்பட்டது. இது மாநிலத்திற்குள்ளும், மாநிலங்களுக்கிடையிலும் மின்சாரம் தொடர்பாக எழும் பிரச்சனைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கத்தில் அமைந்தது. தற்போது கொண்டுவந்துள்ள மின்சார(திருத்தம்)

மசோதா 2022ல் குறிப்பிடப்படுவதாவது;

1. ஒரே பகுதியில் மின்வினியோகத்தில் ஈடுபபடுவதற்கு பலருக்கு லைசென்ஸ் வழங்கும்போது உரிமம் பெறுபவர் தனது சொந்த கட்டமைப்பில் மேற்கொள்ள வேண்டும் என்று 2003சட்டத்தில் மாற்றம் செய்து வினியோக முறையை மத்திய அரசு வரையறை செய்யும் என்று கூறியுள்ளது.

2. மின்சாரம் வழங்குவது மற்றும் கட்டணம் தேவைப்படும் கூடுதல் மின்சாரம் வினியோகிப்பவர் வாங்குபவர்களிடையே போடப்படும் ஒப்பந்தம் அடிப்படையில் அனைத்து வினியோகஸ்தர்களும் பகிர்ந்து கொள்வது. மின் வினியோகக்கட்டணம் தொடர்பாக மாநில மின்சார வாரியம் உச்சவரம்பை நிர்ணயம் செய்யும் ஆகியவை 2003 சட்டத்தில் உள்ளவை. தற்போது மசோதாவில் சில அம்சங்களில் மாநில மின்சார வாரியம் குறைந்தபட்ச கட்டணம் நிர்ணயம் செய்யும் என்று மாற்றம் செய்துள்ளது.

3. ஒரே பகுதியில் பலருக்கு வினியோக உரிமம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், ஈடுசெய்யும் இடை மானிய நிதி உருவாக்குதல், அதாவது நுகர்வோர் மின்சாரத்தை ஒரு பிரிவில் இருந்து மின்சாரம் பெறும்போது ஈடு செய்யும் மானிய நிதியை பயன்படுத்தலாம். வினியோக உரிமம் பெருபவர் மீதமாகும் தொகையை ஈடு செய்யும் நிதியில் டெபாசிட் செய்ய வேண்டும். வினியோக உரிமையாளர்களுகிடையில் இடைமானியம் வழங்குவதில் எழுகின்ற நிதி பற்றாக்குறை அதே பகுதியிலும் அல்லது மற்ற பகுதியிலும் பயன்படுத்தலாம் என்று மசோதாவில் கூறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டவைகள் வினியோகஸ்தர்களின் செயல் பாடுகளை முறைப்படுத்துவது தொடர்பான விதிகள் ஒன்றிய அரசால் தீர்மானிக்கப்படும்.

5. பல மாநிலங்களுக்கான மின் வினியோக உரிமையை ஒன்றிய மின்சார ஆனையமே வழங்கும்.

6. வினியோக உரிமை பெறுபவர்கள் ஒன்றிய அரசு வரையறுக்கும்பாதுகாப்பு நிதியை செலுத்த வேண்டும். இல்லையேல் மின்சாரம் வழங்கப்படாது என்று மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

7. ஒப்பந்ததாரர்களின் செயல்பாடுளில் எழும் பிரச்சனை தாவாக்களில் மத்திய, மாநில மின்சார ஆனையங்கள் தலையிடும் அதிகாரம் உண்டு என்பதோடு அவைகளுக்கு சிவில் நீதிமன்றத்திற்கான அதிகாரம் உள்ளவை என்றும் மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

8. புதுப்பிக்கவல்ல மின்சாரம் வாங்குதல் தொடர்பாக மாநில மின்சார வாரியம் அது தொடர்பான கடமைகளை




வினியோஸ்தர்களுக்கு வழங்குவது மட்டுமல்லாமல் குறிப்பிட்ட சதவீதம் வாங்குவதை உறுதிப்படுத்தும் அதிகாரத்தை மாநில மின்சார வாரியத்திற்கு 2003 மின்சார சட்டம் வழங்குகிறது. தற்போதைய மசோதாவில் புதுப்பிக்கவல்ல மின்சாரம் வாங்குவதை கடமைகளை ஒன்றிய அரசு தீர்மானிக்கும் சதவீதத்தில் குறைய கூடாது என்று மசோதா கூறியுள்ளது.

மாநில மின்சார ஆனையத்தை ஒன்றிய மின்சார முகமை அல்லது ஒன்றிய மின்சார ஆனையத்தலைலைவரை தேர்வுக்குழு உறுப்பினர்கள் என்று 2003 சட்டத்தில் உள்ளதில் மாற்றம்செய்து அரசு கூடுதல் செயலாளர் தகுதியில் குறைவில்லாத அதிகாரம் கொண்டவர்களை கொண்டு தேர்வுக்குழுவை ஒன்றிய அரசு நியமனம் செய்யும் என்று மசோதாவில் கூறப்பட்டுள்ளது.மின்சார

# ...சுறுத்துவது எது?

இந்த பேராபத்து குறித்து எச்சரித்த டாக்டர் அம்பேத்கர், "இந்து ராஜ்யம் எதார்த்தமாகும் பட்சத்தில், ஐயங்களுக்கு இடமின்றி, தேசத்திற்கு அது ஒரு மாபெரும் அழிவு ஆகும்." என்று கூறினார். மதச்சார்பற்ற, சமூகநீதியின்பாற்பட்டதாக இந்திய அரசு திகழ்ந்திட வேண்டும்.

சமூகத்தில் பிளவையும், மோதலையும் உருவாக்கும் கருத்தாக்கத்தை முன்னெடுத்த இரண்டாம் சங் சாலக் கான எம்.எஸ்.கோல்வால்கர் எழுதியதாவது: "இந்துஸ் தானத்தில் உள்ள அந்நிய இனத்தவர்கள், ஒன்று, இந்துப் பண்பாட்டையும் மொழியையும் கட்டாயம் ஏற்க வேண்டும். அவர்கள் இந்து மதத்தைப் போற்றிப் புகழ்ந்திடவும், மதித்து ஒழுகிடவும் கற்றுக் கொள்ள வேண்டும்; இந்து பண்பாடு, இந்து தேசியம் மற்றும் இனத்தையும் போற்றுவதைத் தவிர வேறு எந்த ஒரு கருத்தையும் ஆதரிக்கக் கூடாது. தங்களின் தனித்தப் பண்புகளை விட்டொழித்து இந்துத்துவ இனத்தில் கலந்து விட வேண்டும். அல்லது, இந்து தேசியத்திற்கு அடிபணிந்தவர்களாக, குடிமக்களுக்கான உரிமைகள்கூட இல்லாமல், எவ்வித சிறப்பு சலுகைகளுமின்றி இந்திய நாட்டில் வசிக்கலாம்."



பிரிட்டிஷாரை விரட்டியடித்திட ஒட்டுமொத்த தேசமும் அணி திரண்டு கொண்டிருந்தபோது, மக்களிடையே பகைமையை உருவாக்குவதில் ஆர்.எஸ்.எஸ். தீவிரமாக இருந்தது. ஹிட்லர் மற்றும் முசோலினியின் தீவிரத் தன்மை கொண்ட பிரிவினைவாத சித்தாந்தத்தில் இருந்து உத்வேகம் பெறும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர், இந்துகளை ஒன்றிணைத்து தங்களின் பிரிவினைவாத வலைக்குள் சிக்க வைத்திட இஸ்லாமியர் குறித்த அச்ச உணர்வை கண்டறிந்தனர். அவர்களின் இந்தச் சிந்தனைப் போக்கு தேசத்தின் கடந்த காலத்தின் மீது போர்ப்பிரகடனம் செய்திட ஆர்.எஸ்.எஸ்.ஐ தூண்டியது. இஸ்லாமியர்களை கொடூரமானவர்களாகச் சித்தரிக்கும் முயற்சிகள் தொடர்ந்தன. நமது விடுதலைப் போராட்ட இயக்கத்தின் மதிப்புமிக்க தலைவர்களில் ஒருவர் கூட முகலாயர்களைப் படையெடுப்பாளர்கள் என்றோ கொள்ளையர்கள் என்றோ புழுதிவாரி தூற்றியதில்லை. ஆனால், இஸ்லாமியர்கள் குறித்த நீண்ட கால மோதல்களும், முரண்பாடுகளும் ஆர்.எஸ்.எஸ்.க்கு அத்தியாவசியமானதாக இருந்தது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு சர்தார் வல்லபாய் பட்டேலை வரித்துக் கொள்ள மிகக்கடுமையாக முயன்று வருகிறது. இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாட்டில் சர்தார் பட்டேல் ஆற்றிய வரலாற்று சிறப்புமிக்க தலைமை உரையில், "ஏறத்தாழ இரண்டு நூற்றாண்டுகளாக இந்தியா தொடர்ந்து சுரண்டப்பட்டு வருகிறது." என்று குறிப்பிட்டுள்ளார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பைப் பொருத்தவரையில், சுல்தான்கள் மற்றும் முகலாயர்கள் ஆட்சிக் காலங்களில் மட்டுமே இந்தியா சுரண்டப்படுகிறது. மேலும், பிரிட்டிஷார் மீதான அவர்களின் விசுவாசம் உறுதியாக உள்ளது. நமது தேசத்திற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்தான் எதிரியாக இருந்தது. ஆனால், வகுப்புவாத ஆர்.எஸ்.எஸ்.க்கு இஸ்லாமியர்கள்தான் எதிரிகள். நாம் எதனை எதிர்த்துப் போராடுகிறோம் என்பதில் கண்டறியப்படும் வேறுபாடுதான் இந்திய தேசிய வாதத்திற்கும் ஆர்.எஸ்.எஸ்.அமைப்பின் குறுகிய இந்துத்துவ தேசியவாதத்திற்கும் இடையிலான மிக முக்கியமான வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. தேசிய விடுதலைப் போராட்ட காலத்தின் முக்கியமான தருணத்திலும்கூட, ஆர்.எஸ்.எஸ். தேசத்திற்கு எதிராகவே நின்றது என்பது தெளிவாகிறது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி, விடுதலைக்கான நமது போராட்டத்தில் சமூக சீர்திருத்தம் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகவே இருந்தது. இந்த சமூக சீர்திருத்த செயல்திட்டத்தின் இருபெரும் கூறுகளாக சாதியும், சமூகத்தில் பெண்கள் நிலையும் தொடர்புடையவைகளாக இருந்தன. இந்தியாவில் நிலவும் சாதிய முறைக்கு மனுஷ்மிருதிதான் காரணம் என்று டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் கூறினார். சாதிய இழிவுகளை எதிர்த்து 1927 ஆம் ஆண்டு டிசம்பர் 25 அன்று டாக்டர் அம்பேத்கர் பொதுவெளியில் மனுஸ்மிருதியைத் தீயிட்டு கொளுத்தினார். சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக கடுமையாகப் போராடிய டாக்டர் அம்பேத்கர், அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலமாக வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிய பாதுகாப்புகளை உருவாக்கி அளித்து, அரசியல் சமத்துவத்தை நிறுவினார். ஆனால், பிராமனீய ஆர்.எஸ்.எஸ்.க்கு, சமூதாயத்தில் அதிகாரம் மற்றும் சட்டத்தின் ஊற்றாக மனுஸ்மிருதியே தொடர்ந்தது. அவர்களால் சமத்துவத்தை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஒப்புதல் கிடைத்து ஒருவார காலம் முடிவதற்குள்ளாக 1949 நவம்பர் 30 அன்று ஆர்.எஸ்.எஸ்.–ன் அதிகாரப்பூர்வ இதழான ஆர்கனைஸரில் பிரசுரமானது பின்வருமாறு: "மனுஸ்மிருதியில் உள்ள மனுவின் சட்டங்கள் உலக மக்கள் அனைவராலும் போற்றப்படுகிறது; அவர்களின் தன்னிச்சையான கீழ்படிதலையும் அனுசரித்தலையும் பெறுகிறது. ஆனால் நமது அரசியலமைப்புச் சட்ட பண்டிதர்கள் இதனை உணர்ந்தாரில்லை."

**"சாதிகள் தேசவிரோதமானவை" என்று டாக்டர் அம்பேத்கர் அரசியல் நிர்ணய சபையில் கர்ஜித்தார். சமூக வாழ்வில் சாதிகள் பிரிவினையை உண்டாக்குகின்றன. சாதிகளுக்கிடையே பகைமை மற்றும் பொறாமையை ஏற்படுத்துவதால் சாதிகள் தேசவிரோதமானவை ஆகும். சாதிய பாகுபாட்டை முன்னிறுத்தும் மனுஸ்மிருதியை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் ஆர்.எஸ்.எஸ். அதன் தேச விரோத தன்மையை மீண்டும் ஒரு முறை நிரூபித்து உள்ளது.**

75வது சுதந்திர தினத்தைக் கொண்டாடி வரும் இத்தருணத்தில், பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை என்று நமது விடுதலைப் போராட்ட வீரர்கள் எதனைக் கருதினார்கள் என்பது குறித்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களின் மகா உன்னதமான தியாகங்கள் குறித்தும், சுதந்திர இந்தியாவிற்கு எது தேவை என்று அவர்கள் விரும்பியது குறித்தும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக, சமத்துவ மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவுக்காகவே காந்தியடிகள், சுபாஷ் போஸ் தொடங்கி பகத்சிங், சந்திரசேகர ஆசாத் வரையிலான தியாகிகள் தங்களை அர்ப்பணித்தார்கள். இவர்களில் ஒருவர் கூட மத அடிப்படைவாத இந்து தேசத்திற்காக போராடியவர்கள் இல்லை என்பதை நாம் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்ட வேண்டும். சுதந்திரத்தின் உண்மையான சாராம்சத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்றால் சுதந்திர இந்தியா பிரதிபலிக்கும் விழுமியங்கள், அவற்றுக்காக தியாகம் புரிந்தவர்கள், அந்த விழுமியங்களுக்கு இன்று அச்சுறுத்தல் உண்டாக்குபவர்களை நாம் அடையாளம் கண்டாக வேண்டும். நமது தேசத்தின் சுதந்திரத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ள ஜனநாயகம், மதச்சார்பின்மை மற்றும் சமத்துவம் ஆகியவற்றிற்கு அச்சுறுத்தல் உண்டாக்குபவர்களே உண்மையில் தேச விரோதிகள் ஆவர்.

தேசப்பற்றுக்கான சான்றிதழ் வழங்கிடவும், சுதந்திரத்தை மறுவரையறை செய்திடவும், பிரிட்டிஷ் கைகூலிகளான ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் தற்போது முயலுவது கேலிக்குறியதாக இருக்கிறது. சுதந்திரம் எதைக் குறிக்கிறது என்பதை உணர்ந்து அதனைப் பாதுகாத்திடப் போராட வேண்டியது, நமது கடமையாகும். சுதந்திரத்திற்காக நமது முன்னோர்கள் ஏற்றுக் கொண்ட கடும் துன்பங்ளை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நமது தேசத்தின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் தீய சக்திகளை நாம் புறந்தள்ளும் சூழ்நிலை எழுந்துள்ளது.

தமிழில்: **அருண் அசோகன்**

# ...சோதா 2022

மேல் முறையீடு டிரியுபுனல் எண்ணிக்கை தலைவர் உட்பட 3 என்று தற்போது உள்ளதில் 4 என்று மாற்றம் செய்தும் அதில் ஒருவர் சட்ட பின்புலம் உள்ளவராகவும் இருக்க வேண்டும் என்று மசோதா கூறுகின்றது. இவைகளை ஒன்றிய அரசு வரையறை செய்யும் என்று மசோதா கூறுகின்றது.

மக்களவையில் மசோதா தாக்கல் செய்த போது இடதுசாரி கட்சிகள், தி.மு.க மற்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மசோதாவை திரும்ப பெறவேண்டும் என்று வலியுறுத்தினர் பா.ஜ.க.வின் நட்பு கட்சிளான பிஜூ ஜனதா தளம், ஒய்.எஸ்.ஆர்., காங்கிரஸ் ஆகியவையும் மேலும் பரந்த அளவில் ஆலோசனை செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

போராட்டம் நடத்திய விவசாயிகளுக்கு எழுத்துபூர்வமாக அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கு எதிரானது இந்த மின்சார திருத்த மசோதா 2022 என்று மின்பொறியாளர்கள் தேசிய ஒருங்கிணைப்புக்குழு கருத்து தெரிவித்ததோடு அன்றைய நாளில் ஐதாராபாத் உள்பட பல்வேறு நகரங்களில் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.மேலும் மசோதா நிறைவேற்றப்பட்டால் நாடுதழுவிய போராட்டத்தை முன்னெடுப்போம் என்று அறிவித்துள்ளனர். மக்களவையில் எழுந்த எதிர்ப்பு காரணமாக மசோதா நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிறைவாக இந்த மின்சார திருத்த மசோதா2022 மின்துறையை தனியார் கைகளில் கொண்டு சேர்த்து கடுமையான கட்டண உயர்வுக்கு வழிவகுத்து பொதுமக்களை இன்னலுக்கு ஆளாக்கும் மாநில அரசுகளின் உரிமையை பறித்து அதிகாரத்தை ஒன்றிய அரசு வசம் குவிக்கும் என்பதில் ஐயமில்லை. விவசாயிகள் நத்திய எழுச்சிப்போராட்டத்தைப்போல் தொழிலாளர்கள் விவசாயிகள் மீண்டும் தலைநகரில் புயல் போல் மையம் கொள்ள வேண்டும். புறப்படுக !!

# உலக நூலகத் தந்தை எஸ்.ஆர்.அரங்கநாதன் 130-வது ஆண்டுவிழா



உலக நூலகத் தந்தை எஸ்.ஆர்.அரங்கநாதனின் 130 வது ஆண்டுவிழா சீர்காழியில் கொண்டாடப்பட்டது. சீர்காழி கிளைநூலகமும் வாசகர் வட்டமும் இணைந்து நடத்திய இவ்விழா சீர்காழி ச.மு.இ. மேனிலைப் பள்ளியில் நடைபெற்றது. விழாவிற்கு வாசகர் வட்டத் தலைவர் செம்மலர் வீரசேனன் தலைமை தாங்கினார். நல்லாசிரியர் அறிவுடைநம்பி முன்னிலை வகித்தார். இராமநாதனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. சட்டமன்ற பன்னீர்செல்வம், நகர்மன்றத் தலைவி பரமேஸ்வரி நகர்மன்றத் உறுப்பினர் துணைத்தலைவர் சுப்பராயன், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் காமராசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாசகர் வட்டப் பொறுப்பார்கள், உதவியாளர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

## உலக நூலகத் தந்தை எஸ்.ஆர்.அரங்கநாதன் பெயரில் சீர்காழியில் நூலகம்

### தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற கோரிக்கை நிறைவேற்றம்

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் உலக நூலகத் தந்தை என அழைக்கப்படும் எஸ்.ஆர்.அரங்கநாதன் பிறந்து, வளர்ந்தார். இவர் பிறந்த சீர்காழியில் உள்ள கிளை நூலக கட்டிடம் பல ஆண்டுகளாக குறுகிய இடத்தில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்தது. இதனால் நூலகத்திற்கு வரும் வாசகர்கள் அவதி அடைந்ததோடு, மழைக்காலங்களில் நூல்கள் நனைந்து சேதம் ஏற்பட்டு வந்தது. இந்நிலையில் நடைபெற்றது. நூலகத்திற்கு புதிய கட்டிடம் கட்ட வேண்டும் என பல ஆண்டுகளாக வாசகர்கள் கோரிக்கை வைத்தனர். அதனை ஏற்று பன்னீர்செல்வம்எம். எல்.ஏ சட்டசபையில் இதனை வலியுறுத்தி புதிய நூலகம் கட்டிடம் கட்டித் தர முதல் அமைச்சரிடம் கோரிக்கை வைத்தார். முதல் அமைச்சர் உத்தரவின் பேரில் புதிய கட்டிடம் கட்ட ரூ.1.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனையடுத்து 4200 சதுர அடியில்



2 தளங்களுடன் பல்வேறு வசதியுடன் புதிய ஒன்றிய மாதிரி நூலக கட்டிடம் கட்டப்பட உள்ளது.

அடிக்கல் நாட்டு விழாவிற்கு நகர்மன்றத் தலைவர் துர்காபரமேஸ்வரி தலைமை வகித்தார். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்.

வாசகர் வட்ட தலைவர் செம்மலர், வீரசேனன் முன்னிலை வகித்தனர். சமுக ஆர்வலர் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# சுதந்திரதின விழா

**அஜாய்பவன்:** 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு புதுடில்லியில் உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான அஜாய்பவனில் அகில இந்தியப் பொதுச் செயலாளர் டி.ராஜா தேசியக் கொடியை ஏற்றினார். இந்நிகழ்வில் கட்சி அலுவலகப் பணியாளர்கள் மற்றும் டில்லி பகுதியைச் சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

**பாலன் இல்லம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் ஆக.15 அன்று கொடியேற்று விழா நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு தேசியக் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்.

**தேன்கனிக்கோட்டை:** தேன்கனிக்கோட்டையில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் கொடியேற்றினார்.

**கோவை :** கோவை ஜீவா இல்லத்தில் தேசிய கொடியை மில் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ. ஏற்றி வைத்தார். கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி தலைமை தாங்கினார். வழக்கறிஞர் கே. சுப்பிரமணியம் சுதந்திர தின உரை நிகழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் எஸ்.ராதாகிருஷ்ணன், மு.வ. கல்யாணசுந்தரம், வி.ஆர்.பாண்டியன், இந்திய மாதர் தேசிய சம்மேலனத்தின் மாவட்ட செயலாளர் கே.சுமதி, அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில தலைவர் எம்.குணசேகர், ஜி.பி.சக்திவேல், கே.ஆர்.தங்கராஜ், ஆர்.கந்தசாமி, ஜீவா, கலை.அஸ்வினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டத்தில் சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகங்களில் தேசிய கொடி ஏற்றும் விழா நடைபெற்றது. செட்டியார்பட்டியில் ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி தலைமையில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி ஏற்றி வைத்தார். வத்திராயிருப்பில் வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமையில் மாநில குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ ஏற்றி வைத்தார். சாத்தூரில் வட்டசெயலாளர் சுவாமிநாதன் தலைமையில் தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார் ஏற்றி வைத்தார்.அருப்புக்கோட்டையில் வட்ட செயலாளர் முனியசாமி தலைமையில் மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார் ஏற்றி வைத்தார். விருதுநகரில் ஒன்றிய செயலாளர் சக்கணன் தலைமையில் மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் ஏற்றி வைத்தார். இராஜபாளையத்தில் நகர செயலாளர் பி.கே.விஜயன் தலைமையில் ஏஐடியுசி அமைப்புச் செயலாளர் வி.இரவி ஏற்றி வைத்தார். சத்திரப்பட்டியில் ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன் தலைமையில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி ஏற்றி வைத்தார். ஆலங்குளத்தில் துணை செயலாளர் கணேசன் தலைமையில் ஒன்றிய செயலாளர் நடராஜன் ஏற்றி வைத்தார். மற்றும் பல இடங்களில் தேசிய கொடி ஏற்றி வைக்கப்பட்டது

**தருமபுரி:** தருமபுரி மாவட்ட ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் 75வது சுதந்திர தின கொடி ஏற்று விழா தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு நடைபெற்றது. ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.மணி தலைமை வகித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் இந்திய தேசிய கொடி ஏற்றி வைத்தார். நிகழ்ச்சியில் முன்னாள் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாநிலக்குழு உறுப்பினர் கா.சி.தமிழ்க்குமரன், பிஎஸ்என்எல் என்எப்டிஈ தொழிற்சங்க நிர்வாகிகள் விஜயகுமார்,கிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற நிர்வாகி வணங்காமுடி,உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட தலைவர் மனோகரன் மற்றும் ஆட்டோ சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**நல்லம்பள்ளி :** தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் இலளிகம் சுதந்திர போர்ராடவீரர் தியாகி ஆர்பச்சாகவுண்டர் நினைவு இல்லம் முன்பு எல்.ஆர். அபிமன்னன் தலைமையில் தேசிய கொடியினை இலளிகம்




முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜெ.பிரதாபன் ஏற்றி வைத்து சுதந்திர தின உரை நிகழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில் எல்.சி.துரைசாமி, எல்.பி.முத்து, எஸ்.ஏ.பி.கதிர்வேல், அலமேலு, காளியம்மாள், கோவிந்தம்மாள், பத்மாவதி மற்றும் பள்ளி மாணவ மாணவியர் கலந்துக் கொண்டார்.

**தஞ்சாவூர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தெற்கு மாவட்டம் சார்பில் தஞ்சை கீழராச வீதியில் உள்ள கட்சிஅலுவலகம் முன்பு கொடியேற்று விழா தஞ்சை மாநகர செயலாளர் ஆர்.பிரபாகர் தலைமையில் நடை பெற்றது. தஞ்சை ஒன்றிய செயலாளர் ஜார்ஜ் துரை முன்னிலையில் கட்சியின் தெற்கு மாவட்ட செயலாளர் முத்து. உத்திராபதி தேசியக்கொடியினை ஏற்றிவைத்து உரையாற்றினார். நிகழ்வில் கட்சியின் மூத்த தோழர் ஜி.கிருஷணன், இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் ச.சுதந்திர பாரதி (மருத்துவர்), ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, டி.என்.சி.எஸ்.சி. தியாகராசன், ஆசிரியர் சுந்தரமூர்த்தி மற்றும் கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.




**திண்டுக்கல் :** திண்டுக்கல் மாவட்டம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மூத்த தோழர் டாக்டர் வெள்ளைச்சாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன், திண்டுக்கல் மாநகரச் செயலாளர் கே.ராஜாங்கம், மாநகர துணைச் செயலாளர்கள் கே.பிச்சைமணி, கே.சுப்பிரமணி மற்றும் எம்.பழனியப்பன், ஜோசப், இளங்கோ, பஞ்சவர்ணம், எம்.சுப்பையா, தொத்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஈரோடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந்துறை ஒன்றியக்குழு அலுவலகம் “ஜீவா இல்லம்“ முன்பு, கட்சியின் ஒன்றியச் செயலாளர் வி.சி.செந்தில் குமார் தலைமையில் கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. ஈரோடு தெற்கு மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.சின்னசாமி தேசியக் கொடியேற்றி வைத்து உரையாற்றினார். ஒன்றியத் துணைச் செயலாளர் கே.ஆர்.தங்கவேல், ஒன்றியப் பொருளாளர் வி.சி.சாமிநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஒன்றிய துணைச் செயலாளர் ஜெ.உமாநாத் சிங் நன்றி கூறினார்.

**காஞ்சிபுரம்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் ஆலந்தூர் தொகுதி குழு சார்பில் க.பல்லாவரம் “7” வது வார்டு ஜீவா நகரில் மாவட்ட குழு உறுப்பினர் ஜா.பூபாலன் தலைமையில் ஆர்.எஸ்.பாஷா கொடியேற்றினார். க.பல்லாவரம், சீனிவாச பிள்ளை தோட்டத்தில் ஆலந்தூர் தொகுதி குழு செயலாளர் எஸ்.வெங்கடேசன் தலைமையில் பம்மல் ஏ.ராஜேந்திரன், பிள்ளையார் கோவில் தெருவில் காஞ்சிபுரம் மாவட்ட குழு உறுப்பினர் கே.முனுசாமி தலைமையில் காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் பி.கார்த்திக், ஜி.எஸ்.டி. ரோடு கண்ணபிரான் கோயில் தெரு சந்திப்பில் இ.மதி தலைமையில் காஞ்சிபுரம் மாவட்ட குழு உறுப்பினர் ஜா.பூபாலன் ஆகியோர் தேசிய கொடி ஏற்றினர்.

பல்லாவரம் பஸ் நிலையம் அருகே அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு பல்லாவரம் கிளை செயலாளர் கே.ரவி மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தினார்.



**சோமரசம்பேட்டை:** திருச்சி மாவட்டம், சோமரசம்பேட்டையில் உள்ள ஏஐடியூசி தலைமை அலுவலகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் சங்கம் மணிகண்டம் ஒன்றிய குழு சார்பில் ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்தழகு தலைமையில், ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.முருகன் தேசியகொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார். இதில் சிபிஐ ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துலெட்சுமி, ஏஐடியுசி பெண்கள் கட்டட சங்க மாநில குழு உறுப்பினர் டி.நிர்மலா, ஏஐடியூசி தூய்மைப் பணியாளர் சங்க செயலாளர் ஜெ.நதியா மற்றும் பல்வேறு தோழர்கள் கலந்து கொண்டனர். ஏஐடியூசி பெண்கள் கட்டட சங்க மாநில துணை ஒருங்கிணைப்பாளர் எம்.மருதம்பாள் நன்றி கூறினார்.

**அரியலூர்:** மாவட்ட தலைநகர் அரியலூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஏஐடியுசி அலுவலகம் முன்பு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அரியலூர் ஒன்றிய செயலாளர் து.பாண்டியன் முன்னிலை வைகிக்க, ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் டி. தண்டபாணி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

நிகழ்ச்சியில் சிபிஐ மாவட்ட செயலாளர் சொ.ராமநாதன், திருமானூர் ஜி.ஆறுமுகம், மு.கனகராஜ், அரியலூர் நகரம் மகளிர் சுய உதவி குழு பொ.சின்னப்பொண்ணு, பெ.லட்சுமி உள்பட பலர் திரளாக கொடியேற்று விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**மணப்பாறை ;** மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கொடியேற்று நிகழ்ச்சிக்கு சிபிஐ ஒன்றிய செயலாளர் தங்கராசு தலைமை வகித்தார். நகர செயலாளர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார்.

த.இந்திரஜித் தேசியக் கொடி ஏற்றி சிறப்புரை நிகழ்த்தினார். பழனிசாமி உறுதிமொழி வாசித்தார்.

மாவட்ட குழு உறுப்பினர்கள் சௌக்கத்அலி, ராகமத்துனிஷா, ராஜேந்திரன், ரவிச்சந்திரன், பெருமாள், கணேசன், நகர் மன்ற உறுப்பினர் மனோன்மணி உட்பட நகர, ஒன்றிய தோழர்கள் உறுதிமொழி ஏற்றனர்.

**ஆண்டிபட்டி:** ஆண்டிபட்டியில் ஏஐடியூசி சார்பில் தேசிய கொடி மற்றும் ஏஐடியுசி கொடியேற்றப்பட்டது. நிகழ்ச்சிக்கு பிச்சைமணி தலைமை தாங்க, சென்றாயப்பெருமாள் கொடியேற்றினார். சந்திரன், பிரபாகரன், மீனாட்சிசுந்தரம், ராமநாதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**மதுரை:** மதுரையில் தேசிய கொடியினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முன்னாள் மாவட்ட செயலாளர் இரா.ஜெயராமன் ஏற்றினார். இந்நிகழ்வில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் எம்.நந்தாசிங், பகுதி செயலாளர்கள் எம்.இருளாண்டி, ஜனசக்தி என்.ஜீவா, ரவிச்சந்திரன், இளைஞர் பெருமன்ற எஸ்.பழனிமுருகன் மற்றும் மாவட்டகுழு உறுப்பினர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**மதுரை புறநகர் :** மதுரை புறநகர் மாவட்டம் கப்பலூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சுதந்திர தினம் ஊராட்சி மன்ற துணைத் தலைவரும் சிபிஐ உறுப்பினர் எம்.ஜெயராமன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

மூத்த தோழர் பெருமாள் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். பின்னர் தோழர் பெருமாளுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

விழாவில் சிபிஐ திருமங்கலம் ஒன்றிய செயலாளர் நல்ல குரும்பன் முன்னிலை வகித்தார். மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் பி.முத்துவேல் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் எஸ்.கே.எம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சந்தனம், மாவட்ட குழு உறுப்பினர் ரவிவர்மா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மெய்யழகு, மகாமுனி, அழகம்மாள் உள்பட பலர் திரளாக கொடியேற்று விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



– எஸ்.மீனாட்சிசுந்தரம்

# பஞ்சமி: வெறும் நிலமல்ல... சமூக மாற்றத்திற்கான ஒரு விதை!

**நிலம் எங்கள் உடைமை!**
**நிலம் எங்கள் உரிமை!**
**நிலம் எங்கள் உயிர்!**

என்ற முழக்கங்களை முன்வைத்து தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை நிலைநாட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பில் பஞ்சமி நில மீட்பு போராட்டத்தினைத் துவங்கியுள்ளோம்.

தமிழ்நாட்டின் வறட்சியான மாவட்டங்களில் ஒன்று – திண்டுக்கல். இந்த மாவட்டத்தில் விவசாயத்தையும் விவசாயம் சார்ந்த இதர தொழில்களையும் சார்ந்துதான் ஆயிரக்கணக்கான விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை நடத்தி வருகின்றனர்.

பஞ்சமி நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட மாவட்டங்களில், அதிக எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட மாவட்டங்களில் திண்டுக்கல் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் 12 லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்கள் வழங்கப்பட்டதில், திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 3204 ஏக்கர் நிலப்பரப்பு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

இந்தியச் சமூக அமைப்பில் மனுதர்மத்தின் அடிப்படையில் மனிதர்கள் சாதிய ரீதியாகப் பிளவுபடுத்தப்பட்டனர். நான்கு வர்ணத்திலும் சேர்த்துக்கொள்ளப்படாத மக்கள் திரளைப் பஞ்சமர்கள் என்று வகைப்படுத்தி, விலங்குகளைக் காட்டிலும் கீழான நிலையில் வைத்துச் சுரண்டினார்கள். இவர்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள இடங்களில் குடிசை அமைத்து வாழ்ந்திட வேண்டும். தீண்டத்தகாதவர்கள் என்று சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்ட இந்த மக்கள் அனுபவித்த/அனுபவித்து வரும் துன்பங்கள் ஏராளம்!

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியராகப் பணிபுரிந்த ஜேம்ஸ் ட்ரெமென்கீர் என்பவர், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும், புறக்கணிக்கப்பட்ட பஞ்சமர்களின் வாழ்வியல் நிலை மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்று கருதினார்; பஞ்சமர் குறித்த அறிக்கை ஒன்றைத் தயாரித்து ஆங்கிலேய அரசிடம் 1891 ஆம் ஆண்டு தாக்கல் செய்தார். அந்த அறிக்கையில், பஞ்சமர்களுக்கு நிலம் வழங்குவதன் மூலம் அவர்கள் வாழ்வை மேம்படுத்த இயலும் என்ற கருத்தைப் பதிவு செய்திருந்தார். இந்த அறிக்கை ஆங்கிலேய நாடாளுமன்றத்தில் 1892, மே 16 ஆம் தேதி விவாதத்துக்கு வந்ததை ஒட்டி, பஞ்சமி நிலம் தொடர்பான சட்டம், 30 செப்டம்பர் 1892 இல் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பஞ்சமிநில சட்டப்படி இந்தியா முழுவதும், 25 இலட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பட்டியலின மக்களுக்கு இலவசமாக அரசால் வழங்கப்பட்டது. அன்றைய சென்னை மாகாணத்தில் மட்டும் பட்டியலின மக்களுக்கு 12 லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் இலவசமாக அரசால் வழங்கப்பட்டது. இந்த நிலங்களில், பட்டியலின மக்கள் பயிர் செய்தோ, வீடுகள் கட்டிக்கொண்டோ அனுபவிக்கலாம். முதல் பத்தாண்டுகளுக்கு யாருக்கும் விற்கவோ, தானம் செய்யவோ, அடமானம் வைக்கவோ, குத்தகைக்கோ விடக் கூடாது; அதன்பிறகு அவர்கள் விற்பதாக இருந்தால், அவர்கள் வகுப்பைச் சார்ந்தவர்களிடம் **(Depressed Class)** தான் விற்கவோ, தானம் செய்யவோ, அடமானம் வைக்கவோ, குத்தகைக்கு விடவோ உரிமை வழங்கப்பட்டது. வேறு வகுப்பினரிடம் விற்றால் அந்த விற்பனை செல்லாது. மீறி வாங்கினால், எந்த காலத்திலும், வாங்கியவரிடமிருந்து, அரசு அந்த நிலங்களைப் பறிமுதல் செய்யலாம். அதற்கு நஷ்ட ஈடு கிடையாது என்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டது. இத்தகைய சட்ட ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுடன் பஞ்சமருக்கு வழங்கப்பட்ட நிலங்கள் பெரும்பாலும் ஊருக்கு ஒதுக்குப்புறமாக, விளைநிலமற்ற மேடுகள் நிறைந்த, சமமற்ற நிலமாகவும், நீர்நிலையற்ற நிலமாகவும், மானாவரி நிலங்களாகவே இருந்தன.

தேச விடுதலைக்குப் பிறகும், ஆங்கிலேய அரசு பின்பற்றி வந்த ரயத்து முறையையே நமது இந்திய அரசும் வலியுறுத்தியது. பஞ்சமி நிலங்களைப் பாதுகாக்கும் பொருட்டு வருவாய்த்துறையின் கீழ் நடைமுறையிலும், ஆவணங்கள் வழியிலும், நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அரசாணைகள் உருவாக்கப்பட்டன. அதன்படி, வருவாய்த்துறையின் கீழ் இயங்கும் கிராம நிர்வாக அலுவலகத்தில் கண்டிஷன் ஜாரி ஆவணப்பதிவு ஏடாக தனியாக பராமரிக்கப்பட வேண்டும். மேலும், பத்திரப் பதிவினைத் தடை செய்யும் பொருட்டு ஜீரோ மதிப்பில் ஆவணமாகப் பராமரித்து ஒவ்வொரு பசலி ஆண்டிலும் நிலங்களை ஆய்வு செய்து நிபந்தனைகள் மீறப்பட்டு உள்ளனவா என்பதை அறிக்கையாக தயார் செய்து மாவட்ட வருவாய்த் துறையிடம் வழங்க வேண்டும்.

மேலும், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வியல் நிலைகளை மேம்படுத்துவதற்காக, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 366 பிரிவு 24 **(scheduledcaste)** பட்டியலின மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு சட்ட சரத்துகள் உருவாக்கப்பட்டன. சட்டப் பாதுகாப்புகள் அனைத்தும் எழுத்து வடிவங்களில் மட்டுமே இருந்ததே தவிர, தாழ்த்தப்பட்ட மக்களைச் சட்டங்களும், அரசு நிர்வாகமும் பாதுகாக்க தவறிவிட்டது என்பதே உண்மை ஆகும்.



தமிழகம் முழுவதிலும் பஞ்சமருக்கு வழங்கப்பட்ட 12 லட்சம் ஏக்கர் நிலத்தில், 1,26,013 ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே தற்போது அனுபவத்தில் உள்ளது. 1,73,887 ஏக்கர் நிலங்கள் தலித் அல்லாத இனத்தவரிடம் சட்டத்துக்குப் புறம்பாக முடங்கிக் கிடக்கிறது. அபகரிக்கப்பட்ட இந்த நிலங்களை மீட்டு தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் திண்டுக்கல் மாவட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பஞ்சமி நிலங்கள் குறித்த விவரங்களை ஆவணங்களாகப் பெற வேண்டும் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அதற்கான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற செயல்திட்டத்துடன் 2012 லிருந்து 2019 வரை தொடர்ச்சியாக ஆவணங்கள் பெறும் பொருட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக, திண்டுக்கல் மாவட்டம் முழுமைக்கும் ஆவணங்கள் எடுக்கப்பட்டு எவ்வளவு நிலங்கள் தாழ்த்தபட்ட மக்களின் கையில் இருக்கிறது? எவ்வளவு நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருக்கிறது? என்பது பற்றிய முழு விவரங்கள் திரட்டப்பட்டன.

தங்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட நிலத்திற்குள் பஞ்சமர்கள் செல்வதற்கும், நில உழவடை செய்வதற்கும் ஆதிக்க சமூகத்தினர் தடைகளையும் அச்சுறுத்தல்களையும் உருவாக்கி வருகின்றனர். இதுவே இன்று வரை நிலவி வரும் எதார்த்த நிலை ஆகும். தொடரும் அச்சுறுத்தல்கள், பாசன வசதிக்கு தண்ணீர் மறுப்பது, பொருளாதார பிரச்சினைகள் ஆகியவற்றை மையமாக வைத்து பெரும் திரளான தாழ்த்தப்பட்ட மக்களை அவர்களின் நிலத்தில் இருந்து வெளியேறச் செய்தனர். எஞ்சியவர்கள் இவற்றையெல்லாம் சமாளித்து நில உழவடை செய்து வாழ்ந்து வந்த நிலையில், நகரமயமாக்கலின் விளைவாக, நிலத்தின் மதிப்பு உயர்ந்தது. பஞ்சமர்களின் அறியாமை மற்றும் பொருளாதார பிரச்சனைகளைப் பயன்படுத்தி ஆதிக்க சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நிலங்களை அபகரித்ததோடு, முறைகேடாக, போலி ஆவணங்களைத் தயார் செய்து, நிலவகை மாற்றங்கள் செய்துள்ளனர். நிலங்கள் அனைத்தும் தொழிற்சாலை கட்டிடங்ளாகவும், வீட்டுமனை இடங்களாகவும், வணிக வளாகங்களாகவும், நிலவுடைமை ஆதிக்க வர்க்கத்தின் விளை நிலங்களாகவும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 1959 லிருந்து 1979 வரையிலான இந்த இடைப்பட்ட காலத்தில் தான் அதிகப்படியான நிலங்கள் முறைகேடாக அபகரிக்கப்பட்டுள்ளதாக ஒரு ஆய்வு தெரிவிக்கிறது.

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் வாகரை கிராமத்தில் பஞ்சமருக்கு ரிசர்வ் செய்யப்பட்ட கண்டிஷன் ஜாரி நிலவகை என அரசால் ஆவணப்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் பஞ்சமி நிலங்களை சட்டத்துக்குப் புறம்பாக, ராயல் கிளாசிக் நிட்ஸ் இந்தியா பி லிட் என்ற நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்து அபகரித்ததோடு, இந்த நிலப்பகுதியில் தொழிற்சாலை கட்டிடங்களைக் கட்டியுள்ளனர். ஆவணங்களின்படி 1898 லிருந்து நிபந்தனையுடன் கூடிய ஒப்படை பதிவேடுகளின் அடிப்படையில் பஞ்சமர்களுக்கு ரிசர்வு செய்யப்பட்ட நில ஆவணமாக பராமரிக்கப்பட்டு, அந்நிலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உழைப்பின் மூலம் நிலத்தை கழனி ஆக்கி நில உழவடை செய்து வந்தனர். காலப்போக்கில், இப்பகுதியில் ஆதிக்கச் சமூகத்தினரால் நிலங்கள் அபகரிக்கப்பட்டு உள்ளது. நிலவுடைமை மேம்பாட்டு திட்டம் 1984 பிறகு முறையும் முழுமைக்கும் திருத்தப்பட்டு நிலவகை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு யார் காரணம்? ஆவணங்களை முறையாக பராமரிப்பதற்கு தகுதியற்ற அரசு நிர்வாக முறைகளே இவர்களின் நிலங்கள் பறிபோனதற்கு முக்கிய காரணம் ஆகும்.

இப்பகுதி வாழ் மக்களின் பஞ்சமி நிலங்களை மீட்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொப்பம்பட்டி ஒன்றிய குழுவின் சார்பில் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் க.சந்தானம் தலைமையில் பஞ்சமி நில மீட்புக்கான ஆர்ப்பாட்ட த்தை நடத்தினோம். இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

போராட்டத்தில் பங்கேற்ற மக்கள், அவர்கள் எவ்வாறு தங்கள் நிலங்களை இழந்தார்கள், எவ்வளவு நெருக்கடிகளைச் சந்தித்தார்கள் என்பதை விரிவாக விளக்கிச் சொன்னார்கள். வாழ்வியல், சமூக பொருளாதாரத்தில் பஞ்சமர்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்தை நினைக்கும் போது, இதுவரையிலான மனிதகுல வரலாறுகள் அனைத்தும், வர்க்கப் போராட்டங்களின் வரலாறே என்ற காரல் மார்க்ஸின் கூற்று சிந்தனையில் எழுகிறது. தன்னையும் தன் நிலத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்காக, அனுதினமும் அவன் செலுத்திய உழைப்பு இன்றைக்கு விரயம் ஆனதோ? என்ற கேள்வி எழுகிறது. மார்க்சிய தத்துவத்தின் அடிப்படையில் பொருள் அளவு தான் குண மாற்றத்தை ஏற்படுத்தும். அதுபோல, சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஒழிய வேண்டும் என்றால், பொருள் உரிய அளவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டினைக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக பொருளாதாரத்தில் மேன்மை அடைந்திட, பஞ்சமி நிலங்கள் உரிய முறையில் மீட்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இந்தத் தத்துவார்த்த அடிப்படையில் நின்று பஞ்சமி நில மீட்பு போராட்டத்தினை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்துள்ளது.

இந்தியா முழுமைக்கும் பஞ்சமி நில மீட்பு போராட்டம் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும். பஞ்சமி: வெறும் நிலமல்ல, சமூக மாற்றத்திற்கான விதைகளில் ஒன்று!

தொடர்புக்கு: **9442475006**

## கட்சி வளர்ச்சி நிதி

மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் 11.08.2022ல் கோபிசெட்டிபாளையம் சி.எஸ். கட்டிட பணிகளை பார்வையிட சென்றபோது சால்வை அணிவிப்பதற்கு பதிலாக தோழர்கள் கட்சி வளர்ச்சி நிதி வழங்கிய விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 1. டி.என்.பாளைய ஒன்றிய துணைச் செயலாளர் வி.கார்த்திவேல் | ரூ.500 |
| 2. கோபி ஏஐடியூசி கட்டிடத் தொழிலாளர் சங்க தலைவர் என்.பி.ரவி | ரூ.500 |
| 3. ஜம்பை அ.அபிபுல் ரகுமான் | ரூ.100 |
| 4. கோபி ஒன்றியச் செயலாளர் கே.சி.கனகராஜ் | ரூ.100 |

## இந்த வார தம்பிக்குறள்

### 83. வினைநலம்

**வினைநலம் என்ப தனிநலம் என்ப**
**இணைநலம் இல்லை யதற்கு.**

தன்னலத்திற்காக உழைக்கும்போதுதான் செயல் சிறப்படையும். இதற்கு சமமான நலம் இல்லை என்று கூறுவர் (தன்னலமே அனைத்துச் செயலுக்கும் அடிப்படை)

**மனத்திட்பம் என்பவினைத் திட்பம:தில்லா**
**மனத்திட்டம் மண்ணில் இல.**

மன உறுதி என்பது ஊக்கமுடன் செய்யும் செயலினால் தான் உண்டாகிறது. செயல்திறன் இல்லாமல் மன உறுதி ஏற்படாது.

# செய்திவாசிப்பாளர் சரோஜ் நாராயணசாமி மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



அகில இந்திய வானொலியின் மூத்த செய்தி வாசிப்பாளர் சரோஜ் நாரயணசாமி (87) மும் பையில் காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு வேதனையுற்றோம்.

காலை கண் விழித்ததும், வானொலியை இயக்கி, செய்தி கேட்க காதுகளை திறந்து வைக்கும் லட்சோப, லட்சம் நேயர்களின் நெஞ்சங்களில் குடியிருப்பவர் சரோஜ் நாராயணசாமி. "ஆகாச வானி, செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணசாமி" என்ற அந்தக் காந்தக் குரலை கேட்டதும் நிமா்ந்து உட்கார்ந்து, தெளிவான, பிசிறில்லாத உச்சரப்பில் நாட்டு நிலவரத்தை அறிந்து கொள்வதில் ஒரு மன நிறைவும், தெளிவும் கிடைக்கும் என்பதை அனைவரும் ஏற்பர்.

இன்று நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் பெருகி விட்ட போதிலும் சரோஜ் நாராயணசாமி பல காலம் வாசித்த செய்தி காற்றில் கலந்து நிற்பது போல், நேயர்கள் நினைவில் அவர் என்றென்றும் வாழ்ந்திருப்பார்.

காந்தக் குரல் செய்தி வாசிப்பாளர் சரோஜ் நாராயணசாமி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், வானொலி நேயர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### வத்தல்மலைக்கு பேருந்து இயக்கம்

# தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம் நன்றி!

தருமபுரி மாவட்டம் வத்தல்மலைக்கு மினி பேருந்து இயக்க வேண்டி தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம் பல கட்ட போராட்டங்களை நடத்தியது. இதன் விளைவாக ரூ.32 கோடி செலவிடப்பட்டு படிப்படியாக வத்தல்மலை தார்சாலைக்கு ஒன்றிய அரசு நிதி, மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்பொழுது வத்தல்மலைக்கு இரண்டு முறை சோதனை ஓட்டம் நடைபெற்று பேருந்து இயக்க உத்தரவுவிட்ட தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டக்குழு சார்பாக நன்றி தெரிவித்து கொள்கிறது.

இவ்வாறு சங்க மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் தெரிவித்துள்ளார்.

## தோழர் எல்.ஐ.சி. எஸ்.நடராஜன் மரணம்

திண்டுக்கல் ஏஐடியூசி தலைவர்களில் ஒருவரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாநகர் கட்சி கிளை தோழருமான பிள்ளையார் நத்தம் தோழர் எல்.ஐ.சி. எஸ்.நடராஜன் விபத்தின் காரணமாக திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார். மறைந்த தோழருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. இந்த இரங்கல் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள், ஏஐடியூசி நிர்வாகிகள், சக தோழர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு தோழரின் நினைவுகளையும் இரங்கலையும் பகிர்ந்து கொண்டனர்.



## தோழர் மணியாச்சாரி இரண்டாமாண்டு நினைவு தினம்

ஏஐடியூசி தொழிற் சங்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மீனவர் சங்க பொறுப்பாளருமான தோழர் மணியாச்சாரி அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு தினம், ஏஐடியூசி மீனவத் தொழிளாலார் சங்கம் இராமநாதபுரம் மாவட்ட குழு சார்பில் ஆக. 13 அன்று இராமநாதபுரத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி அனுஷ்டிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஏஐடியூசி ராமநாதபுரம் மாவட்ட பொதுச் செயலாளர் என்.கே.ராஜன் மீன்பிடி சங்க மாநில செயலாளர் சி.ஆர்.செந்தில்வேல், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இராமநாதபுரம் நகர் செயலாளர் களஞ்சியம், மாவட்ட நிர்வாகிகள் வி.தங்கராஜ், எம்.அந்தோணிபீட்டர், எம்.பிச்சை, பி.ஜோதிபாசு வி.சண்முககனி, எஸ்.காளியம்மாள், எம்.மரியமலர், பி.லெட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஒப்பந்த மற்றும் சுய உதவிக்குழு

# தூய்மைப் பணியாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்

## கே.சுப்பராயன் எம்.பி. வலியுறுத்தல்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் கடந்த ஆக.13 அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் தமிழக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழக செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருப்பூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் கே.சுப்பராயன் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை அமைச்சர் கே.என்.நேருவிடம் அளித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்டார். அதன்படி:

மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தற்போதைய மக்கள் தொகை, நகர விரிவாக்கம் மற்றும் வளர்ச்சிக்கேற்ப நார்ம்ஸ் அடிப்படையில் தேவையான அளவுக்கு தூய்மைப்பணியாளர்களை நியமிக்க வேண்டும்;

மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நிரந்தரமான தூய்மைப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகப் பணியாளர்களை நியமிப்பதை கைவிட வேண்டும்; சுயஉதவிக்குழு மற்றும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களை நேரடிப் பணியாளர்களாக்கி, அவர்களை நிரந்தரப்படுத்தி காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் ; பெருந்துறை மற்றும் கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிகளை இணைத்து பெருந்துறை நகராட்சி ஆக்க வேண்டும்; ஈரோடு மாநகராட்சி மற்றும் பெருந்துறை பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளை விரைந்து முடித்து செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகளை உடனடியாக புதுப்பித்து தர வேண்டும்; ஊராட்சிக்கோட்டை குடிநீர் திட்டப்பணிகளை விரைந்து முடித்து ஈரோடு மாநகராட்சி பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டும் ; ஈரோட்டில் அரசு மருத்துவமனை அருகில் உள்ள மேம்பாலத்தை பெருந்துறை ரோட்டில் திண்டல் வரையிலும், மேட்டூர் ரோட்டில் பஸ்நிலையம் வரையிலும் நீட்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; ஈரோடு நசியனூர் சாலையில் வில்லரசம்பட்டி நால்ரோடு அருகே உள்ள எல்.பி.பீ பாலத்தை குமிளிப் பாலமாக மாற்றியமைத்து சாலையை ஒரே மட்டமாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை, அமைச்சர் கே.என்.நேருவிடம், சுப்பராயன் எம்.பி., வழங்கி உரியநடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக் கொண்டார்.

# அரசு போக்குவரத்துக் கழகங்களில் தனியார் மயமாக்கும் நடவடிக்கை இல்லை!

## அமைச்சர் அறிவிப்பிற்கு ஏஐடியூசி வரவேற்பு!

கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஏ.ஐ.டி.யூ.சி. தொழிலாளர் சங்கத்தின் 39 ஆவது ஆண்டு பேரவைக் கூட்டம் தஞ்சாவூர் கீழ ராஜ வீதி சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர் டி.தங்கராசு தலைமை வகித்தார். கொடியினை ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் ஏற்றி வைத்து சிறப்பித்தார். அஞ்சலி தீர்மானத்தை கௌரவ தலைவர் கே.சுந்தர பாண்டியன் வாசித்தார். ஏ.ஐ.டி.யூ.சி. மாநில செயலாளர் சி.சந்திரகுமார் பேரவையைத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். சங்க பொதுச் செயலாளர் டி.கஸ்தூரி வேலை அறிக்கையை சமர்ப்பித்தார். பொருளாளர் எஸ்.தாமரைச்செல்வன் வரவு செலவு அறிக்கையை வாசித்தார்.

பேரவையில் சம்மேளன துணைத் தலைவர் துரை.மதிவாணன், வங்கி ஊழியர் சங்க மாவட்ட பொதுச் செயலாளர் க.அன்பழகன், மின்வாரிய சம்மேளன துணைத் தலைவர் பொன்.தங்கவேல், ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட தலைவர் வெ.சேவையா மற்றும் தி.கோவிந்தராஜன், மல்லி ஜி.தியாகராஜன், பி.அப்பாத்துரை, எஸ்.பாலசுப்பிரமணியன், பி.செல்வம், எஸ்.கோடீஸ்வரன், ஆர்.செந்தில்நாதன் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர். தமிழ்நாடு அரசு போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில பொதுச் செயலாளர் ஆர்.ஆறுமுகம் நிறைவு செய்து உரையாற்றினார். துணைத் தலைவர் ஜி.சண்முகம் நன்றி கூறினார்.

பேரவையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் தனியார் மயமாக்கும் நடவடிக்கைகள் இல்லை என்ற போக்குவரத்து துறை அமைச்சரின் அறிவிப்பினை வரவேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசு போக்குவரத்துக் கழகங்களில் மாணவர்கள் உள்ளிட்ட பல்வேறு இலவச பயணத் திட்டங்கள், தற்போது பெண்களுக்கான இலவச பயணத் திட்டங்கள்,




நாளுக்கு நாள் ஏறுகிற பெட்ரோல் டீசல் விலை உயர்வு, உதிரிபாகங்கள் விலை உயர்வு உள்ளிட்ட பல்வேறு செலவுகளினால் ஏற்பட்டுள்ள கடும் நிதி நெருக்கடிக்கும் போர்க்கால அடிப்படையில் உரிய நிதியினை ஒதுக்கீடு செய்ய வேண்டும், தொழிலாளர்களின் 14 வது ஊதிய ஒப்பந்தம் இந்த மாதத்துடன் முடிவடைவதால் உடனடியாக ஒப்பந்தம் பேசி முடித்து 1.9.2019 முதல் 31.8.2022 வரையிலான மூன்றாண்டு ஒப்பந்த பலன்கள் நிலுவைத் தொகையுடன் வழங்கப்பட வேண்டும், ஓய்வு பெற்றவர்களுடைய பணப்பலன்கள் கடந்த 2021 மே மாதத்தில் இருந்து வழங்கப்பட வேண்டும், ஓய்வு பெற்றவர்களுக்கு 2015 ஆம் ஆண்டு முதல் உயர்ந்துவிட்ட பழைய புதிய அகவிலைப்படி உயர்வை இந்த ஒப்பந்தத்திலேயே இறுதிப்படுத்தி அறிவிக்க வேண்டும், நிலுவை தொகை வழங்க வேண்டும், பழைய ஓய்வூதிய திட்டம் மீண்டும் அமல்படுத்தப்பட வேண்டும், ஓய்வுதியர்களுக்கு மருத்துவ காப்பீடு அறிவிக்க வேண்டும், கடந்த 2016 ஆம் ஆண்டு 110 விதியின் கீழ் வாரிசு பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மாணவர் பெருமன்ற 87வது அமைப்பு தின விழா




அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் 87 ஆண்டு அமைப்பு தின விழா கொடியேற்று விழா சேலம் மாவட்டத்தில் மாவட்டத் துணைத் தலைவர் என்.ராஜ்கமல் தலைமையில் நடைபெற்றது. அமைப்பின் கொடியை மாவட்ட செயலாளர் பா.தினேஷ் ஏற்றி வைத்தார். இதில் மாவட்டத் துணைத் தலைவர் எஸ்.தீனதயாளன், சின்னா, எஸ்.டார்வின் பி.எஸ்.சேகுவேரா, எம்.பூபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சென்னை டி.பி.ஜெயின் கல்லூரியை பாதுகாக்கும் போராட்டம் வெற்றி!

## போராடிய அனைவருக்கும் மாணவர் பெருமன்றம் சார்பில் வாழ்த்துகள்!

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் மௌ.குணசேகர், மாநிலச் செயலாளர் சீ.தினேஷ் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

சென்னை துரைப்பாக்கத்தில் செயல்பட்டு வருகின்ற டி.பி.ஜெயின் அரசு உதவி பெறும் கல்லூரியை பாதுகாக்கும் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்கல்லூரி துறைப்பாக்கம், செம் மஞ்சேரி, கண்ணகி நகர், மேட்டுக்குப்பம், பெருங்குடி, கந்தன்சாவடி, பாலவாக்கம், காவாங்கரை, கல்குட்டை, தரமணி, அடையாறு, வேளச்சேரி, நீலாங்கரை, திருவான்மியூர் மற்றும் சோழிங்கநல்லூர் பகுதி வாழ் ஏழை மக்களுக்காக 1972லிருந்து இயங்கி வருகிறது. தமிழ்நாடு அரசும் தொடர்ந்து நிதி உதவி அளித்து வருகிறது. கல்லூரியும் மேம்படுத்தப்பட்டது; மாணவர் சேர்க்கையும் அதிகமானது.

இந்நிலையில் கல்லூரியின் செயலாளராக பொறுப்பேற்ற திரு. ஹரீஷ் மேத்தா, கூடுதல் லாபம் சம்பாதிப்பதற்காக இக்கல்லூரியை தனியார் சுயநிதி கல்லூரியாக மாற்றுவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டார். கடந்த 4 ஆண்டுகளாக அரசு நிர்ண யித்த கல்விக் கட்டணம் ரூ.825. ஆனால், ரூ.42,000 வரை உயர்த்தப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு உதவி பெறும் பாடப்பிரிவுகளில் மாணவர் சேர்க்கையும் நடைபெறவில்லை. புதிய பேராசிரியர்கள், பணியாளர்கள் கடந்த பல ஆண்டுகளாக நியமிக்கப்படவில்லை. மேலும், இப்படிப்பட்ட முறைகேடுகளை தட்டிக்கேட்டதற்காக 11 பேராசிரியர்கள் நிர்வாகத்தால் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

டி.பி ஜெயின் கல்லூரி தனியார் கல்லூரியாக மாற்றப்பட்டால் தமிழ்நாட்டின் பல அரசு உதவி பெறும் கல்லூரிகள் தனியார் கல்லூரிகளாக மாறும் அபாயம் ஏற்பட்டது.

இதற்கு எதிராகவும், தமிழ்நாடு அரசு இக்கல்லூரிக்கு ஒரு சிறப்பு அலுவலரை நியமிக்கக் கோரியும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் கடந்த 4 ஆண்டுகளாக பலமுறை உயர்கல்வித் துறை அதிகாரிகள், அமைச்சர்களை சந்தித்து முறையிட்டதோடு, தொடர் போராட்டங்களையும் நடத்தியது.

கல்லூரியை பாதுகாக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள், இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு மாணவர் அமைப்புகள் தொடர்ந்து பல்வேறு கட்ட முயற்சிகளிலும், போராட்டங்களிலும் ஈடுபட்டனர். மாணவர் அமைப்புகளின் கூட்டுப் போராட்டம் இக்கல்லூரியை பாதுகாக்கும் போராட்டத்திற்கு வலு சேர்த்திருக்கிறது.

இறுதியாக கடந்த 12.04.2022 அன்று ஒரு சிறப்பு அலுவலரை நியமித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளி யிட்டுள்ளது. இதை மாணவர் பெருமன்றம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது; தமிழ்நாடு முதலமைச்சருக்கும், உயர்கல்வித் துறைக்கும் மாணவர் பெருமன்றம் நன்றி தெரிவிக்கிறது.

இக்கல்லூரிக்காக குரல் கொடுத்த அனைவருக்கும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதோடு மாணவர்களின் பிரச்சினைகளுக்கு மாணவர் அமைப்புகள் இதேபோன்று ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என மாணவர் பெருமன்றம் அறைகூவல் விடுக்கிறது.

பணி நீக்கம் செய்யப்பட்ட பேராசிரியர்களை மீண்டும் பணியில் சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தமிழ்நாடு மாநிலக் குழு தமிழ்நாடு அரசை கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

### நிதியமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன்

# கார்மீது செருப்பு வீச்சு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

அண்மையில் காஷ்மீர் பகுதியில். பயங்கரவாதிகள் ராணுவ முகாம் மீது நடத்திய தாக்குதலில் மதுரையை சேர்ந்த ராணுவ வீரர் திரு.லட்சுமணன் கொல்லப்பட்டார். மரணமடைந்த ராணுவ வீரர் லட்சுமணன் உடல் ஆக 13 அன்றுமதுரைக்கு விமானம் மூலம் எடுத்து வரப்பட்டது.

மதுரை விமான நிலத்தில் ராணுவ வீரர் லட்சுமணன் உடலுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மரியாதை செலுத்த அமைச்சர்கள் கேகேஎஸ்எஸ்ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பிடி ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் சென்றுள்ளனர். விமான நிலையம் சென்று ராணுவ வீரர் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி திரும்பிய நேரத்தில் நிதியமைச்சர் பிடிஆர்.பழனிவேல் தியாகராஜனை தாக்கும் நோக்கத்துடன் பாஜக, சங்பரிவார் கும்பல் செருப்புகளை வீசி கலகம் ஏற்படுத்தி, பெரும் வன்முறை உருவாக்க எத்தனித்துள்ளது. அமைச்சரின் சமயோகித செயலும் போலீசாரின் விரைந்த நடவடிக்கையும் மோசமான விபரீதம் நிகழாமல் தடுத்துள்ளது.

பாஜக, சங்பரிவார் கும்பலின் இழிசெயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்நாட்டில் பாஜகவின் அமைதி நிலையை சீர்குலைத்து, கலவரத்தை ஏற்படுத்தி, அரசியல் ஆதாயம் தேடும் மலிவான செயலில் ஈடுபடுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அராஜக செயலில் ஈடுபடும் கும்பலை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### பில்கிஸ் பானு வல்லுறவு வழக்கின் கொடுங்குற்றவாளிகள் விடுதலை:

# நாட்டின் மனசாட்சிக்கு விடப்பட்ட சவால்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

அகிம்சா மூர்த்தி அண்ணல் மகாத்மா காந்தி பிறந்த குஜராத் மண்ணில் 2022 ஆம் ஆண்டு, அரசின் ஆதரவுடன் சங்பரிவார் கும்பலால் நடந்தேறிய முஸ்லீம் இன அழிப்புப் படுகொலை சம்பவங்கள் மனிதகுல வரலாற்றில் மிகக் கொடூரமானது. இதில் அகமதாபாத் அருகில் உள்ள ரஸ்தீக்பூர் கிராமத்தை சேர்ந்த ஐந்துமாத கர்ப்பிணி தாய் பில்கிஸ் பானு (21) மதவெறிக் கும்பலால் வழிமறித்து, அவரது மூன்று குழந்தைகளை பாறையில் அடித்துக் கொன்றதுடன் அவரோடு பயணித்த 14 பேர்களையும் கதறக் கதற படுகொலை செய்தது.

இதனைத் தொடர்ந்து அந்தக் கும்பல் பில்கிஸ் பானுவையும் அவரது தாய் உட்பட நான்கு பெண்களையும் வல்லுறவு கொண்டு, மனித கற்பனைக்கும் எட்டாத சித்தரவதை செய்தது. இதில் தப்பிப் பிழைத்த பில்கிஸ் பானு, தனக்கும், தனது குடும்பத்துக்கும், உடனிருந்தவர்களுக்கும் நேர்ந்த கொடுமைகளைக்கு நீதி கேட்டு போராடத் தொடங்கினார்.

அப்போதைய முதலமைச்சர் திரு.நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா வழிநடத்தலில் செயல்பட்ட குஜராத் காவல்துறை, வன்முறை கும்பலுடன் இணைந்து பில்கிஸ் பானு, நீதிமன்றம் செல்லாமல் தடுக்க சகல முயற்சிகளையும் மேற்கொண்டது. ஆதாரங்களை அழித்தது. அச்சுறுத்தலையும், மிரட்டலையும் எதிர் கொண்ட பில்கிஸ் பானு, உச்சநீதிமன்றம் வரை போராடி நியாயம் பெற்றுள்ளார்.

பில்கிஸ் பானு வல்லுறவு வழக்கில் 5 போலீசார், 2 மருத்துவர்கள் உள்பட 11 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து, குற்றவாளிகள் தரப்பில் உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களுக்கு சென்ற மேல் முறையீடுகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டன.

உச்ச நீதிமன்றம் பில்கிஸ் பானு குடும்பத்துக்கு ரூ.50 லட்சம் இழப்பீடும், அவருக்கு அரசு வேலையும், பாதுகாப்பான வீடும் குஜராத் அரசு வழங்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் 2019 ஏப்ரல் மாதம் உத்தரவிட்டது. இதனை குஜராத் மாநில அரசு இன்று வரை மதிக்கவில்லை. இந்த நிலையில் நாட்டின் சுதந்த தின பவள விழாவையொட்டி 11 கொடுங்குற்றவாளிகளையும் குஜராத் மாநில அரசு விடுதலை செய்துள்ளது. சிறையில் இருந்து வெளியே வந்தவர்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டிருக்கிறது. குஜராத் மாநில அரசின் செயல் நாட்டின் மனசாட்சிக்கு விடப்பட்ட சவாலாகும். கருத்துரிமையை மறுத்து, நாட்டுப்பற்று கொண்ட அறிவுத்துறையினரை சிறையில் அடைத்து பழிவாங்கி வரும் அரசு, உடல் நடுக்க நோயால் துடித்த, பாதிரியார் ஸ்டேன் தண்ணீர் குடிக்க உறிஞ்சு குழாய் வழங்க மறுத்த நிலையில், கொடுங்குற்றவாளிகளை விடுதலை செய்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

குஜராத் அரசின் இக்கொடுஞ்செயலை அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றுபட்டு தங்களது கண்டன குரலை எழுப்பிட முன் வரவேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



### டிஸ்கவரி புக் பேலஸின்

# புதிய வளாகம் திறப்பு

சென்னை கே.கே.நகர், முனுசாமி சாலையில் அமைந்துள்ள டிஸ்கவரி புக் பேலஸின் புதிய வளாகத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், தகைசால் தமிழர், தோழர் இரா.நல்லகண்ணு தலைமையில், பத்மபூஷண் கவிப்பேரரசு வைரமுத்து ஆகஸ்ட் 12 அன்று திறந்து வைத்தார். டிஸ்கவரி மு.வேடியப்பன் வரவேற்றார். இவ்விழாவில் அமைச்சர் தங்கம் தென்னரசு, எழுத்தாளர்கள், இயக்குநர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# முன்னாள் எம்.பி. எம்.அப்பாதுரை மனைவி சந்திரமதி மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒட்டபிடாரம் எம்.அப்பாதுரையின் வாழ்விணையர் திருமதி.எஸ்.சந்திரமதி (68) ஆக. 16 அன்று தூத்துக்குடியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எம்.அப்பாதுரை மாணவப் பருவத்தில் இருந்து பொதுவாழ்வை மேற்கொண்டவர். 1980–85 கால கட்டத்தில் ஒட்டபிடாரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும், 2004 – 09 ஆண்டுகளில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்டவர். இவரது வாழ்விணையர் திருமதி.எஸ்.சந்திரமதி சென்டரல் பேங்க் ஆப் இந்தியாவில் ஊழியராக சேர்ந்து பணியாற்றியவர். இந்த கால கட்டத்தில் வங்கி ஊழியர் சங்கத்தில் இணைந்து ஊழியர் நலனுக்காக போராடியவர். வங்கிப் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்ற பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து கொண்டார். இவர்களுக்கு திருமணமான ஒரு மகனும், மகளும் இருக்கிறார்கள்.

திருமதி சந்திரமதி உடல் சென்னை காசிமேடு கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. திருமதி எஸ்.சந்திரமதி மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன் தோழர்.எம்.அப்பாதுரைக்கும், அவரது குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட பொதுக்கூட்டம்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் கள்ளக்குறிச்சி மாவட்டக் குழு கூட்டம் கள்ளக்குறிச்சியில் கோட்ட ஒருங்கிணைப்பாளர் இரா.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் எதிர்கால வேலை திட்டம், தீர்மானங்கள் குறித்து மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன் உரை நிகழ்த்தினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கே.ராமசாமி அரசியல் குறித்தும், அமைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் பேசினார். ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒதுக்கப்படும் நிதி, கல்லூரி மாணவர்களுக்கான உதவித்தொகை, வீட்டுமனை கொடுப்பதற்கான ஒதுக்கீடு செய்யும் நிதி உள்ளிட்ட அனைத்து வகையிலும் அவர்களுக்கு பயன்படுத்தாமல் நிதியை மடைமாற்றம் செய்வதை நிறுத்த வேண்டும். மாவட்டத்தில் தாட்கோ மூலம் வழங்கப்படும் தொழில் தொடங்க கடன், சிறு முதலீட்டுக் கடன் இவைகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வங்கி நிர்வாகம் திட்டமிட்டு கடன் கொடுக்க மறுப்பதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது! கனியாமூர் பள்ளி கலவரம் சம்பந்தமாக அப்பாவி இளைஞர்களையும், மாணவர்களையும் கைது செய்தவர்களை எந்த நிபந்தனையும் இன்றி விடுவிக்க வேண்டும். அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.





- நீ.சு.பெருமாள்

# இந்திய விடுதலைப் போரில் இசுலாமியர்களின் பங்கேற்பு!



**இந்திய விடுதலைக்கான போராட்டத்தினை முதன் முதலில் துவக்கியவர்கள் இசுலாமியர்கள்தான் என்றால் அது மிகையாகாது.**

கிழக்கிந்திய கம்பெனிகள் வணிகம் செய்ய முதன் முதலில் காலடி வைத்தபோது, இந்தியப் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் இசுலாமிய மன்னர்களின் ஆட்சிதான் இருந்தது.

எனவே வணிகம் என்கிற பெயரில் இந்தியாவிற்குள் நுழைந்த வெள்ளையர்கள் படிப்படியாக நம்மையெல்லாம் அடிமைப்படுத்திவிட்டனர் என்று உணர்ந்த அந்தக் கணம் முதல் இந்திய சுதந்திரப் போராட்டம் துவங்கியது என்று....

இசுலாமியர்களுக்கான எதிர் முகாமில் இருந்து மதரீதியான அரசியல் செய்த சவார்க்கர் எரிமலை எனும் நூலில் இப்படி எழுதியுள்ளார் .

சிவகங்கையை ஆட்சி செய்த வீரமங்கை வேலு நாச்சியார் மீது கும்பெனிப்படைகள் போர் தொடுத்த சமயத்தில் வேலுநாச்சியாரின் கணவர் கொல்லப்பட்ட நிலையில் தன்னுடைய முக்கிய தளபதிகளுடன் தலைமறைவாகிறார் வேலுநாச்சியார்.

தலைமறைவு காலத்தில் திண்டுக்கல் கோட்டைத் தளபதியாக இருந்த ஹைதர் அலியின் மைத்துனர் சையத் சாகிப் அறிமுகம் கிடைக்கிறது.

இவர் மூலம்தான் ஹைதர் அலியின் நட்பும் வேலுநாச்சியா ருக்குக் கிடைக்கிறது.

சிவகங்கையிலிருந்து மீண்டும் கும்பெனிப் படையை விரட்ட எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு போர் தொடுக்கும் வேலுநாச்சியாருக்கு ஹைதர் அலியின் படைகள் துணை நின்றன.

அதன் மூலம் கும்பெனியாரை சிவகங்கையிலிருந்து விரட்டிவிட்டு மீண்டும் மகாராணியாக முடிசூட்டிக் கொண்டார் வேலுநாச்சியார் என்கிறது வரலாறு!

பாஞ்சாலங்குறிச்சியை ஆட்சி செய்த வீரபாண்டிய கட்டப் பொம்மனைப் பற்றி படிக்கிறபோது எட்டப்பன் கதாபாத்திரத்தை மறக்காமல் படிப்போம்.

இறுதிக் காலத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குத் துணைநின்ற இசுலாமியரான மம்மது தம்பியின் தியாகம் வெளியில் தெரியாது.

அந்த அளவிற்கு இசுலாமியர்களின் தியாக வரலாறு திட்டமிட்டே மறைக்கப்பட்டது.

ஏராளமான பேர்களைக் கொண்டது இந்திய விடுதலைப் போராட்டம்...

அதுமட்டுமல்ல, தன்னுடைய 16 ஆண்டுகால ஆட்சியில் எட்டு ஆண்டுகள் போர்க் களத்திலேயே வாழ்ந்தவர் திப்பு சுல்தான்.

தொடர்ந்து கும்பெனியர்கள் இந்து முஸ்லீம் விரோதத்தை வளர்க்க முயன்றாலும் அதனை எதிர்கொண்டு ஒற்றுமையை நிலைநாட்டுவதில் உறுதி கொண்டு செயல்பட்டவர் திப்பு சுல்தான்!

இவரின் அரண்மனைக்கு அருகில்தான் சீரங்கநாதர் கோயில் இருந்தது. தினசரி நடைபெறும் பூசைக்கான மணியோசை கேட்டதும் இறைவனுக்கு சலாம் சொல்லி அந்த மணியோசை நேரமும் இறைவனை வணங்கும் நேரம்தான் என்று வாழ்ந்து காட்டியவர்.

திப்பு சுல்தானின் ஆட்சிக்காலத்தில் ஈழவப் பெண்கள் மேலாடை(ஜாக்கெட்) அணியத் தடை இருந்தது.

இதைக் கேள்விப்பட்ட திப்பு, இதற்கு வறுமை காரணம் என்றால் அதற்கான தீர்வை வழங்குங்கள்.

குறுநில மன்னர்களின் உத்தரவு என்றால் அந்த உத்தரவை இப்பொழுதே ரத்து செய்கிறேன், மேலும் மத நம்பிக்கைகள் என்றால், மனம் புண்படாமல் எடுத்துச் சொல்லி ஈழவப் பெண்கள் மேலாடை அணிவதற்குத் தேவையான வகைகளில் அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டவர் திப்புசுல்தான்!

இன்றைக்கும் சிருங்கேரி மடத்தில் திப்புவின் 29 கடிதங்கள், மத நல்லிணக்கத்திற்குச் சான்றாக இருக்கின்றன.

மராட்டிய இந்து மன்னனின் தளபதி பரசுராமபாகு சிருங்கேரி மடத்தை கொள்ளையடிக்க வருவதை அறிந்த சங்கராச்சாரியார் திப்புவின் உதவியை நாடுகிறார்.

**<u>திப்புவின் படைவீரர்களின் தலையீட்டால் சிருங்கேரி மடம் கொள்ளையில் இருந்து தப்பியது. அதற்குப் பிரதிபலனாக திப்புசுல்தான் உயிருடன் இருக்கும் வரையில் ஆண்டு தோறும் திப்புவிற்காக பிரார்த்தனை செய்து பிரசாதத்தை அனுப்புவதை சங்கராச்சாரியார் வழக்கமாகக் கொண்டிருந்தார்.</u>**

திப்புவின் வாள் வலிமை ஒரு பக்கம் பிரிட்டிஷாரை கதிகலங்க வைத்தாலும் மறுபக்கம் இந்து முஸ்லீம் ஒற்றுமையினை அசைக்க முடியாத அளவிற்கு உறுதியாக நின்றார்.

“ஈட்டியின் முனையில் நிறுத்திய போதும் ஈமானை இழக்க மாட்டோம் காட்டிக் கொடுத்திடும் கயவர் தம்மை கனவிலும் விட மாட்டோம் இந்தியா எங்கள் தாய் நாடு இசுலாம் எங்கள் வழிபாடு”

என்கிற கவிஞர் ஆபிதீன் வரிகளுக்கேற்ப இந்திய விடுதலைப் போராட்டத்தில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை பதிவு செய்தவர்கள் இசுலாமியர்கள்.

ஹைதர் அலி மற்றும் திப்புசுல்தான் காலத்தில் மட்டுமல்ல, இந்தியா விடுதலை அடைய வேண்டும் என்பதற்காக இசுலாம் மார்க்க அறிஞர்கள் பலர் களத்தில் நின்று போராடினார்கள்.

இசுலாம் மார்க்கத்தில் தற்கொலைக்கு இடம் கிடையாது. அவ்வாறு தற்கொலை செய்து கொண்டால் அது மார்க நெறிக்கு எதிரானது . ஆனால் மார்க்கநெறிகளை மீறி சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பாதுகாக்க, தம் கூரிய வாளால் கழுத்தறுத்துக் கொண்டு மடிந்த மவுலானாக்கள் வரலாறுகள் மறக்க முடியாது.

அதனால்தான் நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் எழுதிய, இந்திய விடுதலைப் போராட்டம் எனும் நூலில், ஆங்கிலேயர்களுக்கு எதிரான உணர்ச்சி மிகுந்த போராட்டங்களை, முன்னெடுத்துச் செல்வதில் மற்ற சமுதாயத்தவரைவிட இஸ்லாமியர்களுக்குத்தான் வேகம் அதிகம் இருந்தது என்பதைப் பல்வேறு நேரங்களில் பார்த்திருக்கிறேன் என்று எழுதியுள்ளார்.

முதன் முதலில் இந்தியாவிற்கு வெளியில் 1914ல் இந்திய சுதந்திர அரசாங்கம் ஆப்கானின் தலைநகர் காபூலில் அமைக்கப்பட்டது. ராஜா மகேந்திர பிரதாப் தலைவராகவும், மவுலானா பரகத்துல்லா பிரதமராகவும், வெளியுறவுத்துறை அமைச்சராக செண்பகராமனும் அறிவிக்கப்பட்டனர்

இந்த சுதந்திர அரசை ஜெர்மனியின் கெய்சரும், அதன் நேச நாடுகள் சிலவும் ஆதரித்தன. ஆம்... அந்த முதல் சுதந்திர அரசின் பிரதமர் ஒரு இசுலாமியர்.

இனியும் இந்தியாவில் ஆட்சி செய்ய முடியாது என்கிற நிர்பந்தத்தை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அமைத்த இந்திய ராணுவம் வெள்ளையர்களுக்கு உணர்த்தியது.

1943ல் தற்காலிக சுதந்திர இந்தியாவை நேதாஜி அமைத்த போது, பிரதமராக தன்னையும், தன்னுடைய இராணுவப் பிரதிநிதிகளாக அஜிஸ் அகம்மது, ஷாநாவாஸ்கான் போன்ற இசுலாமிய தளபதிகளுக்கு வழங்கினார்

அதுமட்டுமல்ல நேதாஜி அமைத்த அமைச்சரவையில் 20 பேர்கள் அமைச்சர்களாக பதவி ஏற்றுக் கொண்டனர்.

அதில்... லெப்.கர்னல் காதிர், கரீம்கனி, டி.எம்.கான் உள்ளிட்ட ஐந்து இசுலாமிய அமைச்சர்கள் இருந்தனர் . மேலும் களத்தில் ஆயுதமேந்திப் போராடிய வீரர்களின் வரிசையில் இசுலாமிய வீரர்களும் கணிசமான அளவில் இடம்பெற்று இருந்தனர்.

எம்.இசட்.கியானி கர்னல் ரஷீக்அலி, கர்னல் ஈசாக், லெப். எஸ்.எம்.அலி, அக்கப் அலி முகம்மது, அகம்மதுகான், அக்தர்அலி, அயூப்கான், முகம்மது அப்பாஸ், தாஜ் முகம்மது போன்ற எண்ணற்ற முஸ்லீம் வீரர்களை நேதாஜியின் ராணுவம் பெற்றிருந்தது.

இத்தனைக்கும் இதே சமகாலத்தில் தனிநாடு பிரச்சினையில் ஜின்னாவின் முஸ்லீம் லீக் கட்சி ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக நின்றது.

மதமா? தேசமா? என்கிற கேள்விக்கே இடமே இல்லாமல் லீக் கட்சியின் வேண்டுகோளையும் புறக்கணித்து இசுலாமிய வீரர்கள் நேதாஜியின் பின்னால் ஆயுதமேந்திப் போராடினார்கள்.

அடிமை இந்தியாவில் எந்தவொரு சதிவழக்கு அல்லது பிரிட்டனுக்கு எதிரான தீவிரவாதச் செயல்கள், சத்தியாகிரகப் போராட்ட வழக்குகள் உள்ளிட்ட எல்லாவற்றிலும் இசுலாமிய வீரர்களும், தியாகிகளும் இடம் பெற்றிருப்பார்கள்.

அதற்கான அங்கீகாரம்தான் நேதாஜி அமைச்சரவையில் ஐந்து இசுலாமியர்கள் இருந்தார்கள்.

விடுதலை நெருங்கும் சமயத்தில் 1946ல் நேரு தலைமையிலான அமைச்சரவை பதவியேற்க வைஸ்ராய் அழைக்கும்போது 12 அமைச்சர்கள் பதவியேற்கின்றனர்.

அதில் இருவர் முஸ்லீம்கள். அதுமட்டுமல்ல, ஜின்னாவின் லீக்கட்சிக்கு தனியாக ஐந்து இடங்கள் அமைச்சரவையில் ஒதுக்கப்பட்டிருந்தன. எனவே இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றை யார் எழுதினாலும் முஸ்லீம்களை ஒதுக்கிவிட்டு எழுதிவிட முடியாது என்கிற அளவில் இசுலாமியத் தியாகிகளின் பட்டியல் நீள்கிறது.

இன்று... இந்தியாவில் விடுதலைப் போராட்டத்தின் போது இருந்த மக்கள் தொகையை விட பல மடங்கு உயர்ந்திருக்கிறது இசுலாமிய மக்கள் தொகை.

ஆனால் இன்றைய இந்திய நாடாளுமன்றத்தில் இசுலாமிய உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

மதரீதியான சிந்தனைகள் மோலோங்கி விட்டன.... அரசியல் பொதுவாழ்வின் பங்களிப்பு குறைவதற்கு இதுவும் ஒரு காரணம் என்பதே கசப்பான உண்மையாகும்.

இதற்கு யார் காரணம் அல்லது எது காரணம்? இசுலாமியச் சான்றோர்கள் தேசிய அரசியலில் தடம் பதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நீங்கள் இந்த நாட்டின் குடிமக்கள்தானா? என இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காத பாஜக அரசு கேட்கிறது.... அதற்காக சட்டம் இயற்றுகிறது...

தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய வாரிசுகள்....

பெற்ற சுதந்திரத்தை பாதுகாத்திட நிகழ்கால அரசியலிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதே காலத்தின் கட்டாயமாக உள்ளது.

வெள்ளையர்களுக்கு எதிராக வீரச்சமர் புரிய வைத்த கம்பம் பீர் முகம்மது பாவலர் போன்ற சுதந்திர போராட்ட வீரர்களை இனியும் காலம் தாழ்த்தாமல்... இன்றைய இளைய தலைமுறைக்கு அறிமுகம் செய்வது நல்லது

தொடர்புக்கு: **9442678721**



2ம் பக்கத் தொடர்ச்சி >>

முன்னோடிகள் நினைவாக எடுத்து வரப்பட்ட தியாக ஜோதிகளை மூத்த தோழர்கள் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டனர்.

**தியாகிகள் நினைவு சுடர்கள்:**

கோவை சின்னியம்பாளையம் தியாகிகள், சேலம் சிறை தியாகிகள், திருப்பூர் பழனிசாமி மோகன்.

**மூத்த தோழர்கள் நினைவு சுடர்கள்:**

மதுரை தோழர்.தா.பாண்டியன், பி.சேதுராமன், ஈரோடு எம்.நாகப்பன், கே.எஸ்.நாச்சிமுத்து, எஸ்.பி.வெங்கடாசலம், பெருந்துறை டி.கேநல்லப்பன், அவிநாசி ஐ.எம்.ஷெரிப், ஊத்துக்குளி என்.கே.பழனிச்சாமி, பல்லடம் ராமசாமி, பொங்களூர் கே.தங்கமுத்து, உடுமலை என்.ஆர். பழனிசாமி, திருமுருகன்பூண்டி சி.சுப்பிரமணியம், திருப்பூர் முதல் மண்டலம் எம்.எஸ்.நாச்சிமுத்து, பாட்டையப்பன், பா.இளம்பரிதி, இரண்டாம் மண்டலம் மா.நடராசன், மூன்றாம் மண்டலம் எஸ்.ஆறுமுகம், டிப்டாப் முத்து, நான்காம் மண்டலம் டிப்டாப் முருகேஷ், ஆண்டிப்பாளையம் நாச்சிமுத்து, மங்களம் ராமசாமி.

**கொடி ஏற்றம்:**

தனி மேடை அமைக்கப்பட்டு வானளாவ உயர்ந்து நிற்கும் கொடிக் கம்பத்தில், நமது இயக்கத்திற்கு பெருமை சேர்த்து வரும் மூத்த தலைவர், விடுதலைப் போராட்ட வீரர், எளிமையின் எடுத்துக்காட்டாய், பொறுமையின் சிகரமாய் விளங்கி வரும் தோழர்.இரா.நல்லகண்ணு செங்கொடி ஏற்ற, அனைத்து தோழர்களும் செங்கொடி வாழ்க, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்க, மாநாடு வெல்க என முழக்கமிட செங்கொடி பட்டொளி வீசிப் பறந்தது.

**தியாக தீபம்:**

தியாகிகளை போற்றும் அணையா தியாகச் சுடர் அலங்கரிக்கப்பட்ட தனி மேடையில் அமைக்கப்பட்டு இருந்த இடத்தில் மூத்த முன்னோடி கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் தோழர்.ஜி.காளியப்பன் தியாக தீபத்தை ஏற்றி வைக்க, குழுமியிருந்த எண்ணற்ற தோழர்கள் தியாகிகள் நாமம் வாழ்க, தியாகிகள் விட்டுச் சென்ற பணிகளை நிறைவேற்றுவோம் என விண்ணதிர முழங்க, மிகுந்த எழுச்சியோடு உணர்ச்சிகரமாக நடைபெற்றது.

**தலைமைக்குழு:**

398 பிரதிநிதிகள், 16 மாற்றுப் பிரதிநிதிகள், 10 மாநிலக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட நான்கு நாள் (6ம் தேதி முதல் 9ம் தேதி வரை) மாநாட்டிற்கு தோழர்கள் கோ.பழனிசாமி (செயற்குழு உறுப்பினர்), க.சந்தானம் (செயற்குழு உறுப்பினர்) எம்.ஆறுமுகம் (மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்), மு.கண்ணகி (மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்) க.பாரதி (அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர்) ஆகியோர் தலைமைக் குழுவாக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டனர்.

**அகில இந்திய தலைவர்கள்:**

அகில இந்திய தலைமையின் சார்பில் பொதுச் செயலாளர் தோழர்.டி.ராஜா, தேசியச் செயலாளர்கள் அமர்ஜித் கௌவுர், டாக்டர் நாராயணா, பினாய் விஸ்வம் எம்.பி., தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் ஆனிராஜா ஆகிய ஐவரும் கலந்து கொண்டனர்.

**மாநாட்டு பதிவு:**

மாநாட்டு நடவடிக்கைகள் முழுவதை யும் தோழர்கள் பா.காளிதாஸ், டி.வி.கருணைதாஸ், ஜி.வெங்கடாசலம், இளசை எஸ்.எஸ்.கணேசன் ஆகியோர் பதிவு செய்தனர்.

**அஞ்சலி தீர்மானம்:**

சென்ற 24வது மாநாடு நடைபெற்ற 2018 மார்ச் 31க்குப் பின்னர் இயற்கை எய்திய தலைவர்கள், தோழர்கள், பிற கட்சி அமைப்புகளைச் சார்ந்தவர்கள், பொதுமக்கள் அனைவருடைய பட்டியலும் முறையாக தயாரிக்கப்பட்டு சிறு நூல் வடிவில் அச்சிட்டு, அனைத்து பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் அஞ்சலி தீர்மானத்தை மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் முன்மொழிய, அனைத்து பிரதிநிதிகளும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

**வரவேற்பு:**

மாநாட்டு வரவேற்புக்குழுச் செயலாளர் தோழர்.எம். ரவி வரவேற்புரை ஆற்றினார்.

**தொடக்கவுரை:**

மாநாட்டை தொடக்கி வைத்தும், அகில இந்திய மாநாட்டில் முன்வைக்கப்பட உள்ள அரசியல் வரைவு அறிக்கை குறித்து விளக்கமளித்தும் மாநாட்டை தொடக்கி வைத்து பொதுச் செயலாளர் தோழர்.டி.ராஜா உரை நிகழ்த்தினார்.

**அறிக்கைகள்:**

அரசியல் அறிக்கை, அமைப்புநிலை அறிக்கை, வேலை அறிக்கை ஆகிய மூன்று ஆவ ணங்கள் குறித்தும் பிரதி நிதிகள் விவாதத்திற்கு முன் மொழியப்பட்டன.

**தீர்மானங்கள்:**

தோழர்.டி.எம்.மூர்த்தி தலைமையிலான தீர்மானக்குழு தோழர்கள். கோ.பழனிசாமி, க.சந்தானம், நா.பெரியசாமி, எம்.ஆறுமுகம், க.மாரிமுத்து எம்.எல்.ஏ., எம்.ரவி, காசி விஸ்வநாதன், மு.கண்ணகி, பி.எஸ்.மாசிலாமணி ஆகிய தோழர்கள் தீர்மானங்களை தயாரித்து, அச்சிட்டு பிரதிநி திகள் அனைவருக்கும் வழங்கப்பட்டதுடன், நேரிடையாக எழுத்துபூர்வமாக கொடுக்கப்பட்டு தீர்மானக்குழுவால் பரிசிலித்து ஏற்கப்பட்டன. தீர்மானங்கள் சிறுநூலாக வெளிவரும்.

**சிறப்பு மாநாடு:**

மாநாட்டின் மற்றொரு பகுதியாக தொடக்க நாளான ஆகஸ்ட் 6ம் நாள் மாலை 6 மணிக்கு சமூக நல்லிணக்கப் பாதுகாப்பு, மாநில உரிமைகள் மீட்பு எழுச்சி மாநாடு மூத்த தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு தலைமையில் நடைபெற்றது. வரவேற்புக்குழு தலைவர் தோழர் கே.சுப்பராயன் எம்.பி., வரவேற்புரை நிகழ்த்த, திமுக தலைவர் தமிழ்நாடு மாநில முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் உடல்நிலைக் காரணமாக நேரில் வர இயலவில்லை என்றாலும் காணொலி காட்சி வாயிலாக வரலாற்று சிறப்புமிக்க உரையாற்றினார். அவரது உரை ஜனசக்தியில் முழுமையாக வந்துள்ளது.

குறிப்பாக இவ்வாண்டிற்கான தகைசால் தமிழர் விருது நமது மூத்த தலைவர் தோழர்.இரா.நல்லகண்ணு அவர்களுக்கு வழங்கப்படும் மேலும் நமது கோரிக்கை யினை ஏற்று சிவகங்கை மாவட்டம் சிராவயலில், அண்ணல் காந்தியடிகள் பேராசான் ஜீவாவை சந்தித்ததை நினைவு கூர்ந்து மணிமண்டபம் அமைத்திடப்படும் என்று அறி வித்ததும் நமது கூட்டணி தேர்தல் கூட்டணியல்ல கொள்கை கூட்டணி என்று அறிவித்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் நமது தோழமை கட்சி தலைவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி, திராவிடக் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் தோழர்.கே. பாலகிருஷ்ணன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் திரு.வைகோ எம்.பி. (08.08.2022 மாநாட்டில் உரையாற்றினார்), விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தோழர்.தொல்.திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்ல, கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ.விடுதலை) மாநிலச் செயலாளர் எம்.கே.நடராஜன், புதுச்சேரி மாநிலச் செயலாளர் அ.மு.சலீம் ஆகியோர் சிறப்புரை ஆற்றிட பொதுச் செயலாளர் தோழர்.டி.ராஜா நிறைவுரை ஆற்றினார்.



நிகழ்ச்சியில் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் தோழர். சி.மகேந்திரன், துணைச் செயலாளர் தோழர்.மு. வீரபாண்டியன், பொருளாளர் தோழர்.எம்.ஆறுமுகம் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் வெள்ளகோவில் சி.பெ. சாமிநாதன், கயல்விழி செல்வராசு, வணக்கத்திற்குரிய மேயர் தினேஷ்குமார், க.செல்வராசு எம்.எல்.ஏ., வணக்கத்திற்குரிய துணை மேயர் பி.பாலசுப்பரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். வரவேற்புக்குழு செயலாளர் தோழர். எம்.ரவி நன்றி கூற முதல் நாள் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

## இரண்டாம் நாள் - 07.08.2022

காலை சரியாக 10 மணிக்கு தொடங்கியது. முன்வைக்கப்பட்ட மூன்று அறிக்கைகள் மீதும் விவாதத்தில் பங்கு பெற 77 தோழர்கள் மாவட் டங்களின் சார்பாகவும், வர்க்க வெகுஜன அமைப் புகள் மற்றும் நேரடி கிளைகளின் சார்பிலும் பெயர் கொடுத்திருந்தனர்.

அனைத்து தோழர்களுக்கும் தங்களின் கருத் துக்களை சுதந்திரமாக எடுத்துக் கூற வாய்ப்ப ளிக்கப்பட்டது.

இன்று நாள் முழுவதும் விவாதங்கள் நடைபெற்றன.

மாநாட்டை வாழ்த்தி தேசிய தலைவர்கள் பினாய் விஸ்வம், ஆனிராஜா ஆகியோர் பேசினர்.

தீர்மானங்களும் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

இவைகளுடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

## மூன்றாம் நாள் - 08.08.2022

விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்று, நிறைவடைந்த நிலையில், தோழர்கள்.மு.வீரபாண்டியன், கே.சுப்பராயன், இரா.முத்தரசன் ஆகியோர் விவாதங்களுக்கு விளக்கமளித்து தொகுப்புரை வழங்கினார்கள். தொகுப்புரைக்குப் பின்னர் மூன்று அறிக்கைகளுக்கும் பிரதிநிதி தோழர்கள் தங்களின் கரங்களை உயர்த்தி ஆதரவு தெரிவித்தனர், எதிர்ப்பு இன்றி, நடுநிலை இன்றி அறிக்கைகள் ஒரு மனதாக ஏற்கப்பட்டது.

**கட்டுப்பாட்டுக்குழு**

தோழர்கள்.எம்.வையாபுரி (தலைவர்), கோ.பாண்டியன், வி.பி.குணசேகரன், எஸ்.மணிவேல், ஜி.காளியப்பன், தஞ்சை ஜி.கிருஷ்ணன் ஆகிய தோழர்களைக் கொண்ட கட்டுப்பாட்டுக்குழுவின் சார்பில் அதன் தலைவர் தோழர்.எம்.வையாபுரி முன்வைத்த கட்டுப்பாட்டுக்குழு அறிக்கையை மாநாடு ஏற்றுக் கொண்டது.

**தணிக்கைக்குழு**

கடந்த 24வது மாநாட்டிற்குப் பின்னர் கடந்த 2022 ஜூலை 31 வரையிலான மாநில கட்சியின் வரவு, செலவு கணக்குகளை தோழர்கள்.எம்.ரவி, வீ.ஞானசேகரன், பரமசிவம் ஆகிய மூவர் கொண்ட தணிக்கைக்குழு ஆய்வு செய்து, அதன் அறிக்கையை குழுவின் தலைவர் தோழர்.எம்.ரவி முன்மொழிய மாநாடு ஒரு மனதாக ஏற்று அங்கீகரித்ததுடன் மூன்றாம் நாள் மாநாடு நிறைவு பெற்றது.

## நான்காம் நாள் - 09.08.2022

மாநாடு தொடங்குவதற்கு முன்பாக, அரங்க முகப்பில் பொதுச் செயலாளர் தோழர்.டி.ராஜா தேசியக் கொடியை ஏற்றுவித்தார்.

குழுமியிருந்த பிரதிநிதி தோழர்கள்
சுதந்திரத்தை பாதுகாப்போம்!
சோசலிசம் இங்கமைப்போம்!
பாசிசத்தை முறியடிப்போம்!

என விண்ணதிர முழங்க தேசியக் கொடி பட்டொலி வீசிப் பறந்தது.

ஆகஸ்ட் 9 முதல் 15 முடிய சுதந்திர தின விழாவை தமிழ்நாடு முழுவதும் கொண்டாடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டின் நிறைவு நாளான நான்காம் நாள் விடைபெறும் மாநிலக்குழு சார்பில் மாநிலக்குழு உறுப்பினர்களுக்கான பட்டியல் முன்வைக்கப்பட்டு 101

தொடர்ச்சி 16ம் பக்கம் >>

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 20.08.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57






15ம் பக்கத் தொடர்ச்சி >>

உறுப்பினர்களைக் கொண்ட புதிய மாநிலக்குழுவை மாநாடு தேர்வு செய்தது. (பட்டியல் ஜனசக்தியில் சென்ற வாரம் வெளியிடப்பட்டுள்ளது)

**கட்டுப்பாட்டுக்குழு**

கீழ்க்கண்ட தோழர்களைக் கொண்ட புதிய கட்டுப்பாட்டுக்குழு ஒரு மனதாக தேர்வு செய்தது.

1. கே.சுப்பராயன் எம்.பி.,
2. கோ.பழனிசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ.,
3. எம்.வையாபுரி,
4. கோ.பாண்டியன்
5. வீ.ஞானசேகரன்
6. பா.காளிதாஸ்
7. டி.மணிவாசகம்

கட்டுப்பாட்டுக்குழு கூடி தோழர்.கே.சுப்பராயன் எம்.பி.யை தலைவராக ஒரு மனதாக தேர்வு செய்தது.

**அகில இந்திய மாநாட்டு பிரதிநிதிகள்**

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் நடைபெற உள்ள அகில இந்திய 24வது மாநாட்டில் பங்கேற்க 100 பிரதிநிதி தோழர்களையும், 10 மாற்று பிரதிநிதிகளையும் மாநாடு ஒரு மனதாக தேர்வு செய்தது. (பெயர் பட்டியல் ஜனசக்தியில் தனியாக இடம் பெற்றுள்ளதை காண்க)

**தகுதி ஆய்வுக்குழு அறிக்கை**

தோழர்.எஸ்.காசி விஸ்வநாதன் தலைமையில் தோழர்கள் உ.மா.செல்வராசு, பீட்டர் துரைராஜ், ஜி.முரளி, பாஸ்கர் உள்ளிட்ட தோழர்கள் மாநாட்டில் பங்கு பெற்ற பிரதி நிதிகள் மாற்று பிரதிநிதிகள் மாநிலக்குழு உறுப்பினர்கள் பூர்த்தி செய்து கொடுத்திட்ட ஆய்வு படிவங்களை ஆய்வு செய்து மாநாட்டில் ஆய்வறிக்கை அளித்தனர். (அறிக்கை முழுவதும் ஜனசக்தியில் வெளியிடப்படும்)

**மாநிலச் செயலாளர் தேர்வு**

புதிய மாநிலக்குழு கூட்டம் மூத்த தோழர்.இரா. நல்லகண்ணு முன்னிலையில் தோழர்.கோ.பழனிசாமி தலைமையில் நடைபெற்றது.

தோழர்.மு.வீரபாண்டியன் முன்மொழிய தோழர்.எம். செல்வராசு வழிமொழிய தோழர்.இரா.முத்தரசன் மாநிலச் செயலாளராக ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டார்.

**மறியல் போராட்டம்**

போராட்ட களம் கண்ட கம்யூனிஸ்ட் கட்சி, தனது முதல் கூட்டத்திலேயே விலைவாசி உயர்விற்கு எதிராக வரும் ஆகஸ்ட் 30ஆம் நாள் மாநிலம் முழுவதும் மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்தது.

**நிறைவுரை**

நிறைவுரைக்கு முன்னதாக தேசியச் செயலாளர் தோழர். அமர்ஜித்கௌவுர் மாநாட்டை வாழ்த்தி உரையாற்றிட, நிறைவாக பொதுச் செயலாளர் தோழர்.டி.ராஜா நிறைவுரை ஆற்றிட, வரவேற்பு குழு செயலாளர் தோழர்.எம்.ரவி நன்றி கூற, தலைமைக்குழுவின் தலைவர் தோழர் கோ.பழனிசாமி நன்றி கூறி மாநாட்டை முடித்து வைக்க பிரதிநிதி தோழர்கள் அனைவரும் ஒரு சேர எழுந்து நின்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்க, மாநாடு எடுத்த முடிவுகளை நிறைவேற்றுவோம் என ஒரு சேர விண்ணதிர குரல் எழுப்ப நான்கு நாள் மாநாடு வெற்றிகரமாக நிறைவடைந்து, அனைத்து தோழர்களும் பேரணி தொடங்குமிடம் நோக்கி சென்றனர்.

**காண கண் கோடி வேண்டும்**

ஆகஸ்ட் திங்கள் ஒன்பதாம் நாள், வெள்ளையனே வெளியேறு என்று 1942ல் முழக்கமிட்ட அதே ஒன்பதாம் நாள்

மக்கள் விரோத மோடி ஆட்சியே வெளியேறு!
ஜனநாயக விரோத மோடி ஆட்சியே வெளியேறு!
சர்வாதிகார மோடி ஆட்சியே வெளியேறு!
பாசிச மோடி ஆட்சியே வெளியேறு!
என புறப்பட்ட இடத்திலிருந்து முழக்கமிட்டு,
திருப்பூரை நோக்கி வாருங்கள்!
குடும்பத்துடன் வாருங்கள்!
மனைவி, மக்கள், பேரக் குழந்தைகளோடு வாருங்கள்!
வருகின்ற அனைவரும் செஞ்சட்டை அணிந்து வாருங்கள்!
சிவப்புச் சேலை அணிந்து வாருங்கள்!
கொடிகாத்த குமரன் நகருக்கு
அலை, அலையாய் அலைகடலென
அணிதிரண்டு வாருங்கள்!

என நமது மாநிலக்குழு விடுத்திட்ட அன்பான அழைப்பை ஏற்று, மாநிலம் முழுவதிலுமிருந்து புற்றிசல் போல் புறப்பட்ட செம்படை பெரும்படையாக திருப்பூர் நகருக்குள் ஆகஸ்ட் 9ம் நாள் அதிகாலையே வரத் தொடங்கி விட்டது.

பேரணி தொடங்குமிடமான சக்தி திரையரங்கம் அருகில் கட்டுக்கடங்கா பெருங்கூட்டம், ஆனால் கட்டுப்பாடு மிக்க கூட்டம்.

அனைத்து தோழர்களும் செஞ்சட்டையோடு அனைத்து தாய்மார்களும் சகோதரிகளும் சிவப்புச் சேலையோடு.

எங்கெங்கு காணினும் சிவப்பு, சிவப்பு திருப்பூர் நகருக்குள் செங்கடல் புகுந்து விட்டதோ என நகரத்து மக்கள் வியந்து போற்றுகின்றனர்.

சீருடை அணிந்த மக்கள் தொண்டரணியின் மாபெரும் அணிவகுப்பு தளபதி எம்.லகுமைய்யா தலைமையில் வீறுநடை போட்டு அணிவகுத்து செல்கின்றது.

இராணுவ நடை போட்டு கம்பீரமாய் செல்கின்றது. ஒவ்வொரு படைக்கும் தளபதிகள் தலைமை தாங்கி அணிவகுத்து செல்கின்றனர்.

## இளம் தளபதிகள் மட்டுமல்ல, சிறார்களும், சிறுமிகளும் கூட தலைமை தாங்கி படையை வழிநடத்தி சென்ற காட்சி மெய்சிலிர்க்க வைத்தது,.

அணிவகுப்பை பொதுச் செயலாளர் டி.ராஜா, தேசியச் செயலாளர்கள் அமர்ஜித் கௌவுர், டாக்டர் நாராயணா பார்வையிட்டு, சல்யூட் அடித்து ஏற்றுக் கொண்டனர்.

மக்கள் தொண்டரணியின் அணிவகுப்பை தொடர்ந்து சீருடை அணிந்த இளம் பெண்கள் அணிவகுத்துச் செல்ல,

மாவட்ட வாரியாக மக்கள் காட்டாற்று வெள்ளமென திரண்டு வந்தனர். எவரும் மது அருந்தவில்லை, திருப்பூர் டாஸ்மாக் கடைகளில் வழக்கமான வியாபாரம் தான்.

அனைவரின் கரங்களிலும் புத்தம் புது செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன.

பேரணி தொடங்கி பிரம்மாண்டமான பொதுக் கூட்ட திடலை அடைந்தபோதும், பேரணி வந்து கொண்டே இருக்கின்றது. முடிவில்லாமல் சாரை, சாரையாக கொள்கை உறுதிமிக்க கூட்டம் வந்த வண்ணம் உள்ளது.

பேரணியில் தப்பாட்டம் கரகாட்டம் சிலம்பாட்டம் என களை கட்டி வருகின்றது.

பேரணி தொடங்கிய இடம் முதல் பொதுக் கூட்ட மைதானம் வரை சாலையின் இரு புறங்களிலும் பல்லா யிரக்கணக்கான பொதுமக்கள் வாழ்த்துக்கூறிய வண்ணம் உள்ளனர். சாலையோரம் மட்டுமல்ல தங்களின் வீட்டு மாடிகளில் ஆண்களும் பெண்களும், குழந்தைகளுமாக, குடும்பம் குடும்பமாக நின்று பெரும்படையின் அணிவகுப்பைக் கண்டு மகிழ்கின்றனர்.

பொதுக் கூட்ட மைதானத்தில் போடப்பட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாற்காலிகள் அனைத்தும் நிரம்பி விட்டன. மக்கள் மைதானத்தைச் சுற்றிலும் நிற்க இடமின்றி நெரிசலில் தலைவர்கள் உரை கேட்க ஆர்வம் காட்டுகின்றனர். வரவேற்புக் குழு தலைவர் கே.சுப்பராயன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், அகில இந்திய மாநில தலைவர்கள் உரையாற்றிட பொதுக் கூட்டம் நிறைவு பெற்றது.

கட்டுக்கடங்கா கூட்டம்தான். ஆனால் கட்டுப்பாடான கூட்டம் எத்தகைய சிறு அசம்பாவிதங்கள் கூட இல்லாமல் நடைபெற்று செங்கொடி இயக்கத்தின் பெருமையை அதன் கட்டுப்பாட்டை மீண்டும் நிலைநாட்டியது. இயக்கத்தில் உள்ள நம் அனைவருக்கும் பெருமையிலும் பெருமை அல்லவா?

ஒரு நாளேடு ஐந்து மணி நேரம் என்றும் மற்றொரு நாளேடு நான்கு மணி நேரம் பேரணி நடைபெற்றது என்றும் செய்தி வெளியிட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

பொதுக்கூட்ட திடலை அடைந்திட பல கிலோ மீட்டர் தூரம் ஆனாலும் சலிப்பின்றி, களைப்பின்றி கம்பீரமாய் அணிவகுத்து சென்றதை காண கண் கோடி வேண்டும்.

**ஒரு அரைவேக்காடு சொன்னது,**

"கம்யூனிஸ்ட்டுகள் இருந்தார்கள், தற்போது சுவடு கூட இல்லை"

அவ்வாறு கூறிய அரைவேக்காடே திருப்பூரில் திரண்ட கூட்டத்தை கண்டாயா? அல்லது கேட்டுத்தான் அறிந்தாயா? அறிய முயற்சிப்பாயா?

எங்கள் கூட்டம் யாருடைய வார்ப்பு தெரியுமா?
தேடிச் சோறுநிதந் தின்று – பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்
வாடித் துன்பமிக உழன்று – பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி – கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் – பல
வேடிக்கை மனிதரைப் போலே – நான்
வீழ்வே னன்றுநினைத் தாயோ?

என மகாகவி பாரதி எழுப்பிய கவி முழக்கத்தின் செயல்வடிவம் எங்கள் கூட்டம். ஒருபோதும் வீழமாட்டோம். எழுந்தே நிற்போம். முன்னிலும் உயர்ந்து, வளர்ந்து நிற்போம். வகுப்புவாத, மதவெறி சக்திகளை முறியடித்து இறுதி வெற்றியை உலகுக்கு அறிவிப்போம்.

மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய பிரதிநிதி தோழர்கள் அனைவருக்கும் தங்கும் இடவசதி, நான்கு நாட்களுக்கும், சுவையூட்டும் அருஞ்சுவை விருந்து உபசரிப்பு, ஆவணங்களை பாதுகாப்பாக பத்திரமாக வைத்துக் கொள்ள தனி பை, அதனுடனுடன் வெளியூர்ப் பயணங்களுக்கு பயன்படுத்திட நல்லதரமான, உறுதியான பேக் வழங்கப்பட்டது. திருப்பூர் தோழர்களுக்கு பாராட்டு வாழ்த்துக்கள். பங்கேற்ற பிரதிநிதிகள், மாற்றுப் பிரதி நிதிகள், மாநிலக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

செங்கடலாய் அணிவகுத்திட்ட சீருடை அணிந்த மக்கள் தொண்டர் அணிக்கு, இளம் பெண்களுக்கு, தாய்மார்களுக்கு, இளம் தோழர்களுக்கு, மாணவர்களுக்கு, தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு, கலை, இலக்கிய தோழர்களுக்கு ஒட்டுமொத்தமாக அனைவருக்கும் வாழ்த்துக்கள் பாராட்டுக்கள்.

மாநில 25வது மாநாடு முத்திரை பதித்திட்ட மாநாடு. வாழ்நாளில் என்றும் மறக்க முடியாத, மறுக்க முடியாத வரலாறு படைத்திட்ட வரலாற்று சிறப்புமிக்க மாநாடு.

ஒன்றுபட்டு ஓரணியாய் முயற்சி எடுத்தால் எதனையும் சாதிக்கலாம் என்பதற்கான, எடுத்துக்காட்டு மாநாடு!

மாநாட்டை வெற்றியாக்கிய நாம் மாநாடு நிறைவேற்றிய அரசியல் தீர்மானத்தை வெற்றி பெறச் செய்திட,

அமைப்பை பலப்படுத்திட அதன் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி வெற்றி பெறச் செய்திட,

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்குமான தீர்மானங்களை ஒன்றிய, மாநில அரசுகள் நிறைவேற்றிட அதற்கான இடைவிடா தொடர் இயக்கங்களை மேற்கொள்ள போராட, வெற்றிகாண ஒன்றுபட்டு உழைப்போம் வெற்றிதனைப் பெறுவோம்!

மீண்டும் சந்திப்போம், வணக்கம்.

தோழமைமிக்க,

இரா.முத்தரசன்

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.